# குமரி மாவட்ட இசுலாமியர் நம்பிக்கைகளும் தர்காக்களும்

முனைவர் பிரீடா மேபல் ராணி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# குமரி மாவட்ட இசுலாமியர் நம்பிக்கைகளும் தர்காக்களும்

முனைவர் பிரீடா மேபல் ராணி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

*சீதக்காதி அறக்கட்டளைச் சொற்பொழிவு*
*(அறக்கட்டளை நிறுவியோர் : சீதக்காதி அறக்கட்டளைக் குழுவினர்)*
வரிசை எண் : 5

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Kumari māvaṭṭa isulāmiyar nampikkaikaḷum tarkākkaḷum |
| Author | : | Dr. Freeda Mabel Rani<br>Department of Tamil<br>Vellamodi Udaya Arts and Science College<br>Kanyakumari - 629 259 |
| General Editor | : | Dr. T. Mahalakshmi<br>Associate Professor<br>Department of Tamil Literature and Manuscriptology<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 660 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | viii + 112 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 55/- (Rupees Fifty Five Only) |
| Printed by | : | United Bind Graphics<br>95 (43), Millers Road, Kipauk<br>Chennai - 600 010 |
| Subject | : | Islam in Kanyakumari District |

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

## அணிந்துரை

இந்தியத் திருநாடு வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட நாடு ஆகும். இத்திருநாட்டில்

- பல மொழிகள் பேசுவோர்
- பல சமயங்களைப் பின்பற்றுவோர்
- பல இனமக்கள்

உள்ளனர். இந்நாட்டின் வரலாற்றில் பிறநாட்டினர் படையெடுத்து வந்து ஆட்சி புரிந்துள்ளனர் என்பது தெரியவரும். பிறநாட்டவர் வந்து தம் மொழிகள், சமயங்கள், கலைகள் போன்றவற்றைப் பரப்பியுள்ளனர்.

இந்நிலையில் வந்தாரை வாழவைக்கும் தமிழ் மண்ணிலும் மேலே சுட்டிய நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன. அதிலும் தமிழகத்தின் தென்கோடியான குமரிமாவட்டத்தில் பல சமயங்களைப் பின்பற்றுவோர் பண்டுதொட்டே வாழ்ந்து வருகின்றனர்.

குமாரிமாவட்ட வர்லாறு

குமரி மாவட்டத்தில் இசுலாமியர் வரலாறு

குமரி மாவட்ட இசுலாமியரின் பழக்கவழக்கங்கள்

குமரிமாவட்ட இசுலாமியரின் தர்காக்கள்

போன்ற வரலாற்றுப் பண்பாட்டுச் செய்திகளைக் களப்பணி மூலம் இந்நூலாசிரியர் மிகச் சிறப்பாகச் செய்துள்ளார்.

நாட்டார் நம்பிக்கைகள் பண்பாட்டின் முக்கியக் கூறுகளாக அமைகின்றன. மக்களின் வெவ்வேறு செயல்களில் அறிந்தோ அறியாமலோ நம்பிக்கைகள் வெளிப்படுகின்றன. நம்பிக்கைகளைச் செயல்வடிவிலான வெளிப்பாடுகளின் மூலம் தான் உணர்ந்துகொள்ள இயலும். ஆனால், அச்செயல்பாட்டிற்கான காரணங்கள் மனித மனங்களில் உறைந்திருக்கும். இச்செயல்பாடுகள் வாய்மொழியாகவோ, நடத்தை சார்ந்தோ வெளிப்படும். இவற்றைத் தொகுத்து முறையான ஆய்விற்கு உட்படுத்துவதின் மூலம் குறிப்பிட்ட நம்பிக்கைகள் புழங்கும் மக்களின் பண்பாட்டினை உணர்ந்து கொள்ள இயலும். கள ஆய்வின் போது குமரி மாவட்ட இசுலாமிய மக்கள் பல்வேறு நம்பிக்கைகளின் நடுவில் வாழ்ந்து கொண்டிருப்பதை உணர முடிந்தது. குமரி மாவட்ட இசுலாமிய மக்களின் நம்பிக்கைகளைத் தொகுத்து வகைப்படுத்தி முறையான ஆய்விற்கு உட்படுத்துவதின் மூலம், இவர்களின் சமூக மனதை உணர்ந்து கொள்ள இயலும். (ப.18)

*நம்பிக்கைகள் மற்றும் பண்பாடு பற்றிய ஆய்வு நெறிமுறையை வகுத்துக் கொண்டு களப்பணி மூலம் செய்திகளைத் திரட்டி வகைப்படுத்தி முடிவுகளை அறிவிக்கும் முறையான இந்த ஆய்வு பாராட்டத்தக்கது. நம்பிக்கைகளின் வகைகளாக :*

- *கண்ணேறு*
- *ஆவி*
- *மந்திரம்*
- *கர்ப்பிணி மருத்துவம்*
- *குழந்தை வளர்ப்பு*

*போன்றதான நம்பிக்கைகள் விரிவாகச் சான்றுகளுடன் ஆராயப்பெற்றுள்ளன.*

கண்ணேறு கழித்தலை ஐரோப்பியப் பண்பாட்டில் காணவியலாவிடினும், ஆசியப்பண்பாட்டில் ஏதோ ஒரு வகையில் எல்லாச் சமூகத்தினரிடமும் உள்ளது. ஆனால்,

> இந்தியப் பண்பாட்டில் தான் அதிக அளவில் இடம்பெறுகின்றது. குமரி மாவட்ட இசுலாமியர் வாழ்வில் வாழ்க்கை வட்டச்சடங்குகளில் இது தவறாது இடம்பெறுகிறது. ஒரு முட்டையைச் சுன்னத் சடங்கின்போது சுன்னத் செய்யவிருக்கும் சிறுவனது தலையைச் சுற்றி எறிவர். இது அவனைக் கண்ணேறுவிருந்து பாதுகாப்பதற்காக நிகழ்த்தப்படுகிறது. கர்ப்பிணிப்பெண், குழந்தைப் பேற்றிற்காகத் தாய்வீட்டிற்கு வரும்போது தாய்வீட்டின் படியை மிதித்தவுடன் திருஷ்டி சுற்றும் சடங்கு நிகழ்த்தப்படுகிறது. இச்சடங்கு ஷாபி, ஹனபி என்னும் இருவர் சடங்கிலும் தவறாது இடம் பெறுகிறது. (ப.22)

இந்நூலின் பின்னிணைப்பாகக் குமரிமாவட்டத்தில் இடம்பெற்றுள்ள சில தர்காக்களின் படங்கள் இணைக்கப் பெற்றுள்ளன. இந்நிறுவனத்தில் சீதக்காதி அறக்கட்டளையை நிறுவிய குழுவினரை வாழ்த்துகிறேன். நூலாசிரியருக்கு எனது பாராட்டுகள்

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது..

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம், செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், இந்நூலை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் மற்றும் எழுத்துருவை இந்நிறுவனத்தில் ஒளிவடிவமைப்புச் செய்த திருமதி பி.கௌசல்யா ஆகியோருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

**இயக்குநர்**

## ஆசிரியரைப்பற்றி



திருமதி பிரீடா மேபல் ராணி குமரி மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கேரளப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும் ஆய்வுப் பட்டமும் பெற்றவர். நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகளை முன் வைத்துள்ளார். கிறித்தவராக இருந்தாலும் இசுலாமியர் வாழ்வியலைக் குறித்துப் பல ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளார். வெள்ளமோடி உதயா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறையில் பணி புரிந்து வருகிறார்.

# உள்ளே

1. முன்னுரை 1

2. வரலாற்று நோக்கில்
குமரி மாவட்ட இசுலாமியர் 3

3. இசுலாமியர் நம்பிக்கைகள் 18

4. இசுலாமியர் தர்காக்கள் 46

5. துணை நூல் பட்டியல் 77

6. முடிவுரை 88

## பின்னிணைப்பு

1. மாவட்ட வரைபடமும்
இசுலாமியர் குடியிருப்புகளும் 94

2. தர்கா புகைப்படங்கள்

3. குறி கேட்கும் நிகழ்வு

4. ஓதி கட்டும் நிகழ்வு

5. தர்கா பட்டியல்

6. தர்கா பாடல்கள்

# முன்னுரை

என் முனைவர் பட்ட ஆய்வின்போது இசுலாமிய மக்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக்கிடைத்தது. அவர்களுள் ஒருவராகவே என்னை ஏற்றுக்கொண்டனர். வாழ்வில் மறக்க முடியாத தோழிகளைப் பெற்றுக்கொண்டேன். இப்பிணைப்பு இன்றும் தொடர்கிறது.

குமரி மாவட்டத்தில் சமயக் கலவரங்கள் அவ்வப்போது நிகழ்வதுண்டு. ஆனால் இசுலாமியர்களுக்கும் மற்றொரு சமயத்தைச் சார்ந்தவருக்கும் இடையில் ஒருபோதும் மோதல் நிகழ்ந்ததில்லை. இசுலாமியர் கைவினைச் செய்யும் ஆசாரி சாதிகளைச் சேர்ந்தவர்களை மாமா உறவு கொண்டு அழைப்பர். அவர்கள் இடும் கட்டளைகளைப் புன்முறுவலோடு நிறைவேற்றுவர். பலமுறை என்னால் இதனைக் காண முடிந்தது.

இசுலாமியர் கடல் கடந்து வணிகம் செய்பவராகவும், ஆசாரி கப்பல் கட்டுபவராகவும் இயங்கிய காலக்கட்டத்தில் இவ்வுறவு தோற்றம் கொண்டிருக்க வேண்டும்.

அண்டை மாநிலமான கேரளத்தில் அவ்வப்போது சமயக்கலவரங்கள் நிகழ்வதுண்டு. இசுலாமியர் அதில் பெரும்பங்கு வகிப்பர். ஆனால் குமரி மாவட்டத்தில் இப்போக்கு அறவே இல்லை. இதற்கான காரணங்களைக் குறித்து ஆராய முற்பட்டபோதுதான் இசுலாமியர் நம்பிக்கைகளின்மீது கவனம் பதிந்தது.

சமய மாற்றத்திற்குப்பின் பழைய நம்பிக்கைகளை அவர்கள் துறக்கவில்லை. மாறாகப் புதிய நம்பிக்கைகளைச் சேர்த்துக் கொண்டுள்ளனர். இதன் உச்சம் தர்கா வழிபாட்டில் வெளிப்படுகிறது. இசுலாமியர் வாழ்வில் தர்கா பெரும்பங்கு வகிக்கின்றது. தர்காவைச் சூழ்ந்தே குடியிருப்புகள் அமைகின்றன. அபூர்வமாக ஒருசில இடங்களில்தான் குடியிருப்புகள் இல்லை. ஒரு காலத்தில் குடியிருப்புகள் இருந்து மக்கள் குடிபெயர்ந்திருக்க வேண்டும். வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் தர்காவில் உறையும் புனிதரை நினைவு கொள்கின்றனர்.

தர்காவைக் குறித்து எண்ணற்ற கதைகள் உள்ளன. இக்கதைகளே நம்பிக்கைகளை நிலைநிறுத்துகின்றன. தர்காவின் தோற்றம் குறித்து அச்சிடப்பட்ட கையேடு பெரும்பாலான தர்காக்களில் உண்டு. ஆனால் மக்கள் வாய்மொழியில் முற்றிலும் வேறான கதைகள் உள்ளன. ஒரு நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளராக இவற்றைத் தொகுத்துத் தர்காவின் தோற்றத்திற்கான காரணங்களைக் கண்டறிய முடிந்தது. தர்காவின் மீதான நம்பிக்கை இசுலாமியர்களுக்கு மட்டுமல்ல வேற்று மதத்தினரும் நம்பிகைக்கொண்டுள்ளனர். தர்காவில் கைகள் இணைகின்றன. சமய மோதலின்மைக்கு இதுவும் ஒரு காரணம்.

எனக்குச் சீதக்காதி அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்த வாய்ப்பளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு என்றும் கடமைப்பட்டுள்ளேன். என் ஆய்வுகளுக்கு ஊக்கம்தந்து உறுதுணையாக நிற்கும் உதயா கலை அறிவியல் நிர்வாகத்திற்கு நன்றி.

# வரலாற்று நோக்கில் குமரி மாவட்ட இசுலாமியர்

இசுலாமியர் என்னும் சொல் இசுலாம் மதத்தைத் தழுவிய மக்களைக் குறிப்பிடுகிறது. இந்தியத் துணைக்கண்டம் முழுமையிலும் இசுலாமியர்கள் பரவலாக வாழ்கின்றனர். சமயம் ஒன்றாக இருப்பினும், இசுலாமியர்கள் இந்தியத் துணைக்கண்டத்து ஏனைய மக்களைப் போலவே பல்வேறு மொழி பேசுபவர்களாகவும், பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டவர்களாகவும் அமைகின்றனர். சமயம், அனைத்து மொழி பேசும் இசுலாமியர்களுக்கிடையே ஓர் ஒற்றுமையைத் தோற்றுவித்தாலும் இசுலாமியர்களுக்குள்ளேயும் வேறுபட்ட இனக்குழு அடிப்படையிலான பண்பாட்டு வேறுபாடுக்ளையும் இனங்காண முடியும்.

கன்னியாகுமரி மாவட்டம் இந்தியாவின் தென்கோடி மாவட்டம். இந்தியத் துணைக்கண்டத்துப் பெரும் சமயங்கள் அனைத்தையும் இம்மாவட்டத்தில் இனங்காண முடியும். சமண சமயம் இன்று இல்லாவிடினும், இம்மாவட்டத்தில் வளமான பழைமையைக் கொண்டிருந்தது. இப்பழைமையை வரலாறு உணர்த்தத் தவறவில்லை. சமகால வாழ்வில் அதன் எச்சங்களையும் இம்மக்கள் வாழ்வில் இனங்காண முடியும்.

பெரும் சமயங்களைப் போலவே சிறுதெய்வ வழிபாடும் இம்மாவட்டத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இசுலாம், கிறித்தவம் போன்ற சமயங்களைப் பிற்காலச் சமயங்களாகக் குறிப்பிட வேண்டும். இச்சமயத்தைச் சார்ந்த மக்கள் பெரும்பான்மையினரும், புதிய மதத்திற்குப் பழம் சமயம் ஒன்றிலிருந்து மதமாற்றம் மூலம் வந்தடைந்தவர்களாகவே அமைவர். இந்தியத் துணைக்கண்டத்து ஏனைய மக்களைப் போலவே இம்மாவட்டத்து மக்களும் பல்வேறு இனக் குழுக்களைச் சார்ந்தவர்களாகவே அமைகின்றனர். இவர்கள் பண்பாட்டைக் காலம் காலமாகத் தொடர்ந்துவரும் இனக்குழு மரபுகள் தீர்மானிக்கின்றன. இனக்குழுக்களைப் போலவே, சமயங்களும்

பண்பாட்டின் மீது செல்வாக்கினைச் செலுத்துகின்றன. இனக்குழுக் கூறுகளும் சமயக் கூறுகளும் பண்பாட்டில் இரண்டறக் கலந்துள்ளன.

## ஆய்வுக் களம்

கன்னியாகுமரி மாவட்டம் 1956 நவம்பர் மாதம் கேரள மாநிலத்திலிருந்த தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த பகுதிகளைப் பிரித்து உருவாக்கப்பட்ட தமிழ் நாட்டின் ஒரு மாவட்டமாகும். வடக்கு, கிழக்கில், திருநெல்வேலி மாவட்டமும், தென்மேற்கில் மன்னார் வளைகுடா, இந்தியப் பெருங்கடல் ஆகியனவும் மேற்கு, வடமேற்குத் திசைகளில் கேரள மாநிலமும் இம்மாவட்டத்தின் எல்லைகளாக அமைந்துள்ளன. 1684 சதுர கிலோ மீட்டர் பரப்புடைய இம்மாவட்டத்தில் 48423 ஹெக்டேர் நெருங்கிய காடுகளாக அமைந்துள்ளன. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 16,69,753 மக்கள் இம்மாவட்டத்தில் வாழ்கின்றனர். இவர்களுள் 8,29,542 பேர் ஆண்கள், பெண்கள் 8,40,221 பேர்.

இம்மாவட்டம் நீண்ட மலைத் தொடர்களையும் நீண்ட கடற்கரைகளையும் உள்ளடக்கியதாகும். மகேந்திரகிரிமலை, இம்மாவட்ட மலைகளுள் உயரமானது. 68 கிலோ மீட்டர் நீண்ட கடற்கரையைக் கொண்ட இம்மாவட்டக் கடற்கரையில் 38 மீனவக் கிராமங்கள் அமைந்துள்ளன.

## இயற்கை வளங்கள்

உயர்ந்த மலைகளையும் அடர்ந்த காடுகளையும் கொண்ட மாவட்டம் குமரி மாவட்டம். மருந்துவாழ் மலை, வேளிமலை என்ற இரண்டு மலைகளையும் தவிர, ஏனைய மலைகள் அனைத்தும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பகுதிகளாக அமைகின்றன. ஆண்டொன்றுக்குச் சராசரியாக 1469.7 மி.மீ. மழை இம்மாவட்டத்தில் பெய்வதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. தென்மேற்கு, வடகிழக்கு என்னும் இரு பருவக்காற்றுகளாலும் இம்மாவட்டம் மழை பெறுகின்றது. தாமிரபரணியாறு, பழையாறு, வள்ளியாறு, முல்லையாறு, பூவாறு என்னும் ஆறுகள் இம்மாவட்டத்தை வளப்படுத்துகின்றன. ஆறுகளில் அணைக்கட்டுகளும் அமைந்துள்ளன. மாவட்டத்தில் மிகப் பெரிய அணையான பேச்சிப்பாறை அணை 1902–இல் கட்டப்பட்டது. இரண்டாவது பெரிய அணையான பெருஞ்சாணி அணை 1953–இல் கட்டப்பட்டது. 2593 குளங்கள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்றுள்ளன. அணைக்கட்டுகளும் குளங்களும் நிலத்தை

வளமுடையதாக்குகின்றன. இம்மாவட்டத்தில் பசுமைமாறாக் காடுகளில் 600 வகை முக்கியத் தாவரங்களும் 3500 வகை பிற தாவரங்களும் வளர்கின்றன. சிறுத்தை, கரடி, புலி உட்படப் பல்வகை உயிரினங்களும் வாழ்கின்றன.

## வரலாற்றில் குமரி மாவட்டம்

சங்க இலக்கியங்களில் "ஆய் மன்னர்கள் இம்மாவட்டத்தின் சில பகுதிகளை ஆட்சி புரிந்ததாகக் குறிப்பிடப்படுகிறது".[1]

ஆய் மன்னர்கள் வேளிர் குலத்தைச் சார்ந்தவர்கள். கி.பி. 925–இல் இப்பகுதியை ஆண்ட விக்ரமாதித்ய வரகுணனின் செப்புப் பட்டயம் யாதவ வம்சமான விருஷ்ணி குலத்தை ஆய் வம்சத்தோடு இணைக்கிறது.[2]

நீலகண்ட சாஸ்திரி, ஆய் மன்னர்களை வட நாட்டைச் சார்ந்த எதுகுல சத்திரியர்களாக இனங்காண்கின்றார்.[3]

ஸ்ரீதரமேனன், ஆய் மன்னர்களைச் சேர, சோழ, பாண்டியர்களைப்போல் திராவிட மரபினர் என்கிறார்.[4]

தாலமி, பிளைனி என்னும் வெளிநாட்டுப் பயணிகளின் பயணக்குறிப்புகளும், ஆய் நாட்டைக் குறிப்பிடுகின்றன. தாலமி கன்னியாகுமரியிலிருந்து பெட்டிகோ மலைவரை ஆய் நாடு பரவியிருந்தது என்கிறார். பெட்டிகோ மலை என்பது பொதிகை மலையைக் குறிக்கலாம்.

ஆய் மன்னர்களின் தலைநகரம் ஆய்க்குடி என்று பொதுவாகக் கூறுகின்றனர். இந்த ஆய்க்குடி செங்கோட்டை அருகில் உள்ள ஆய்க்குடியே என்கிறார் நீலகண்ட சாஸ்திரி. இது நாகர்கோவிலின் ஒரு பகுதியாக உள்ள இராயக்குடி (இடலாக்குடி) என்ற கருத்தும் உள்ளது[5] என அ.கா. பெருமாள் குறிப்பிடுவதை இங்குச் சுட்ட வேண்டும்.

ஆய் அண்டிரன், திதியன், அதியன் என்னும் மூவரையும் சங்கப் பாடல்களில் வரும் ஆய் மன்னர்களாகக் குறிப்பிட வேண்டும். குட்டுவன் கீரன், முடமோசியார் போன்ற புலவர்கள் ஆய் மன்னர்களைப் பாடியுள்ளனர். ஒருசிறைப் பெரியனார், மருதன் இளநாகனார், கருவூர் கதப்பிள்ளை, ஔவையார் ஆகிய புலவர்கள் பாடிய நாஞ்சில் பொருநன் ஆய் மன்னர்களுள் ஒருவனே எனக் கனகசபைப் பிள்ளை குறிப்பிடுகிறார்.

கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகளில் ஆய் மன்னர்களை அவர்கள் வென்ற குறிப்பு

வருகின்றது. 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஆய் மன்னர்களான சடையன், கருநந்தன், கோக்கருந்தடக்கன், விக்கிரமாதித்ய வரகுணன் ஆகிய நான்கு மன்னர்களின் கல்வெட்டுகளை இப்பகுதியில் காண முடிகிறது. 10ஆம் நூற்றாண்டு வரை ஆய் மன்னர்களுடைய கல்வெட்டுகளைத் தொடர்ச்சியாகக் காணமுடிகிறது. பிற்காலச் சோழர்களுடனான போரில் இவர்கள் ஆட்சி உரிமையை இழந்திருக்கலாம். பின் வேணாட்டு அரச மரபுடன் கலந்திருக்க வேண்டும்.

> கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இவர்கள் திருப்பாப்பூரில் இருந்து கொண்டு திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோயிலின் நிர்வாகிகளாக மட்டும் இருந்தனர். அதோடு இக்காலங்களில் வேணாட்டு அரச வம்சத்துடன் இவர்கள் கலந்து விட்டனர்.[6]

கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்கும், 10ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலக்கட்டங்களில் செழியன் சேந்தன், அரிகேசரி மாறவர்மன், கோச்சடையன் ரணதீரன், இராசசிம்மன், ஜடில பராந்தகன், ஸ்ரீ மாறன், ஸ்ரீ வல்லபன், வீர நாராயணன், சடையன் ஆகிய பாண்டிய மன்னர்கள் ஆய் நாட்டின்மீது படையெடுத்தவர்களாகவும், இதன் பகுதிகளை ஆண்டவர்களாகவும் இப்பகுதிக் கல்வெட்டுகள் குறிக்கின்றன. கி.பி.10 ஆம் நூற்றாண்டிற்கும், 13 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலக்கட்டத்தில் முதலாம் இராச இராசன், முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதி இராசன், வீர இராசேந்திரன், முதலாம் குலோத்துங்க சோழன், மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆகிய பிற்காலச் சோழ மன்னர்கள் ஆய் நாட்டின்மீது படையெடுத்தவர்களாகக் கல்வெட்டுகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

கி.பி.12ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் வேணாட்டின்கீழ் இப்பகுதி இருந்ததற்கான சான்றுகளைக் கல்வெட்டுகளில் காண முடிகிறது. கி.பி. 800இலிருந்து 1101–வரை இரண்டாம் சேர அரசு மகோதயபுரத்திலிருந்து கேரளப்பகுதியை ஆட்சி புரிந்தது. கி.பி. 917–944 ஆட்சி புரிந்த கோதைராமவர்மன் ஆய் நாட்டின்மீது படையெடுத்தான். இம்மன்னன் சோழர்களுக்கெதிராகப் பாண்டியர்களுக்குப் படை கொடுத்து உதவினான். வேணாடு கொல்லம் முதல் திருவனந்தபுரம் வரையுள்ள பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது. தொடக்கத்தில் இவர்கள் குறுநில மன்னர்களாகவோ, ஆளுநர்களாகவோ இருந்திருக்க வேண்டும். இம்மரபில் முதல் அரசனாக ஆய் அண்டிரனைக் குறிப்பிட வேண்டும்.

இவனையடுத்து ஸ்ரீ வல்லபன்கோதை, கோவர்தன மார்த்தாண்டன் என்னும் இரு மன்னர்களைக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. இராமவர்ம குலசேகரன் காலத்திலிருந்து வேணாடு தனி நாடானது.

இவன் இம்மாவட்டத்தைச் சார்ந்த இரணியலைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன். இராமவர்ம குலசேகரனின் வாரிசாகக் கோதைவர்மா அறியப்படுகிறான். இவன் இம்மாவட்டத்தைத் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டிருந்ததாகச் சான்றுகள் கிடைக்கின்றன. கோதை கேரள வர்மனின் (1125–1155) கல்வெட்டுகள் சுசீந்திரம், தெங்கன்புதூர் ஆகிய இடங்களிலிருந்து கிடைத்துள்ளன. எனவே இவன் காலக்கட்டத்தில் நாஞ்சில் நாடு உள்ளடக்கிய குமரி மாவட்டம் முழுமையாக இவன் ஆட்சியின் கீழ் இருந்திருக்க வேண்டும். வீர கேரள வர்மாவின் (1151–1164) கல்வெட்டுகள் இப்பகுதியில் காணக்கிடக்கின்றன. இவனைத் தொடர்ந்து ஆதித்திய வர்மா, உதயமார்த்தாண்ட வர்மா ஆகிய இரு மன்னர்களைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. உதய மார்த்தாண்ட வர்மா பாண்டியனோடு மண உறவு கொண்டவன். வீர வர்மாவின் (1195–1205) கல்வெட்டுகள் குமரி மாவட்டத்தில் நாஞ்சில் நாடு இவன்கீழ் இருந்ததைக் குறிப்பிடுகின்றன.

இரவிகேரள வர்மன் (1215–1240) என்னும் மன்னன் பெயரைச் சுசீந்திரம் கோவில் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. தொடர்ந்து வேணாட்டு மன்னர்களின் கல்வெட்டுகளைக்காண இயலவில்லை. இரவிவர்ம குலசேகரன் (1299–1314) என்னும் மன்னனோடு வேணாட்டின் மக்கள்வழிப் பரம்பரை முடிவிற்கு வந்துவிட்டது என வரலாற்றாசிரியர்கள் குறிக்கின்றனர்.

தொடர்ந்து மருமக்கள்வழிப் பரம்பரையைச் சார்ந்த மன்னர்களைக் கல்வெட்டுகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. இரவி வர்ம குலசேகரன் காலக்கட்டத்தில் மாலிக்கபூரின் தென்நாட்டுப் படையெடுப்புகள் நடந்தன. மருமக்கள்வழிப் பரம்பரையின் முதல் மன்னனாக வீர மார்த்தாண்டவர்மா குறிப்பிடப்படுகிறார். இவன் காலத்தில் முசுலீம் படையெடுப்புகள் நடந்ததற்கான சான்றுகள் கிடைக்கின்றன. தொடர்ந்து இரவிவர்மா காலக்கட்டத்தில் முசுலீம் படையெடுப்புகள் நிகழ்ந்துள்ளன. குமரி மாவட்டப் பகுதிகளை அப்படை கொள்ளை அடித்தும் சென்றுள்ளது. இரவிவர்மனுக்குப்பின் மலையாளச் சிற்றிலக்கியங்கள் குறிப்பிடும் வரகுண சர்வாங்க நாதன் வேணாட்டு மன்னனாக ஆண்டுள்ளான். சேர உதய மார்த்தாண்ட வர்மா என்னும்

வேணாட்டு மன்னர் களக்காட்டு அரசனாக அறியப்படுகின்றார். வேணாட்டு மன்னர்களைக் குறித்த தெளிவான அறிவு இவனுக்குப்பின் கிடைத்திராததைக் குறிப்பிட வேண்டும்.

இரவி ரவிவர்மன் (1484–1512) என்னும் வேணாட்டு மன்னன் போர்த்துகீசியர்களை வணிகம் செய்ய அனுமதியளித்துள்ளான். ஜயசிம்ம கேரளவர்மனின் (1512–1516) கோட்டாறு கல்வெட்டு பட்டாரியர் சாதியினருக்குச் சமய சுதந்திரத்தையும் பொதுக் கிணறு குளங்களைப் பயன்படுத்தும் உரிமையையும் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. பூதல வீரஸ்ரீ உதயமார்த்தாண்டவர்மா (1516–1535) சமணசமயத்தவர்களை ஆதரித்ததாகக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவன் காலத்தில் விசயநகரப் படையெடுப்பு நடந்தது. பூதல வீரராம வர்மா (1535) ஆதித்யவர்மா (1544) ஆகிய இரு வேணாட்டு மன்னர்களை வரலாற்றில் இனங்காண முடிகிறது.

புனித சேவியர் இக்காலக்கட்டத்தில் குமரி மாவட்டத்திற்கு வந்து பரதவர்களைக் கிறித்தவர்களாக மதம் மாற்றம் செய்தார். வீரகேரளவர்மா (1545) இராமவர்மா (1609) மன்னர்கள் காலக்கட்டத்தில் அடிமை முறை இருந்ததற்கான வரலாற்றுக் குறிப்புகளை எதிர்கொள்ள முடிகிறது. தொடர்ந்து இரவிவர்மா (1611), இரவிவர்மா (1663), ஆதித்தியவர்மா (1672) ஆகிய மன்னர்களின் பெயர்களைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவர்கள் காலத்தில் கோவில் சபையினர் அரசியலைக் கட்டுப்படுத்தினர். வேணாட்டின் இறுதி மூன்று மன்னர்களாக உமையம்மா ராணி (1677–1684), இரவிவர்மா (1684–1718), ஆதித்திய வர்மா (1718–1721) ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். உமையம்மா ராணின் காலக் கட்டத்தில் முகலாயப்படை குமரிமாவட்டத்தைக் கொள்ளையடித்தது.

1729இலிருந்து திருவிதாங்கூர் அரசப் பரம்பரையினர் குமரி மாவட்டத்தை ஆட்சி புரிந்தனர். திருவிதாங்கூரின் சிறப்பு வாய்ந்த மன்னனாக மார்த்தாண்ட வர்மாவைக் குறிப்பிட வேண்டும். இவர் தான் நாட்டை விரிவுபடுத்தி நிலையான ஆட்சியைத் தோற்றுவித்தார். இவர் காலத்தில் கோவில் நிர்வாகிகளான யோகக்காரர் களுக்கும், நிலத்தின் குத்தகைக்காரர்களுக்கும் மோதல்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. இவருடைய மாமனாரான ராமவர்மாவின் மகன்களான வலியதம்பி, குஞ்சுதம்பி ஆகிய இருவரும் கோவில் நிர்வாகப் பொறுப்பில் இருந்தனர். தம்பிகளுக்கும் மார்த்தாண்ட வர்மாவிற்கும் மோதல்கள் ஏற்பட்டு உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டது. மார்த்தாண்ட வர்மா கலகங்களை அடக்கி நிலையான ஆட்சியைத் தோற்றுவித்தார்.

மார்த்தாண்ட வர்மாவிற்குப்பின் தர்மராஜா முதற்கொண்டு சித்திரைத் திருநாள் ஈறாகப் பதினொரு மன்னர்கள் திருவிதாங்கூரை ஆட்சி புரிந்துள்ளனர். இம்மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் திருவிதாங்கூர் நவீனக் காலக்கட்டத்தை வந்தடைந்தது.

மார்த்தாண்ட வர்மாவிற்கும் அவருக்குமுன் அரசராக ஆட்சிபுரிந்த மன்னரின் புதல்வர்களான பப்புத் தம்பி, இராமன் தம்பி ஆகியோருக்குமிடையே வாரிசுரிமை கலகம் ஏற்பட்டபோது, யோகக்காரர்களும், எட்டு வீட்டுப் பிள்ளைமார்களும் மார்த்தாண்ட–வர்மாவிற்கெதிராகச் செயல்பட்டுக் கலகங்களைத் தோற்றுவித்தனர்.

மார்த்தாண்ட வர்மா திருவிதாங்கூருக்கு வெளியிலிருந்து வரவழைக்கப்பட்ட கூலிப்படைகளின் உதவியோடு கலகங்களை அடக்கி, யோகக்காரர்களின் ஆதிக்க அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். 'டிலனாய்' என்னும் டச்சுக்காரரின் உதவியோடு நவீனக் காலத்திற்கேற்ற படையை உருவாக்கினார்.

இப்படையில் நாயர், நாடார், ஈழவர், பரதவர் சமூகத்தினர் இருந்தனர். டிலனாய் இப்படைக்கு முதல் கமாண்டர். இப்படை வீரர்களுக்குத் துப்பாக்கி, பீரங்கி போன்ற ஆயுதங்களை இயக்கக் கற்பித்தார்.[7]

கோட்டைகள் புதுப்பிக்கப்பட்டன. புதிய கோட்டைகளும் கட்டப்பட்டன.

திருவிதாங்கூர் அரசு இந்தியா விடுதலை பெறுவதுவரை தனி அரசாகவே திகழ்ந்தது என்றாலும், ஆங்கிலேயரின் மேற்பார்வைக்கு உட்பட்ட அரசாகத் திகழ்ந்தது. குமரி மாவட்டம் திருவிதாங்கூரின் பகுதியாக அமைந்தது. திருவிதாங்கூர் மன்னர்களின் பழைய தலைநகரம் இம்மாவட்டத்தின் மையத்தில் இருந்தது. எல்லா அரசியல் நிகழ்வுகளும் இம்மாவட்டத்தில்தான் நிகழ்ந்தன.

குமரி மாவட்ட இசுலாமிய மக்கள் தங்கள் சமயம் மிகப் பழங்காலம் தொட்டே இம்மண்ணில் நிலைகொண்டு விட்டதாக நம்பிக்கை கொண்டுள்ளனர். நபிகள்நாயகம் இசுலாம் சமயத்தைத் தோற்றுவித்து ஒரு நூற்றாண்டிற்குள்ளாகவே இசுலாம் சமயம் இம்மண்ணை வந்தடைந்து விட்டது என உரிமை கோருகின்றனர். "அண்ணல் நபி (ஸல்) இசுலாத்தைப் போதித்த சிறிது காலத்திலேயே இசுலாத்தின் தத்துவங்களை ஏற்றுக் கொண்ட புண்ணிய பூமியாகக்

குமரி மண் திகழ்கிறது".[7] இப்போக்கு, குமரி மாவட்டத்தில் மட்டுமல்லாது தமிழகம் முழுமையும் இனங் காணப்படுகிறது.

எப்பொழுது அரேபியாவிலிருந்து இசுலாம் தென்னகத்திற்கு வந்தது என்ற கேள்விக்குக் கிடைக்கின்ற பதில்கள் அனைத்தும் யூகத்தையும், அனுமானத்தையும் இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற வாதப்பிரதிவாதங்களையும் அடிப்படையாகக் கொண்டே கிடைக்கின்றன. இந்த அடிப்படைகளைச் சரித்திராசிரியர்களும், ஆய்வாளர்களும் தக்க ஆதாரங்கள் இன்றி, நிரூபணங்கள் இன்றி ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. வரலாற்று ஆதாரங்கள் குறித்த தேடலும் தொடர் நிகழ்வாக அமைகிறது. கி.பி.9 ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டில் இசுலாமியர்கள் குடியேறியதாக கி.பி.875-ஐச் சார்ந்த செப்பேடு ஒன்று குறிப்பிடுகிறது. "அபூஹாஸிமா பெட்டகம்" என்ற தொகுப்பு நூலில் இதன் எழுத்து வடிவத்தைத் தந்துள்ளார்.[8]

ஆனால், செப்பேட்டில் குறிப்பிடப்படும் 'ஜெய வீரு ராஜீக்காருநாயனி' என்னும் மன்னனின் பெயரே அவன் பாண்டியன் அல்லன் என்பதை உறுதிப்படுத்திவிடுகிறது. மிகவும் பிற்காலத்திய நாயக்க மன்னர்களின் பெயரை ஒத்ததாக இது அமைகிறது.

ஹமீது கி.பி 733-ஐச் சார்ந்ததான கல்வெட்டு ஒன்றைச் சுட்டி முகமது நபி மறைந்து 106ஆவது ஆண்டில் இசுலாம் திருச்சியில் இருந்தது என வரையறுக்கின்றார். இதை உறுதிப்படுத்துவதற்கு வேறு கல்வெட்டுகள் எதையும் அவரால் சுட்ட இயலவில்லை.

தென் இந்தியாவில் இசுலாம் சமயத்தின் பரவலை மூன்று காலக்கட்டங்களைச் சார்ந்ததாகக் குறிப்பிட வேண்டும். இசுலாம் சமயம் தோன்றுவதற்கு முன்பாகவே அரேபியர்கள் தென் இந்தியக் கடற்கரையில் வணிகத்தின் பொருட்டு வாழ்ந்திருக்க வேண்டும். தொல்காப்பியம் மரபியலில், "ஒட்டகத்தின் பிள்ளைப் பெயரைச்,"[9] சுட்டுகிறது. சங்க இலக்கியத்தில் இரண்டு பாடல்களில் ஒட்டகம் என்ற விலங்கு இடம் பெறுகிறது. ஒட்டகம் இயற்கையில் தென் இந்தியாவை வாழும் இடமாகக் கொண்டதல்ல. பாலைவனப் பகுதியை வாழும் இடமாகக் கொண்டது. அங்கிருந்து வந்த மனிதர்களால் ஒட்டகம் தமிழ் நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். ஒட்டகத்தைக் கொண்டு வந்த மனிதர்கள் தமிழகக் கடற்கரையில் குடியேறி வாழ்ந்திருக்க வேண்டும். கடற்கரையில் சிதைந்து கிடக்கும் தோணிக்கு ஒட்டகம் உவமையாக்குவதைக் குறிப்பிட வேண்டும். எனவே சங்ககாலக் கட்டத்திலேயே அரேபியர்கள் இந்தியத்

துணைக்கண்டத்தின் தென்பகுதிக்கு அறிமுகமானவர்களே. ஆனால், இக்காலக்கட்டத்தில் அரேபியாவில் இசுலாம் தோற்றம் கொண்டிருக்கவில்லை.

19 ஆம் நூற்றாண்டின் மத்தியில் திருவிதாங்கூரில் இசுலாம் சமயம் நிலை பெற்றுவிட்டது.

> திருவிதாங்கூரில் 1861 அளவில் 62639 முசுலீம் மக்கள் வாழ்ந்தனர். இவர்கள் துலுக்கர், மாப்பிள்ளை, மேத்தன் என அழைக்கப்பட்டனர். துலுக்கர் என்ற சொல் Turky என்பதிலிருந்து வந்தது. மாப்பிள்ளை என்பது அராபியர்கள் கேரளத்துப் பெண்களை மணந்ததன் காரணமாக வந்தது. மேத்தன் என்பது மெக்காவில் உள்ள ஆண் என்பதைக் குறிக்கும். திருவிதாங்கூரில் 1870 அளவில் 254 மசூதிகள் இருந்தன எனச் சாமுவேல் மேட்டீர் கூறுகிறார்.[10]

திருவிதாங்கூரில் இசுலாம் சமய மக்களின் தொகையும், அவர்களின் பள்ளிகளின் எண்ணிக்கையும் இசுலாம் சமயம் இம்மண்ணில் நன்றாக வேரூன்றிவிட்ட நிலையைக் குறிக்கின்றன. 'மாப்பிள்ளை' என்ற சொல், அரேபியர்களுக்கும் மேற்குக் கடற்கரையோர மக்களுக்கும் இடையே நடந்த இனக்கலப்பை உணர்த்துகின்றது. கேரளத்தில் இசுலாம் சமயத்தின் பழமையைச் சுட்டக் கூறப்படும் சேரமான் பெருமாளின் சமய மாற்றம் குறித்த கதை வரலாற்று அடிப்படையாகக் கொண்டதல்ல.

> நபிகள் நாயகம் இசுலாம் மார்க்கத்தை நிறுவிய காலக்கட்டத்தில் அராபியர்கள் இங்கே வந்தாலும், மன்னர் மாலிக் ஹபீப் அவர்களின் மகன் மாலிக் இப்னுதீனார் வந்த நிகழ்ச்சியிலிருந்து தென் கேரள இசுலாமிய வரலாறு ஆரம்பமாவதாகக் கொள்ளலாம். மாலிக், இப்னு தீனார் அவரது குடும்பத்துடனும் இசுலாம் மார்க்க அறிஞர்களுடனும் இரண்டு கப்பல்களில் கொடுங்கல்லூரில் வந்து இறங்கினார். இவர்கள் கொடுங்கல்லூரில் தங்கிய போது ஒரு பள்ளி வாசலைக் கட்டினர். கி.பி. 825இல் நடந்த நிகழ்ச்சி எனவே இந்தியாவில் கட்டப்பட்ட முதல் பள்ளிவாசல் இது.[11]

எனவே கி.பி. 825—ஐ இசுலாம் தென்னிந்திய மண்ணை வந்தடைந்த காலக்கட்டமாகக் குறிப்பிட வேண்டும். கொடுங்கல்லூரில் தங்கிய குழுவினைச் சாந்த மாலிக்முகமது திருவிதாங்கூர் மண்ணை வந்தடைந்தபோது இசுலாம் இம்மண்ணை வந்தடைந்திருக்க வேண்டும். கி.பி. 16ஆம் நூற்றாண்டில் இசுலாம் மன்னர்களின் படையெடுப்பு நிகழ்ந்த காலத்தில் இசுலாம் சமயம் பரவலாக்கப்பட்டிருக்க வேண்டும். 1792ஐச் சார்ந்த திவான் வெற்றி என்னும் கதைப்பாடல் திப்புசுல்தான் படையெடுப்பின்போது நிகழ்ந்த மதமாற்றத்தையும் அதன் சூழலையும் குறிப்பிடுகிறது. குமரி மாவட்டத்தைச் சார்ந்த பல பள்ளிகள் 300 முதல் 700 ஆண்டு வரையிலான பழமையைக் கொண்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கி.பி. 19ஆம் நூற்றாண்டில் இசுலாம் சமயத்தவரின் மக்கள் தொகை பெருமளவு அதிகரித்திருப்பதன் காரணம் புதிய மதமாற்றம் இக்காலக்கட்டத்தில் நிகழ்ந்திருப்பதை உறுதிப்படுத்துகிறது.

சாதிக் கொடுமையிலிருந்து விடுபடுவதற்காகத் தாங்களாகவே இச்சமயத்தை ஏற்றுக் கொண்டவர்களும் உண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏராளமான மீனவர்களும், பிற தாழ்ந்த சாதியினரும் இசுலாமிய சமயத்திற்கு மாறினர்.[12]

ஐ.வி.பீட்டர், பீட்டர் ஆகியோர் மீனவர்களும் தாழ்த்தப்பட்ட சாதியினரும் இசுலாம் சமயத்திற்குப் பெருமளவு மதம் மாறியதைப் பதிவு செய்துள்ளனர். உயர் சாதியினர் இசுலாம் சமயத்திற்கு மதம் மாறியப் பதிவுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, இம்மாவட்டத்தில் இசுலாம் சமயத்தின் தோற்றம், மற்றும் வளர்ச்சிக்காக வேறுபட்ட காரணங்கள் சுட்டப்பட்டாலும் திருவிதாங்கூரின் சாதி அமைப்பு முக்கியக் காரணமாக அமைகிறது என்பதை ஏற்கத்தான் வேண்டும்.

## இசுலாம் சமய மக்களின் வாழ்க்கை நிலை

சமகாலத்தில் இசுலாமிய சமயத்தைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கை 1.5 இலட்சத்திற்கும் அதிகம். குமரி மாவட்ட மக்கள் தொகையில் 5 விழுக்காட்டினைச் சார்ந்தவர்களை இசுலாம் சமயத்தைச் சார்ந்தவர்களாகக் குறிப்பிட வேண்டும். இவர்களுக்கே உரிய தனித்த தொழில் ஒன்றைச் சுட்ட இயலாது. "இசுலாமியர் கடுமையான உழைப்பில் நம்பிக்கை கொண்டவர்கள். இவர்களில் பெரும்பான்மையோர் வாணிபத்தில் ஈடுபட்டுப் பெரும் பொருளீட்டினர்".[13] சாதி அமைப்பில்

வணிகம் அனைத்துச் சாதியினருக்கும் உரித்தானது. இசுலாமிய மக்களும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். இச்சமூகத்தைச் சார்ந்த சிலர் பெரும் வணிகத்தில் ஈடுபட்டிருந்தாலும், மிகப் பெரும்பான்மையோர் சிறுவணிகர்களாகவே உள்ளனர். வணிகத்தில் ஈடுபட்டுள்ள பிற இனத்தவர்களோடு ஒப்பிடும் போது, இசுலாமிய வணிகர்கள் எண்ணிக்கையில் மட்டுமல்ல முதலீட்டிலும் குறைவாகவே உள்ளனர்.

இசுலாமிய சமயத்தின் ஒரு பகுதியினர் கைத்தொழில் செய்பவர்களாக உள்ளனர். பாய் முடைதல், நெசவு போன்ற தொழில்கள் இன்று இவர்களுக்கே உரித்தானவையாக அமைகின்றன. பாய் பயன்படுத்துவோர் எண்ணிக்கை நாகரிக வளர்ச்சியில் வேகமாகக் குறைவதின் காரணமாக இவர்கள் வாழ்க்கை நிலை போராட்டத்திற்கு உரியதாக அமைகிறது. துணி நெசவு இசுலாமிய மக்களின் கைத்தொழிலாக இருந்த காலமும் உண்டு. ஆனால் இன்று, இம்மக்கள் இத்தொழிலிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். நெசவு ஒரு சமூகமாக ஒருங்கிணைந்து செய்ய வேண்டிய தொழில். நெசவுத் தொழில் செய்யும் வேறுபட்ட குழுக்களுக்கிடையே பரிந்துணர்வு இருந்தாக வேண்டும். இசுலாமிய மக்கள் சமய அடிப்படையில் தனித்தியங்கியது இத்தொழிலைக் கைவிட்டதற்குக் காரணமாகலாம்.

அண்டை மாவட்டமான திருநெல்வேலியிலும் இம்மக்கள் நெசவுத் தொழில் செய்து வந்தவர்களாக இருந்துள்ளனர்.

இம்மக்களின் பிரதான தொழில் நெசவுத் தொழிலாக இருந்து வந்தது. பலதரப்பட்ட மக்கள் இசுலாத்தை ஏற்றுக்கொண்டு தொடர்ந்து தங்கள் தொழிலைச் செய்து வந்தனர். இங்குள்ள மக்கள், "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற தமிழ் முதுமொழிக் கேற்ப, கடல் வாணிபம் செய்து வந்தனர். துணி வியாபாரம் குறிப்பாக, சாரம், துண்டு போன்றவற்றை நெய்து வந்தனர். இரண்டாம் உலகப்போர் இவர்களது பர்மா வாணிபத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. குண்டு வீச்சிற்குப்பயந்து சொத்துக்களை விட்டு விட்டுக் கால்நடையாகவே இந்திய மண்ணிற்கு வந்து சேர்ந்தனர்.[14]

திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டாம் உலகப்போரின் போது சிங்கப்பூர், பர்மா நாடுகளுடனான வணிகம் தடைப்பட்டபோது முசுலீம் மக்களின் நெசவுத்தொழிலில் பெரும் பின்னடைவு ஏற்பட்டதாகச் சாந்தி பதிவு செய்துள்ளார். "அக்காலக்கட்டத்தில் சிறப்புற்றிருந்த நெசவுத் தொழிலும் விசைத்தறி வருகை, நூல் விலையேற்றத்தால் நலிவுறத் தொடங்கியது. சந்தையும் அடைபடவே நெசவுத்தொழில் முற்றிலுமாக

நசிந்தது".[15] விடுதலைக்குப்பின் நெசவுத்தொழிலில் ஏற்பட்ட பின்னடைவுகளைச் சரி செய்யக் கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன. கூட்டுறவு விற்பனை மையங்களும் தோற்றம் கொண்டன. ஆனால், கூட்டுறவு இயக்கம் முசுலீம் இன மக்களிடம் வேரூன்றவில்லை. தங்களுக்குத் தெரிந்த கைத்தொழிலை இம்மக்கள் இழக்கும் நிலை ஏற்பட்டது. இதனால் வணிகம் ஒன்றையே சார்ந்திருக்க வேண்டிய கட்டாயமும் தோற்றம் கொண்டது.

மத்திய கிழக்கு நாடுகளில் எரிபொருள் கண்டுபிடிக்கப்பட்டுப் பொருளாதார வளர்ச்சி தோற்றம் கொண்டபோது, இம்மக்கள் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பினைப் பெறும் கனவை வளர்த்துக் கொண்டனர். இரண்டாம் உலகப்போருக்கு முன் கிழக்கிந்தியத் தீவுகளில் வணிகர்களாகச் சென்றவர்களைப் போல் அரேபிய நாடுகளுக்கு வேலையாட்களாகச் செல்லத் துவங்கினர். கைத்தொழிலில் நேரிட்ட பின்னடைவை ஓரளவு இது ஈடுசெய்தது. எனினும், முழுமையான தீர்வாக அமையவில்லை. முசுலீம் இன மக்கள் விவசாயம் உட்பட, உடல் உழைப்பைச் சார்ந்த தொழிலை இம்மாவட்டத்தில் ஒரு போதும் மேற்கொண்டிருக்கவில்லை. கேரளக் கடற்கரைகளில் கடல் தொழில் செய்பவர்களாக உள்ளனர். திருநெல்வேலியில் பீடி சுற்றும் தொழிலைக் குடும்பம் முழுமைக்குமான தொழிலாக மேற்கொள்கின்றனர். இம்மாவட்டத்தில் பாய் முடைதல் மட்டுமே சிறுபான்மையாகக் குடும்பம் முழுமைக்குமான தொழிலாக அமைகிறது. பெரும்பான்மையான முசுலீம் பெண்கள் தொழில் அற்றவர்களாகவே வாழ்கின்றனர். இந்நிலை சமூக வாழ்வில் அவர்களின் பின்னடைவிற்குக் காரணமாக அமைகின்றது.

## பொருளாதார நிலை

ஒரு சமூகத்தின் பொருளாதாரம் சமூக உறுப்பினர்களின் வேலை வாய்ப்பினைப் பொறுத்தே அமைகிறது. முசுலீம் இன மக்களில் மிகச் சிறுபான்மையினரே பெரும் வணிகர்களாக உள்ளனர். இவர்களுடைய பொருளாதாரநிலை குறிப்பிடும்படியாய் அமைந்துள்ளது. சிறு வணிகர்களாக உள்ள பெரும்பான்மையோர் வாழ்க்கைச் செலவிற்கான பொருளை மட்டுமே ஈட்டுபவர்களாக இருக்கின்றனர். எதிர்காலச் சேமிப்போ, வேறு வகையிலான முதலீடுகளோ இவர்களுக்கில்லை. இவர்களுடைய எதிர்காலம் பாதுகாப்பற்றதாகவே உள்ளது. அரேபிய நாடுகளில் வேலை செய்பவர்களின் குடும்பப் பொருளாதாரநிலை குறிப்பிடும்படியாக அமைந்துள்ளது. ஆனால், ஒரு

தனிமனிதன் பெரும்சுற்றத்தைப் பாதுகாப்பவனாக வாழும் படியான கட்டாயம் உள்ளது.

முசுலீம் இனமக்கள் தங்கள் முதலீடுகளை வீடு கட்டுவதிலும் வாகனங்களை வாங்குவதிலுமே பெருமளவு செலவிடுகின்றனர். ஒருவகையில் சமய நம்பிக்கை இதற்குக் காரணமாக அமைகிறது. வெளியில் காணமுடிகிற இந்த ஆடம்பர வாழ்வு அவர்கள் பொருளாதாரநிலையைக் குறிப்பதல்ல. பொருளாதாரத்தில் பின்னடைந்த சமுதாயமாகவே இச்சமூகம் உள்ளது.

### கல்வி

முசுலீம் சமூகத்தில் நடுத்தர வயதினரும் முதியோர்களும் பெரும்பான்மையும் கல்வியறிவு அற்றவர்களாகவே உள்ளனர். அடிப்படைக் கல்வியைக் கற்றிருந்தாலும் வேலை தேடும் அளவிற்குக் கல்வியை அவர்கள் பெற்றிருக்கவில்லை. அரசு ஊழியர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. பெரும்பான்மையும் ஆசிரியர்கள் இவர்களிடம் இல்லை என்றே கூறலாம். இந்நிலையில் பெரும் மாறுதல் அண்மைக் காலத்தில் நிகழ்ந்துள்ளது. கல்வி கற்பதில் முனைப்புக் கொண்டுள்ளனர். பெண்களையும் உயர்கல்வி கற்க அனுமதிக்கின்றனர். பெண்கள் அரசு ஊழியர்களாக வேலை செய்வதிலும் இப்போது தடையில்லை. அரேபிய நாடுகளில் வேலை செய்பவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஆங்கில வழிக் கல்வியைக் கற்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்றனர். இம்மக்களின் எதிர்காலம் கல்வியில் இவர்கள் பெறும் முன்னேற்றத்தையே சார்ந்துள்ளது.

### பெண்கள் நிலை

இசுலாமிய சமயம் பெண்களுக்கு சமவுரிமை வழங்கினாலும், சமூக வாழ்வில் பெண்கள் இரண்டாம் தர குடிமக்களாகவே வாழ்கின்றனர். மிக அண்மைக் காலம் வரை வயது வந்ததும் பெண்கள் கல்வி நிலையங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. வயது வந்த ஓரிரு ஆண்டுகளில் திருமண வாழ்விற்குத் தள்ளப்படுகின்றனர். நடுத்தர வயதுக்குள்ளாக, பல குழந்தைகளுக்குத் தாயாகி விடுகின்றனர். முதுமையும் அடைந்து விடுகின்றனர். கணவர்கள் பெரும்பாலும் வணிகர்களாக இருப்பதினால், குடும்பப் பொறுப்பு முழுவதும் பெண்களுடையது. பெண்கள் பர்தா அணியும் பழக்கம் அண்மைக்காலத்தில் தோற்றம் கண்டது. அரேபிய நாடுகளுக்குச் சென்று வந்தவர்களே இப்பழக்கத்தைத் தோற்றுவித்தனர். அதற்கு முன் முசுலீம்

பெண்கள் அவர்களுக்கே உரிய முறையில் ஆடை அணிந்திருந்தனர். கிறித்தவப் பெண்களைப் போலவே தலையில் முக்காடு போடும் பழக்கமும் இருந்து வந்தது. பர்தா அணியும் பழக்கம் உலக அளவில் முசுலீம் மக்களின் ஒருங்கிணைப்பைக் குறிக்கின்றது. சமகாலத்தில் இனஅடையாளத்தை விடச் சமய அடையாளத்திற்கு முக்கியத்துவம் தருவதை இது உணர்த்துகிறது.

### உட்பிரிவு

குமரி மாவட்ட முசுலீம் மக்களிடையே ஷாபி, ஹனபி என்னும் இருபிரிவைச் சார்ந்தவர்கள் உள்ளனர். சமய வாழ்வில் இப்பிரிவினர்களிடையே பெரும் வேற்றுமை இல்லை எனினும், வாழ்வில் தனித்தனி அடையாளங்களைத் தக்கவைத்துள்ளனர். "மேலப்பாளையத்தில் ஷாபி, ஹனபி என்னும் இரு பிரிவைச் சேர்ந்த முஸ்லீம்கள் வாழ்ந்து வருகின்றனர். இவ்விரு பிரிவுகளுக்கும் பெரிய வேற்றுமை இல்லை". சாந்தியின் இப்பதிவு குறிப்பிடத்தக்கது. குமரி மாவட்டத்தில் இருபிரிவினரும் சேர்ந்தே வாழ்கின்றனர். பள்ளிவாசல்களும் பொதுவானவையே. ஆனால், ஆடை அணிகலன்களில், சடங்குகளில், தங்களுக்கேயுரிய தனித்தன்மையைக் கொண்டுள்ளனர். ஹனபிப் பிரிவைச் சேர்ந்த பெண்கள் கருகமணி பாசியைத் தாலியாக அணிகின்றனர். ஷாபிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் இப்பழக்கத்தை மேற்கொள்வதில்லை. இந்த அடையாளத்தைக் கொண்டு இவர்களை எளிமையாக வேறுபடுத்தி இனங்காண முடியும். ஹனபிப் பிரிவைச் சார்ந்தவர்கள், ஷாபிப் பிரிவைச் சார்ந்தவர்களைவிட, பிற சமூகத்தினருடன் உறவு கொள்ள ஆர்வம் கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

### மொழி

ஷாபி, ஹனபி இரு பிரிவுகளுமே புழங்கு மொழியாகத் தமிழையே கொண்டுள்ளனர். ஆனால், ஹனபி இன மக்கள் வீட்டில் உருது மொழியையும் பயன்படுத்துகின்றனர். அவர்களுடைய பேச்சு மொழியில் உருதுச்சொற்கள் கலந்துள்ளன. குடும்ப உறுப்பினர்கள் தங்களுக்குள் உருது மொழியில் உரையாடுவதுண்டு. ஷாபி இன மக்கள் மொழி அறிவில் மேன்மையடைந்தவர்களாக உள்ளனர். இவர்களிடையே இலக்கியப் புலமை உடையவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். தற்போதும் உள்ளனர். இசுலாமியத் தமிழ் இலக்கிய மரபு வளமானது. தமிழறிவுக் கொண்டவர்களிடம் இம்மக்கள் பெரும் மரியாதை கொண்டுள்ளனர்.

**சமய அமைப்பு**

சமயமே இம்மக்களை ஒருங்கிணைக்கிறது. வேறுபட்ட சாதியிலிருந்து மதமாற்றத்தின் மூலம் முசுலீம் சமயத்திற்கு வந்திருந்தாலும் சாதி வேற்றுமை இவர்களிடையே அறவே இல்லை. புதிய சமயத்தில் சாதி அடையாளங்களை முழுமையாகத் துறந்துள்ளனர். கிறித்தவ இனமக்கள் மதம் மாறினாலும் சாதி அடையாளத்தைத் தக்கவைத்துக் கொள்வது இங்குக் குறிப்பிடத்தக்கது. 'ஜமாத்' சமூக வாழ்வில் இவர்களைக் கட்டுப்படுத்தும் அமைப்பாக உள்ளது. ஜமாத்தின் அனுமதியுடனே திருமணம் செய்ய முடியும். சமூகப் பொதுச்சொத்துக்களையும் ஜமாத் கட்டுப்படுத்துகின்றது. சமூக உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஜமாத்திற்குக் கட்டுப்பட வேண்டும்.

## குறிப்புகள்

1. புறநானூற்றில் பரணர், நல்லூர் நத்தத்தனார், பெருஞ்சித்திரனார் முதலியோர் ஆய் மன்னர்களைப் பாடியுள்ளனர்.
2. அ.கா. பெருமாள், தென்குமரியின் கதை, ப. 33.
3. மேலது.
4. மேலது.
5. மேலது, ப. 34.
6. மேலது, ப. 39.
7. அபூ ஹாஷிமா, பெட்டகம், ப. 13.
8. மேலது, ப.
9. தொல்காப்பியம் மரபியல் சூத்திரம்.
10. அ.கா. பெருமாள், மு.கூ.நூ., ப. 18.
11. மேலது, ப. 273 – 274.
12. ஐ.வி. பீட்டர், பீட்டர், மு.கூ.நூ., ப. 7–8.
13. மேலது, ப. 8.
14. ப. சாந்தி, மேலப்பாளையம் முஸ்லீம்கள், ப. 22.
15. மேலது, ப. 23.

# இசுலாமியர் நம்பிக்கைகள்

நாட்டார் நம்பிக்கைகள் பண்பாட்டின் முக்கியக் கூறுகளாக அமைகின்றன. மக்களின் வெவ்வேறு செயல்களில் அறிந்தோ அறியாமலோ நம்பிக்கைகள் வெளிப்படுகின்றன. நம்பிக்கைகளைச் செயல்வடிவிலான வெளிப்பாடுகளின் மூலம் தான் உணர்ந்துகொள்ள இயலும். ஆனால், அச்செயல்பாட்டிற்கான காரணங்கள் மனித மனங்களில் உறைந்திருக்கும். இச்செயல்பாடுகள் வாய்மொழியாகவோ, நடத்தை சார்ந்தோ வெளிப்படும். இவற்றைத் தொகுத்து முறையான ஆய்விற்கு உட்படுத்துவதின் மூலம் குறிப்பிட்ட நம்பிக்கைகள் புழங்கும் மக்களின் பண்பாட்டினை உணர்ந்து கொள்ள இயலும். கள ஆய்வின் போது குமரி மாவட்ட இசுலாமிய மக்கள் பல்வேறு நம்பிக்கைகளின் நடுவில் வாழ்ந்து கொண்டிருப்பதை உணர முடிந்தது. குமரி மாவட்ட இசுலாமிய மக்களின் நம்பிக்கைகளைத் தொகுத்து வகைப்படுத்தி முறையான ஆய்விற்கு உட்படுத்துவதின் மூலம், இவர்களின் சமூக மனதை உணர்ந்து கொள்ள இயலும்.

## நம்பிக்கைகள்

நம்பிக்கைகள் அவற்றைக் கடைப்பிடிக்கும் மக்களால் விவாதங்களுக்கு இடமின்றி உண்மையென நம்பிக் கடைப்பிடிக்கப் படுகின்றன. சமூக மனம் பகுத்தறிவிற்குட்பட்டு நம்பிக்கைகளில் உண்மைகளை இனங்காண்பதில்லை. மாறாக, நம்பிக்கைகளை உணர்வு அடிப்படையில் அது உண்மையாக ஏற்றுக்கொள்கிறது.

> சிலவற்றை மறுக்க முடியாத உண்மை என்று கருதி ஏற்றுக் கொள்வதே நம்பிக்கை என்று வரையறுக்கலாம். ஒன்றை உண்மை என்று நம்புவதில் இரு கூறுகள் அடங்கியுள்ளன. அதாவது அறிவுப் பூர்வமான ஒரு கூறும், உணர்ச்சிப்பூர்வமான மற்றொரு கூறும் நம்பிக்கையினுள் அடங்கியுள்ளன.[1]

'உணர்ச்சிப்பூர்வமான கூறே' நம்பிக்கைகளைத் தீர்மானிக்கிறது. வெளியிலிருந்து பார்க்கும் பார்வையில் சில நம்பிக்கைகளைப் பொய்யான நம்பிக்கைகளாக இனங்காண முடிந்தாலும், நம்பிக்கைகளைப் புழங்கும் மக்கள் அவற்றை உண்மைகளாக உணர்ந்தே வாழ்வில் கடைப்பிடிக்கின்றனர். எந்த அளவிற்கு நம்பிக்கைகளை உண்மைகளாகக் கொள்கின்றனர் எனச் சோதித்தறியவும் இயலாது. எனவே, நம்பிக்கைகள் உண்மை பொய் என்பனவற்றிற்கு அப்பாற்பட்டனவாக விளங்குகின்றன.

நம்பிக்கைகள், மூடநம்பிக்கைகள் என்னும் இரு தொடர்கள் ஆய்வாளரால் கையாளப்படுகின்றன. ஆய்வாளர் நம்பிக்கை கொள்வது நம்பிக்கை எனவும், அவர் நம்பாதவை மூடநம்பிக்கை எனவும் ஆகிவிடாது. நம்பிக்கைகளையும் மூடநம்பிக்கைகளையும் வேறுதிரித்து இனங்காண்பது அவ்வளவு எளிமையான பணியல்ல. மூடநம்பிக்கைகள் காலத்தில் மறைந்துபோன பண்பாட்டின் எச்சங்களாகக் கருதப்படுகின்றன.

> ஃபிரேசரும் (1927:166) டைலரும் (1958:72) மூட நம்பிக்கைகளைப் பண்டைக் காலத்தின் எச்சங்கள் என்று கூறுகின்றனர். அதாவது மிகவும் நாகரிக மக்களிடையே எஞ்சி நிற்கும் விலங்காண்டி காட்டாண்டி நிலைகளின் நம்பிக்கைகளும், பழக்கங்களும் அவ்வெச்சங்களாகும்.[2]

மாதவிலக்கான பெண்கள், பூக்கும் செடிகளுக்கு அருகில் செல்லக்கூடாது என்னும் நம்பிக்கையை இதற்கு எடுத்துக்காட்டாகச் சுட்ட வேண்டும். மாதவிலக்கின் போது பெண் கருவேற்கும் தகுதியை இழக்கிறாள். பூக்கும்செடி கரு ஏற்றால்தான் பலனைத்தரும். தொல் பழங்குடி நிலையில் மனிதன் இம்முரணின் காரணமாக இத்தடையைச் செயல்படுத்தியிருக்கக்கூடும்.

நாகரிகமான இக்காலக்கட்டத்தில் மாதவிலக்கான பெண்ணைத் தனிமைப் படுத்துவதில்லை. நகர வாழ்வில் அறவேயில்லை. என்றாலும் இந்த நம்பிக்கை மட்டுமே எஞ்சி நிற்கிறது. இதை நாகரிக வாழ்வில் எஞ்சி நிற்கும் பழங்குடி நிலை எனக் கருதுவதில் தவறில்லை.

நாட்டார் நம்பிக்கைகளையும் சமயத்தையும் தொடர்பு படுத்துவதும் இயலாது.

> கிறித்தவம், யூத மதம், இசுலாம், புத்தமதம் போன்ற உயர்ந்த நிறுவனமாக்கப்பட்ட ஏதேனும் ஒரு மதத்தால் பரிந்துரைக்கப்படாத அல்லது வரையறை செய்யப்படாத

> எந்தவொரு நம்பிக்கையையும் ஆசாரத்தையும் "மூடநம்பிக்கை" என்று வரையறுப்பது சிறப்பாகும் (1964–204).[3]

இவ்வரையறை குறிப்பிட்ட இம்மதத்தைச் சார்ந்தவரிடையே மூடநம்பிக்கைகள் இருக்க இயலாது எனச்சுட்டுகிறது. ஆய்வுக்களத்தில் மதம் வேறாக இருந்தாலும், மக்கள் ஒரே பண்பாட்டையே பகிர்ந்து கொண்டுள்ளனர். அனைவரும் ஒருசில தலைமுறைகளுக்கு முன் ஒரு பொதுவான சமயத்தில் வாழ்ந்தவர்களே. சமய மாறுதல் பண்பாட்டின் முழுமையான மாற்றத்தைத் தோற்றுவித்துவிடவில்லை. எனவே, சமயத்தோடு தொடர்புபடுத்தி நம்பிக்கைகளை இனங்காண இயலாது.

நாட்டார் நம்பிக்கைகள் குறித்த வரையறைகளை லூர்து ஐந்து வகைகளாக இனங்காண்கிறார்.

1. நாட்டார் நம்பிக்கைகள் பொய்ம்மையானவை.
2. உண்மை என்று நிரூபிக்க முடியாதவை.
3. விமர்சனம் செய்யாது ஏற்றுக் கொள்ளப்படுபவை.
4. ஒரு குழுவைச்சார்ந்த உறுப்பினர்கள் என்ற முறையிலேயே அவற்றை அவர்கள் நம்புகின்றனர்.
5. நாட்டார் நம்பிக்கைகள் மரபு சார்ந்தவை. அவை வாய்மொழியின் மூலம் அல்லது கவனித்தறிவதன் மூலம் அல்லது போலச் செய்தலின் மூலம் சுற்றிச்சுழன்று வருவன. அவ்வாறு சுற்றிச்சுழன்று வருவதால் அவை மாற்றத்திற்கு ஆட்படுகின்றன.[4]

முதல் இரு வரையறைகளும் உயர் இன மனப்போக்கின் அடிப்படையில் எழுந்தவை. பிற இனத்தைச் சார்ந்தவர்கள் தங்களை விடக் கீழானவர்கள், பகுத்தறிவு அற்றவர்கள் எனக் கருதுவதின் விளைவாக இதனைக் கொள்ளலாம். மூன்றாவது வரையறை, நம்பிக்கைகளுக்கும் அதனைக் கையாளுபவர்களுக்குமிடையிலான உறவைக் குறிப்பது. நான்காவது ஐந்தாவது வரையறைகள் நாட்டார் வழக்காறாக நம்பிக்கைகளை இனங்காண்கின்றன.

புக்கட், நாட்டார் நம்பிக்கைகளைக் குறிகளாகக் காண்கிறார். இன்ன செயலுக்கு இன்ன விளைவு என்பது கட்டுப்படுத்தும் குறி. எடுத்துக்காட்டாக, விளக்கு ஏற்றிய பின், குழந்தைகளை வெளியே கொண்டு செல்லக்கூடாது. இங்கு, ஒரு கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. இது மீறப்பட்டால், 'பட்சிதோசம்' குழந்தைக்கு ஏற்படும். வருவது

உணர்த்தும் குறி மனிதக்கட்டுப்பாட்டுக்குள் அடங்காது. இக்குறி வரப்போவதை உணர்த்துகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு செயலைச் செய்யும்போது ஒற்றைத் தும்மல் விழுந்தால் செயலுக்குத் தடை ஏற்படும்.

> மூடநம்பிக்கைகள் உண்மையென்று கருதி "ஏனோதானோ" என்று ஏற்றுக்கொள்ளப்படுபவை. அல்லது அதனை நம்புவோர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைகளையும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விளைவுகளையும் கொண்ட மரபுவழி வெளிப்பாடுகள் மூட நம்பிக்கைகளாகும். அவற்றுள் சில நிபந்தனைகள் குறிகளாகும், ஏனையவை காரணங்களாம்.[5]

இவ்வரையறையின் அடிப்படையில் நம்பிக்கைகளை முதற்குறியும் நிமித்தமும், மந்திரம், மாற்றம் என மூன்று வகையாக வகைமை செய்ய இயலும். முதற்குறியும் நிமித்தமும் என்பது நிகழப்போவதைச் சுட்டுவது. மந்திரம் என்பது எதிர்காலத்தைக் குறிப்பிட்ட செயல்களின் மூலம் உருவாக்கி அமைப்பது. மாற்றம் என்பதில் குறி சார்ந்த மூடநம்பிக்கை, மந்திர மூடநம்பிக்கையாக மாற்றியமைக்கப்படுகிறது.

## நம்பிக்கைகளின் வகைமை

வழக்காறுகளை அவை வழங்கும் சூழலின் அடிப்படையிலேயே வகைமை செய்தல் வேண்டும். நம்பிக்கைகள் வாழ்வின் ஒவ்வொரு காலத்திலும், நாட்டார் அறிந்தோ, அறியாமலோ வெளிப்படுகின்றன. ஆனால், வழக்காறுகளை அவை புழங்கும் சூழலிலிருந்துதான் திரட்ட முடியும். இச்சூழலை அடிப்படையாகக் கொண்டு வழக்காறுகளை வகைமை செய்வதே பொருத்தமானது. கண்ணேறு கழித்தல், ஆவிகளைக் குறித்த அச்சம், மந்திரம், நம்பிக்கை மருத்துவம், குழந்தைப்பேறு, குழந்தை வளர்ப்பு, தீட்டு வருவதை உணர்த்தும் குறிகள் என நம்பிக்கைகளை வகைமை செய்ய இயலும்.

### 1. கண்ணேறு கழித்தல்

கண்ணேறு கழித்தல் குறித்த நம்பிக்கைகள் வாழ்வின் பல்வேறு சந்தர்ப்பங்களில் செயல்பாடுகளாக வெளிப்படுகின்றன. வாழ்வியல் சடங்குகள் ஒவ்வொன்றிலும் கண்ணேறு கழித்தல், சடங்கில் ஒரு பகுதியாக அமைவது குறிப்பிடத்தக்கது.

> ஏதாவது ஓர் ஆண் அல்லது ஒரு பெண் மற்றொரு தனி மனிதருக்கு அல்லது அவருடைய உடைமைகளுக்கு வேண்டுமென்றோ, விருப்பமின்றித் தன்னியல்பாகவோ தீங்கிழைக்க முடியும் என்பதே கண்ணேறு[6]

என்று லூர்து கண்ணேற்றை வரையறுக்கின்றார்.

கண்ணேறு கழித்தலை ஐரோப்பியப் பண்பாட்டில் காணவியலாவிடினும், ஆசியப்பண்பாட்டில் ஏதோ ஒரு வகையில் எல்லாச் சமூகத்தினரிடமும் உள்ளது. ஆனால், இந்தியப் பண்பாட்டில் தான் அதிக அளவில் இடம்பெறுகின்றது. குமரி மாவட்ட இசுலாமியர் வாழ்வில் வாழ்க்கை வட்டச்சடங்குகளில் இது தவறாது இடம்பெறுகிறது. ஒரு முட்டையைச் சுன்னத் சடங்கின்போது சுன்னத் செய்யவிருக்கும் சிறுவனது தலையைச் சுற்றி எறிவர். இது அவனைக் கண்ணேறுவிருந்து பாதுகாப்பதற்காக நிகழ்த்தப்படுகிறது. கர்ப்பிணிப்பெண், குழந்தைப் பேற்றிற்காகத் தாய்வீட்டிற்கு வரும்போது தாய்வீட்டின் படியை மிதித்தவுடன் திருஷ்டி சுற்றும் சடங்கு நிகழ்த்தப்படுகிறது. இச்சடங்கு "சாபி, ஹனபி என்னும் இருவர் சடங்கிலும் தவறாது இடம் பெறுகிறது.

குழந்தையின் தொட்டிலில் தொப்புள் கொடி நூலால் சுற்றப்பட்டுத் தொங்கவிடப்படும். தொப்புள் கொடிக்குக் கண்படுதலைத் தடுக்கும் சக்தி உண்டு என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இது நிகழ்த்தப்படுகிறது. குழந்தைக்கு ஆறுமாதம் நிறையும்போது சோறூட்டும் சடங்கை நிகழ்த்துகின்றனர். அப்போது உயிருள்ள கோழியை மூன்றுமுறை குழந்தையின் தலையைச் சுற்றி ஏழைகளுக்கு வழங்குகின்றனர். இதுவும் கண்ணேறு கழித்தலின் பொருட்டு நிகழ்த்தப்படுகிறது. ஆக, கண்ணேறு கழித்தல் குறித்த நம்பிக்கை குமரி மாவட்ட இசுலாமியர் வாழ்வில் ஒவ்வொரு சடங்கிலும் தவறாது இடம்பெறுகிறது.

கண்ணேறு கழித்தலுக்கு விலக்கப்பட்ட காலமும் குமரி மாவட்ட இசுலாமியர் வாழ்வில் உண்டு. குழந்தை பிறந்து 41 நாள் வரை குழந்தைக்கோ குழந்தையின் தாய்க்கோ 'திருஷ்டி' சுற்றுவதில்லை. இக்காலம் தீட்டு நாள்களாகக் கருதப்படுகிறது. தீட்டுக் காலம் முடியாமல் 'திருஷ்டி' சுற்றினால் அதனால் தீமையே விளையும்; நோயும் அதிகரிக்கும். எனவே, தீட்டு நாள்கள் முடிந்தவுடன் கடுகு, மூன்று வேப்பிலை, மூன்று மிளகு, மூன்று அத்தியிலை அல்லது முந்திரியிலை, உப்பு இவற்றைத் தடவித் தீயில் போடுவர்.[7] இது எல்லாக்

கண்ணேறுகளையும் அதனால் விளையும் தீங்குகளையும் போக்கிவிடும் என்ற நம்பிக்கை குமரி மாவட்ட இசுலாமியர்களிடையே உள்ளது. கண்ணேறு கழித்தலை வராது தடுத்தல், வந்தபின் நீக்குதல் என இருபடி நிலைகளாக வகுக்க இயலும். சடங்குகளின் போது முட்டையைச் சுற்றி எறிதல் அல்லது உயிருள்ள கோழியைச் சுற்றித் தானமளித்தல் ஆகியன வராது தடுக்கும் என்ற நம்பிக்கையில் நிகழ்த்தப்படும் சடங்குகளாகும்.

சில அறிகுறிகளைக் கொண்டு கண்ணேறு பட்டுள்ளதை நாட்டார் உணர்ந்து கொள்கின்றனர். குழந்தை இரவு நேரம் இடைவிடாது அழுவது கண்ணேற்றின் வெளிப்பாட்டுக்குறியாக அமைகிறது. இவ்வாறு கண்ணேறு விழுந்துள்ளதை உறுதிப்படுத்தியபின் அதைக் களைவதற்கான சடங்கு நிகழ்த்தப்படுகிறது.

> ஒரு வெள்ளைத் துணியை எடுத்துக் குழந்தையைச் சுற்றிப் பின் வயித்தைத் தடவும்போது பேய்க்கண்ணு, ஊரார் கண்ணு, வந்தார் கண்ணு, இருந்தார் கண்ணு எனச் சொல்லி, பின் அதைச்சுருட்டி தீ பத்த வச்சு சொம்பில் போடணும். கொஞ்ச நேரம் கழிச்சு ஒரு பாத்திரத்துல, கொஞ்சம் தண்ணி விட்டு அதில் கமுத்தித் தட்டணும். துணி தண்ணியை உறிய உறியக் குழந்தை அழுகையை நிறுத்தும்.[8]

குழந்தையின் அழுகையை நிறுத்த மற்றொரு சடங்கும் நிகழ்த்தப்படுகிறது.

> குழந்தையையும் தாயையும் நிர்வாணமாக விட்டு, தாய் ஒரு முட்டையை எடுத்து, குழந்தையின் தலை உடம்பு முழுசும் மூணு தடவைச் சுற்றி, பின் தலைவழியாக இரண்டு காலுக்கும் இடை வழியா எடுத்து, இப்படி மறிக்கடக்காம மூணு முறை எடுத்து முட்டையைக்கீழே வச்சிட்டு, குழந்தைய மூணு முறை மறிக்கடக்கணும். பின் தாய் முட்டையை எடுத்து மூணு முறை தலையைச் சுற்றிட்டுத் தீயில் போட்டுட்டுத் திரும்பிப் பார்க்காம வேற ரூமுக்கு வந்திரணும். முட்ட வெடிச்சுச் செதறுற அளவுக்குக் கண்பேறும் போகும். எல்லாரும் தூங்குன பொறகு தான் செய்யணும். அந்த ரூமுல அடுத்த நாள் வர யாரும் போகக் கூடாது.[9]

கண்ணேறு கழிக்கும் சடங்கில் சில குறிகளின் மூலம் கண்ணேறு உணர்ந்து கொள்ளப்படுகிறது. மாற்றுக்குறிகளை நிகழ்த்துவதின் மூலம் அதன் தீமை அகற்றப்படுகிறது. கண்ணேறு கழித்தல் குறித்த நம்பிக்கையில் குமரி மாவட்ட இசுலாமியர் அனைத்துச் சமூக மக்களின் நம்பிக்கையுடன் உடன்படுகின்றனர். சமயமாற்றம் இதில் எவ்வித மாற்றத்தையும் விளைவிக்கவில்லை.

## 2. ஆவிகளைக் குறித்த அச்சம்

'அனிமிசம்' (Animism) என்ற ஆவியியம் உலகளாவிய செல்வாக்கினைக் கொண்டது. சமயத்தின் தொடக்க நிலையாக ஆவியியம் கருதப்படுகிறது. இச்சொல் டைலர் என்னும் ஐரோப்பியரால் முதன் முதலாக உருவாக்கப்பட்டது.

> இப்பதம் பொருள்முதல்வாதச் சிந்தனைக்கு எதிரான ஆன்மீகவாதச் சாரத்தை உள்ளடக்கியதாகும். சமயத்தை வரையறுப்பதிலும், சமயவியல் நிகழ்வு கடந்து வந்த படிமலர்ச்சிக் கட்டங்களையும், அறிந்து கொள்வதற்கு "ஆன்மா" பற்றிய கருத்து இன்றியமையாதது என்கிறார் டைலர். ஆவி உயிரிகள் மீதான நம்பிக்கையாகிய ஆவியியம் என்ற கருத்தாக்கம் சமயம் பற்றிய குறைந்தபட்ச வரையறையாகும். [10]

என ஆவியியம் சமயத்தின்முன் வடிவமாக உணர்த்தப்படுகிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் தெளிவானகோட்பாடுகள் கொண்ட ஒன்றிற்கும் மேற்பட்ட சமயங்கள் உள்ளன. எனினும், ஆவி வழிபாடு ஏதோ ஒருவகையில் இன்றளவும் நீடிக்கிறது. தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் நிறுவனச் சமயங்களுக்கு இணையாக ஆவி வழிபாடு உள்ளது.

இறந்தபின் உயிர் ஆவி நிலையை அடைந்து இயங்குகிறது என்பதே ஆவியியத்தின் அடிப்படை.

> ஓர் உடம்பை விட்டு உயிர் பிரியும்போது என்ன நிகழ்கின்றது? ஒருவனின் உயிர், ஒருவனின் மூச்சு எங்கே செல்லும்? தொல் பழங்கால மனிதன் இதனைக் கவனித்தறிந்து, இறப்பு இறுதியானது என்பதை நம்ப மறுத்தான். மேலும் இறந்த ஒருவன் இங்கும் அங்கும் இயங்கிப் பேசுவதை ஒருவன் கனவில் காணக்கூடும்.

தொல்பழங்குடி மனிதனுக்கு விழிப்பு நிலை. கனவுலகைவிட உண்மையில் குறைந்ததன்று.[11]

ஆவிகள் தங்களைச் சுற்றி இயங்குகின்றன என்ற நம்பிக்கை தொல்பழங்குடிப் பண்பாட்டைச் சார்ந்தது. எனினும் எச்சமாகச் சமகால மனிதனின் நம்பிக்கையிலும் உள்ளது.

குமரி மாவட்ட இசுலாமியர் ஆவிகளை வழிபடுபவர்களல்லர். இசுலாம் சமயம் நன்கு வரையறுக்கப்பட்ட கோட்பாட்டினை உடையது. எனினும் ஆவிகள், பேய்கள் குறித்த நம்பிக்கை போன்றவை இவர்களிடமும் ஆழமாகப் பதிந்துள்ளன. ஆய்வுக் களத்தில் இயற்கைச் சூழலில் பதிவு செய்யப்பட்ட நம்பிக்கை குறித்த பதிவுகள் இதை உறுதிப்படுத்தத் தவறவில்லை.

மரணம் நிகழ்ந்தவுடன் மனிதன் ஆவியாக உருமாறுகிறான் என்பது நம்பிக்கையாக ஆழ்மனதில் படிந்துள்ளது. "செத்த அன்னிக்கு வந்தவங்க அடக்கம் முடிஞ்சதும் போயிரணும். இல்லைனா மூணா நாளு விருந்து முடிஞ்சப்ப போணும். அடுத்த நாளு போனா, அந்த ஆவி கூடயே வரும்.[12] நாட்டாரின் இவ்வாய்மொழி ஆவிகுறித்ததான நம்பிக்கையைத் தெளிவாக உணர்த்திவிடுகிறது. சில ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஆவிகள் செய்யும் தீங்கிலிருந்து தப்பிவிட முடியும். இப்பதிவில் அடக்கம் முடிந்ததும் போதல், அல்லது மூன்று நாள் இருந்து இறந்தவரின் நினைவாக நடத்தப்படும் விருந்தை உண்டு செல்லல் என்பன ஒழுங்குகளாக வலியுறுத்தப்படுகின்றன. இதற்கு இணையான நம்பிக்கை இசுலாமியரை அடுத்து வாழும் பிற சமயத்தாரிடமும் உள்ளது. "மரணத்திற்கு வந்தவர் அடியேந்திரத்துக்கும் வரணும்" என்னும் ஒழுங்கு குமரி மாவட்ட இந்து சமூகத்தினரிடையே உள்ளதைக் குறிப்பிட வேண்டும்.

ஆவிகள், கனவுகள் மூலம் மனிதருக்குத் தங்கள் இருப்பை உணர்த்தும் என்னும் நம்பிக்கையும் குமரி மாவட்ட இசுலாமியர்களிடையே நிலவுவதை ஆய்வுக்களத்திலிருந்து திரட்டப்பட்டப் பதிவுகளில் இருந்து உணர முடிகிறது. "கனவுல செத்துப்போனவங்க திங்கள் வெள்ளிக்கிழமைகளில் வந்தாலோ, திரி கொளுத்தி வைப்பது போலக் கண்டாலோ இறப்பு வரும்".[13] ஆவிகள் கனவில் வெளிப்படுவது மரணத்தைக் கொண்டுவரும் என்னும் நம்பிக்கையை இங்கு உணர முடிகிறது.

நாற்பதாவது நாள் சடங்கில் ஆவி அங்கிருந்து விரட்டப்படுகிறது. ஆய்வுக் களத்திலிருந்து திரட்டப்பட்ட மற்றொரு நம்பிக்கை குறித்த பதிவு இதைத் தெளிவாக உணர்த்துகிறது.

> இறந்த மனிதன் 40 நாள் வரை நம் வீட்டில் இருப்பார். 40–வது நாள் காலைப்பாங்கு கூப்பிட்டவுடன் லெப்பை ஓடி வருவார். வந்தவுடன் அவர், இறந்த மனிதரைக் குளிப்பாட்டின இடத்தில் நின்ற உயிரை விரட்டுவார். ஒரு கோழியை அறுத்துக் கழுத்தை ஒரு வெட்டு வெட்டுவார். ஒடனே உயிர் பரலோகத்திற்குச் செல்லும். நாங்க அவரக் குளிப்பாட்டின தண்ணீர்போக ஒரு குழி வெட்டிடுவோம். அதிலதான் தண்ணிபோவும். பின் அத மண்ணால மூடுவோம். தினமும் காலை சாய்ந்தரம் திரிபத்த வைப்போம். அந்த இடத்துலதான் உயிர் இருக்கும்.[14]

இப்பதிவில் ஆவி குறித்த நம்பிக்கை, நிறுவன சமயத்தோடும் தொடர்புப்படுத்தப்படுகிறது. ஆவியை விரட்டும் சக்தி நிறுவனச் சமயத்தின் சமயப்பணியாளருக்கு உள்ளது. ஒரு கோழியைப் பலியிடுவதின் மூலம் ஆவிக்கு மனநிறைவைத் தந்து ஆவி பரலோகத்திற்கு அனுப்பப்படுகிறது. இசுலாமிய மற்றும் கிறித்தவச் சமய நம்பிக்கைகளின்படி, ஆன்மா மரணம் நிகழ்ந்தவுடனேயே அதற்கான ஓய்விடத்திற்குச் சென்று விடுகிறது. நியாயத்தீர்ப்பு நாள் வரை அது அங்கிருக்கும். அவரவர் செயல்களுக்கேற்றவாறு நரகமோ, சொர்க்கமோ அளிக்கப்படும். ஆனால், நாற்பது நாள்வரை மரணம் நிகழ்ந்த இடத்தில் ஆவி இருக்கும் என்ற நம்பிக்கை இதோடு இணைந்துள்ளது. மரணம் அடைந்தவரை குளிப்பாட்டும் தண்ணீர் சென்று விழும்படியாகக் குழி வெட்டப்படும். இசுலாமியர் வாழ்வில் திரி கொளுத்துவது (பத்தி கொளுத்துவது) என்பது மரணத்தோடு தொடர்புடையது. "செத்தவங்க துணிய மண்ணுல பொதக்கணும். நாப்பதுநாள்வர வீட்ட சுத்தமாக வைக்கணும். அவரக் குளிப்பாட்டுன இடத்துல வீட்டிலும் நாப்பது நாள்வர பத்தி கொளுத்தணும்".[15] நாற்பது நாள் என்ற வரையறை இந்தியச் சமூகங்கள் அனைத்திற்கும் பொதுவானவை. குழந்தை பிறந்த தீட்டு நாற்பது நாள்வரை இருக்கும் என்பதை இங்கு நினைவில்கொள்ள வேண்டும்.

நாற்பத்தோராவது நாள்தான் தீட்டு நீக்கப்படுவதற்கான சடங்கும் நிகழ்த்தப்படும். இறப்புச் சடங்கிலும் நாற்பத்தோராவது நாள் சடங்கு

முக்கியமானது. ஆவி மனிதனைச் விட சக்தியானது என்ற நம்பிக்கைதான் வீட்டைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பதற்குக் காரணமாக அமைகிறது. நாற்பது நாள் என்ற கணக்கு இசுலாமியர்களின் நம்பிக்கையிலும் உள்ளது.

> குழந்தை வெளியில் வந்தவுடன் இறந்தால் அது வீட்டிற்கு மான்யம் (நல்லது) ஆனது. எங்க வீட்டில ஒரு கன்னி உண்டு. அது இதுவரைக்கும் வீட்டில வரல்ல. முன் நடையிலதான் நிற்குது. அதுக்கு எங்கவீடு பிடிக்கலையாம். விரித்தியில்லையாம். அப்படி ஒரு கணக்குக்காரங்க சொன்னாங்க[16]

விருத்தி என்பது சுத்தத்தைக் குறிக்கின்றது. இப்பதிவு, வீடு சுத்தமற்று இருப்பதனால் ஆவி அங்கே தங்க மறுப்பதை உணர்த்துகிறது. நாற்பது நாள் வரை வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பது, ஆவி அங்கே இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் தான். ஆவி அங்கே உலாவுவதான நம்பிக்கை உள்ளது. ஆவி, 'நாற்பத்தியோராவது நாள்'தான் உலகைவிட்டு நீங்குகிறது.

பூமியிலேயே தங்கிவிடும் ஆவிகள் மனிதருக்குத் தீங்கிழைக்கும் சக்தி கொண்டவை என நம்பப்படுகிறது. "கர்ப்பிணிப் பெண் கல்லறைப் பக்கம் போக வேண்டிய வந்தால் மோதிரத்துல மண் கலந்து கைல வச்சிட்டுப் போகணும்".[17] ஆவிகள் குழந்தைகளுக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் அதிகத் தீங்கிழைக்கின்றன. அசுத்தமான இடத்தில் ஆவிகள் தங்குவதில்லை. சிறுநீர் கலந்த மண்ணைக் கையில் வைத்துக்கொண்டு போவதின்மூலம் கர்ப்பிணிப்பெண் தன்னைத்தானே அசுத்தமாக்கிக் கொள்கின்றாள். இதன் மூலம் ஆவிகளின் தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்கிறாள். "நாங்க ராவுல வெளிய நடந்து போகணும்னா மோண்டு அத எங்க உடம்புல தெளிச்சிட்டுப் போவம்.[18] ஆய்வுக்களத்திலிருந்து திரட்டப்பட்ட மற்றொரு பதிவு இதை உறுதிப்படுத்துகிறது.

இவ்வாறு தற்காத்துக் கொள்ளாமல் கல்லறைப் பக்கம் கர்ப்பிணிப் பெண் போய்விட்டு வந்தால் ஆவிகள் உடன் வரக்கூடும். அதற்கான பரிகாரமும் நிகழ்த்தப்படுகிறது.

> கல்லறைப் பக்கம் கர்ப்பிணிப் பெண் போய்விட்டு வீட்டிற்கு வந்த ஒடனே ஒரு முட்டையை எடுத்து, தலையைச் சுற்றி நாலு பக்கமும் ஒக்காட்டு காட்டிவிட்டு,

> **பின் கல்லறைப் பக்கம் வீசி எறிவோம். பின்னர், யாலேஸ் என்னும் நூல் ஓதி இடுப்பில் கட்டுவோம். நாள் பார்த்து அதற்கான யாலேஸ் கட்டுவர்.**[19]

முட்டையை வீசி எறிதல் நாட்டார் சிறுதெய்வ வழிபாட்டிலும் இடம் பெறும் சடங்கு. ஓதி நூல் கட்டுவது இசுலாமிய சமயம் தொடர்பானது.

ஆவியைக் கட்டுப்படுத்த இரு வழிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. முட்டையை எறிவதே தொன்மையான வழிமுறையாக இருந்திருக்க வேண்டும். பிற சமூகத்தினரும் இதைக் கடைப்பிடிக்கின்றனர். சமயமாற்றத்திற்குப் பின் ஓதி நூல் கட்டுவது என இசுலாமியச் சமயம் தொடர்பான சடங்கு இதோடு இணைந்துள்ளது. ஏற்கெனவே இருந்த நம்பிக்கையோடு சமயமாற்றம் காரணமாகப் புது நம்பிக்கை இணைந்துள்ளது. பழைய நம்பிக்கையை இடம்பெயரச் செய்துவிட்டுப் புது நம்பிக்கை செல்வாக்குப் பெறவில்லை. மாறாக, புதிதாக இணைந்து கொண்டுள்ளது.

ஆவிகள் எங்கும் அலைந்து திரிவதாக நம்பப்படுகிறது. "பூ தலையில வைப்பதற்கு முன்மூணுமுறை துப்புனப்பிறகு தான் வைக்கணும். அப்போதுதான் பூ எச்சில் பட்டுப் பேய் வராது". இந்த நம்பிக்கையும் ஆவிகள், சுத்தம் என்பதற்கிடையிலான தொடர்பின் காரணமாகவே எழுகிறது. பூ சுத்தமானது. சுத்தத்தின் காரணமாகப் பேய் அதை விரும்பக்கூடும். துப்புவதின் மூலம் பூ அசுத்தப்படுத்தப்படுகிறது. அதன் மூலம் ஆவி விலக்கப்படுகிறது.

ஆவி தடையற்று எங்கும் சஞ்சரிக்கும் இயல்பினைக் கொண்டது. மனிதர்களின் உரையாடலை ஒட்டுக்கேட்டு ஆவிகள் அவனை வீழ்த்தக்கூடும். "இரவில் எங்குப் போவோம் எனப் பேசக்கூடாது. பேசினால் இரவில் அந்தப் பேய் போகின்ற இடத்துக்குக் கூப்பிட்டுப் போகும்".[20] இந்த நம்பிக்கையை உணர்த்தும் கதைகளும் ஆய்வுக்களத்தில் சொல்லப்படுகின்றன.

> பாத்திமாவும் அவளுக்கத் தோழிமாரும் காலைல ஆத்துக்குக் குளிக்கப் போணும்னு பேசிக்கிட்டாங்க. விடியகாலம் ஒருத்தி வந்து கூப்பிட்டா. தண்ணீய்ல எறங்கிட்டுப் பாத்தா ஒரே இருட்டு. கூட்டிட்டு வந்தவளயும் காணல. மழ இருட்டாயிருக்கும்னு நினைச்சா. கூட்டிட்டு வந்தவள காணாமயிருந்தப்போ

அவளுக்குப் *புரிஞ்சிச்சு. மோண்டு உடம்புல* தெளிச்சிக்கிட்டு வீட்டுக்கு ஓடி வந்துட்டா. மணியப் பாத்தா மணி மூணு. அஞ்சு மணி ஆனப்போ தோழிமாரு வந்தாங்க. பாத்திமாக்கு காச்சல்னா காச்சல். கணக்குக்காரி வந்து குப்பைக்குக் மேல ஒக்கார வச்சு வேப்பில அடிச்சப்பிறகுதான் காய்ச்சல் விட்டது.[21]

இக்கதை பிற சமூக மக்களிடம் வழங்கும் கதையின் மாற்று வடிவமே. பிற சமூக மக்களிடம் புழங்கும் கதையில், பேய் நடுஇரவு விவசாயிகளை வயலுக்கு அழைத்துச் செல்லும். குமரி மாவட்ட இசுலாமியர் வயல் வேலைகளுக்குச் செல்வதில்லை. மாற்று வடிவமாக, அதிகாலையில் குளிக்க அழைத்துச் செல்கின்றன. ஆவிகள் மீதான நம்பிக்கையின் வெளிப்பாடாகவே இது அமைகிறது.

ஆவிகள் மனிதர்களை ஏமாற்றும் குணமுடையன. "இரவு வீட்டில் பிள்ள தூங்கிய உடன் நடயில் தொறப்பாவையோ, இரும்புத்துண்டையோ போட்டு வைப்போம். ஏன்னா வெளியில போனவங்க வீட்டுல வந்தாலோ, வேற யாராவது வந்தாலோ கூடப் பேய்வரும். இது வீட்டுல வராமத் தடுக்கும்".[22] வெளியிலிருந்து வீட்டுக்கு வரும் மனிதர்களுடன் ஆவிகளும் வீட்டிற்குள் புகுந்துவிடும். 'இரும்புத் துண்டு', 'தொறப்பா' போன்றவை ஆவியின் வருகையைக் கட்டுப்படுத்தக்கூடும்.

குமரி மாவட்ட இசுலாமியரிடையே வழங்கும் நம்பிக்கை தொடர்பான வழக்காறுகள் ஆவி குறித்ததான நம்பிக்கையை உறுதிப்படுத்துவனவாக அமைகின்றன. சமயமாற்றத்திற்கு முன் இருந்த நம்பிக்கைகளோடு, சமயமாற்றத்தின் காரணமாகப் புதிய நம்பிக்கைகளும் இணைந்துள்ளன.

**'மந்திரம்'**

குறிசார் நம்பிக்கைகள் எதிர்காலத்தை முன்னிறுத்துகின்றன. மந்திர நம்பிக்கைகள் இதற்கு மாறாக எதிர்காலத்தை மாற்றி அமைக்கின்றன. எடுத்துக்காட்டாக, மழை பெய்வதற்குக் கொடும்பாவி கொளுத்தும் செயலைக் குறிப்பிட வேண்டும். கொடும்பாவி கொளுத்துவதன் மூலம் மழை பெய்விக்கப்படுகிறது. கொடும்பாவி கொளுத்துதலை மந்திரச் செயலாகக் குறிப்பிட வேண்டும். மழை பெய்வது என்பது எதிர்காலத்தை உருவாக்குவது, மந்திரம் சார்ந்த நம்பிக்கைகள் நோய் நீக்கும், பேய் ஓட்டும், குறி பார்க்கும் சடங்குகளில்

வெளிப்படுகின்றன. இங்குச் செயற்கையாகக் குறிகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

குறிசார் நம்பிக்கைகள் மந்திர நம்பிக்கைகளாக மாற்றப்படுகின்றன. மந்திர நம்பிக்கைகளால் விரும்பத்தகாத நிகழ்வு நடக்கும் என்னும் போது மாற்றுசார் நம்பிக்கைகள் தோற்றங்கொள்ளுகின்றன. கண்ணேறுபடுதலைத் தவிர்க்க, குழந்தையின் கன்னத்தில் பொட்டிடுவதை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிட வேண்டும். மந்திரக் குறிகள் மனிதனால் தோற்றுவிக்கப் படுபவை. ஆய்வுக்களத்தில் மந்திர நம்பிக்கைகளை இனங்காண முடிகிறது. "பேய் பிடிச்சா தாயத்து எழுதி இடுப்புலக் கட்டுவாங்க".[23] கண்ணேறுபடுதலைத் தவிர்க்கக் கன்னத்தில் பொட்டு வைப்பதற்கு நிகரானது இது. தாயத்து எழுதிக் கட்டுவது என்பதின் மூலம் செயற்கையாக ஒரு குறி நிகழ்த்தப்படுகிறது. இதற்குப் பேய் அஞ்சி விலகும் என்பது எதிர்காலத்தை மாற்றி அமைக்கிறது.

குமரி மாவட்ட அனைத்துச் சமூக மக்களும் செய்வினை என்னும் மந்திரச் செயல்பாட்டின் மீது நம்பிக்கை கொண்டுள்ளனர். இந்நம்பிக்கையைக் குமரி மாவட்ட இசுலாமிய மக்களும் பகிர்ந்து கொள்கின்றனர்.

> செய்வினை உண்டு, மேலும் மேலும் கஷ்டம் வந்திச்சின்னா கணக்குக்காரங்கக்கிட்டப் போய்க் கேப்போம். அவங்க ஒங்கவீட்டில சொந்தக்காரங்க செய்வினை செஞ்சிருக்காங்கன்னு சொன்னா அதத்தீக்கப் பரிகாரம் செய்வோம்".[24]

"ஒருக்கா என வீட்டுல செம்புல தண்ணி வச்சு தகடு எடுத்தா, கணக்குக்காரிக்கு அறனூறு றூபா கொடுத்தேன்".[25] குடும்பத்தில் ஏற்படும் நோய், பொருளாதார விளைவுகளுக்கு உறவினர்கள் செய்யும் செய்வினைதான் காரணம் என நம்பப்படுகிறது. இதற்குப் பரிகாரமாக மாற்றுக் குறிகள் நிகழ்த்தப்படுகின்றன. இங்குத் தர்காவில் குறி கூறுபவர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர். இவர்கள்தான் கணக்குக் காரர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். இங்குக் கணக்குக்காரர்கள் மந்திரவாதிகளின் தொழிலைப் புரிகின்றனர். செய்வினைகளைத் தடுப்பதற்காக மந்திரக் குறிகளைத் தோற்றுவிப்பதுண்டு. "மந்திரம் பண்ணித் தேங்காய் எலுமிச்சம்பழம், திரி, பாளையங்கோட்டான் பழம், பூ இதை மந்திரிச்சி வீட்டில் ஒரு இடத்துல புதைச்சு வைப்போம்"[26]

ஒரு குறிப்பிட்ட சொல் அல்லது சொற்றொடரை மீண்டும் மீண்டும் உச்சரிப்பதன் மூலம் சக்தி ஊட்டப்பட்டு, சக்தி ஊட்டப்பட்ட பொருள்கள் வீட்டினுள் புதைத்து வைக்கப்படுகின்றன. இக்குறிகள் எதிர்காலத்தில் விரும்பத்தக்க விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன.

தர்காக்களில் மந்திரக்குறிகள் வெளிப்படும் சடங்குகளும் நிகழ்த்தப்படுகின்றன.

> வெளியில் வைச்சு வயசுக்கு வந்து பேய் ஏதாவது பிடித்திருந்தால் அந்தப் பிள்ளையைத் தர்காவுக்குக் கூட்டிக் கொண்டு போய் இமாம் ஓதி அடிப்பார். சிலர், வீட்டுக்கு வந்து ஓதி அடிப்பர். பின் குப்பியில் தண்ணி அடைச்சு மந்திரம் சொல்லி வீட்டில் எந்த இடத்துல வைக்க வேண்டுமோ அதைச் சொல்வார். அவர்கள் அந்த இடத்தில் வைப்பர். சிலர், வீட்டிற்கு வந்து எல்லா இடமும் ஓதி அடிச்சு வீட்டைச் சுத்தி தண்ணீர் தெளிச்சு தேங்காய்த் திரிமெழுகுவர்த்தி சுத்தி தர்காவுக்குக் கொண்டு போவர்.[27]

இமாம் ஓதி அடிப்பது என்பது பேய் ஓட்டும் நிகழ்விற்கு இணையானது. பிற சமூகங்களில் பேய் ஓட்டும் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. சடங்கை நிகழ்த்துபவர் மந்திரங்கள்மூலம் பேயைக் கட்டுப்படுத்தி, வேப்பிலையை வைத்து அடித்து விரட்டுவார். இதற்கு இணையான சடங்கே தர்காவில் நிகழ்த்தப்படுகிறது. இங்கு இமாம் பூசாரிக்கு நிகராகிறார். குப்பியில் தண்ணீரை அடைத்து மந்திரம் சொல்வதன் மூலம் சக்தி ஏற்றி வீட்டில் புதைத்து வைப்பது இசுலாமியச் சடங்காக அமைகிறது. மெக்காவிலிருந்து கொண்டுவரும் தண்ணீர் புனித நீராகக் கருதப்படுகிறது. ஓதுவதின் மூலம் குப்பியில் அடைத்த தண்ணீருக்கும் சக்தி ஊட்டப்படுகிறது. இங்கு மந்திரக்குறியை நிகழ்த்துவதன் மூலம் எதிர்காலத்தில் தோன்ற இருக்கும் விரும்பத்தகாத குறிகள் மாற்றியமைக்கப்படும்.

"முதல் குழந்தை இறந்தால், சுற்றிலும் கம்பி வைத்துக் கட்டப்பட்ட இடத்தில் புதைக்கணும். மொதல் குழந்தை மூளைய மந்திரவாதி எடுத்துச் செல்லக்கூடும்".[28] தலைக்குழந்தையின் மூளையை எடுத்து மந்திரவாதிகள் மை தயாரிப்பர் எனும் நம்பிக்கை குமரி மாவட்ட அனைத்துச் சமூக மக்களிடமும் உள்ளது. முதல் குழந்தையை வீட்டினுள் பாதுகாப்பாகப் புதைக்கும் பழக்கமும் இருந்தது. இசுலாமியர்களிடையே

விரும்பும் இடங்களில் புதைக்கும் வழக்கம் இல்லை. பள்ளி வாசலுக்கருகில் ஒதுக்கப்பட்ட இடத்தில்தான் புதைத்தல் வேண்டும். இரும்புக்கம்பிகள் தீய ஆவிகளைத் தடுக்கும் சக்தி கொண்டவை. தீய ஆவிகளின் துணைகொண்டு நிகழ்த்தப்படும் மந்திரமும் தடுக்கப்படுகிறது. "குழந்தைக்க தொட்டிலில் இரும்புத் துண்டைப் போட்டு வைக்கணும். பேய் பிசாசு அண்டா. சிலர், இசுமி இறைவனின் 99 திருப்பெயரை எழுதித் தொட்டில்ல கட்டுவர்".[29] குழந்தையின் தொட்டிலில் இரும்புத் துண்டை வைப்பதன் மூலம் பேயைத் தடுக்க முடியும் என்பதும் அனைத்துச் சமூக மக்களின் நம்பிக்கையாக அமைகிறது. இறைவனின் திருநாமத்தை 99 தடவை எழுதி, இசுமி கட்டும் வழக்கம் இதற்கு மாற்றுக்குறியாக அல்லாது இதனோடு இணைந்து செய்யப்படும் குறியாக அமைகிறது. இசுமி கட்டுதல் திரிபு வடிவமாக அமைகிறது. சமய மாற்றத்திற்குப்பின் இவ்வாறு திரிபடைந்ததின் மூலம் வழக்காறு தொடர்ந்துள்ளது.

## நம்பிக்கை மருத்துவம்

குமரி மாவட்ட இசுலாமிய மக்களிடையே நோய்க்கான மருத்துவமும் நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்த்தப்படுகிறது. இம்மருத்துவம் சடங்கு அடிப்படையிலேயே நிகழ்த்தப்படுகிறது. மருத்துவக் குணம் கொண்ட பொருள்கள் இச்சடங்கில் இடம்பெற வேண்டும் என்பதில்லை. அவ்வாறு இடம்பெற்றாலும் நோய்க்கும் அதற்கும் தொடர்பு இருந்தாக வேண்டும் என்பதில்லை.

> குழந்தைக்கு உளுக்குப் போட்டிச்சினா மாமன்காரனோட துணியப் போட்டு ரெண்டு பேரு ஆட்டணும். அல்லது சுழவுல குழந்தையப் போட்டு, கூட துணைக்குச் சங்கப் போட்டு, மூணுமுற ஆட்டி, மூணு தடவப்போட்டு எடுக்கணும்[30]

தாய்மாமன் குழந்தையின் உறவுமுறையில் முக்கியமானவன். எல்லாச் சடங்குகளும் அவன் முன்னிலையில்தான் நிகழ்த்தப்படும். இங்குச் சடங்கிற்குத் தாய்மாமனின் வேட்டியே பயன்படுத்தப்படுகிறது. குழந்தையை வேட்டியில் போட்டு ஆட்டுவதன் மூலம் நோயிலிருந்து விடுதலை பெற முடியும் என்ற நம்பிக்கை இங்குச் செயல்படுகிறது. இங்கு, எதிர்காலத்தை மாற்றியமைக்கும் குறி நிகழ்த்தப்படுகிறது. குழந்தையைச் சுழவில் போட்டுப் புடைப்பது இதற்கு மாற்றாக அமைவது. தானியங்களைப் புடைப்பதன் மூலம் அவற்றிலுள்ள மாசு நீக்கப்படும்.

குழந்தையைப் புடைப்பதன் மூலம் அதன் உடம்பிலுள்ள தீய விளைவுகளை நீக்க முடியும் என்ற நம்பிக்கையில் இது நிகழ்த்தப்படுகிறது. இந்த நம்பிக்கையைக் குமரி மாவட்ட இசுலாமியர் பிற சமூகத்தோடு பகிர்ந்து கொள்கின்றனர்.

சமயமாற்றம் இவ்வாறு நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொள்வதற்கு இடையூறாக அமைவதில்லை.

கர்ப்பிணிப்பெண் மாலை 6.00 மணிக்குப்பின் தகுந்த பாதுகாப்பின்றி வெளியே செல்வதின் காரணமாகப் பிறக்கும் குழந்தை பட்சி தோசம் பிடித்த குழந்தையாகப் பிறக்கின்றது. குழந்தையின் கை, கால் விரல்கள் விரியாமல் இணைந்து இருப்பது இதற்கு அறிகுறியாகிறது. இதற்கும் நம்பிக்கை மருத்துவம் நிகழ்த்தப்படுகிறது.

> கர்ப்பிணிப்பெண் ஆறு மணிக்குப் பிறகு வெளியில போய்ப் பச்சி தோசம் பிடிச்சுக் குழந்தை பிறந்தால் வடமாலை போடணும். வடை சுட்டுக் குழந்தையின் அளவிற்கு மாலையாகக்கோத்து குழந்தையை தாயின் மடியில வச்சு, தாய்மாமன் மூணுமுறை குழந்தையின் கழுத்துல போட்டு எடுத்துப்பின் ஆலமரத்துல போட்டுட்டுத் திரும்பிப் பார்க்காம வரணும்.[31]

இங்கும் சடங்கை நிகழ்த்தும் உரிமை தாய்மாமனுக்குரியது. தாய்மாமனே சடங்குகளை நிகழ்த்தும் உரிமை உடையவன். தமிழ் உறவுமுறையில் தந்தைக்கு அடுத்தபடியாகத் தாய்மாமனே முக்கிய உறவாகக் கருதப்படுகிறான். வடை மாலை சாத்துவது இறைவழிபாட்டிலும் உள்ளது. அனுமான் கோயில்களில் முக்கிய வழிபாடாக இது அமைகிறது. ஆனால் இங்கு, சடங்கு இறைவழிபாட்டோடு தொடர்புடையதல்ல. குழந்தையின் கழுத்தில் வடை மாலை முதலில் போடப்படுகிறது. அப்போது குழந்தை தாயின்மடியில் இருக்க வேண்டும். தாய்மாமன் மூன்று முறை குழந்தையின் கழுத்தில் மாலையைப் போட்டு எடுக்க வேண்டும். இச்சடங்கைத் தாய்மாமனோ அல்லது அந்த உறவுமுறையில் வருபவரோ மட்டுமே செய்ய முடியும். பின், அந்த வடைமாலையை ஆலமரத்தில் வீசி எறிந்துவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் வீட்டிற்கு வரவேண்டும். இதையும் தாய்மாமனே நிகழ்த்த வேண்டும். ஆலமரத்தில் வீசப்பட்ட வடை மாலை பறவைகளுக்கு உணவாகும். பறவைகள் உண்பதால் 'பட்சி தோசம்' குழந்தையை விட்டு நீங்கும். பட்சி என்பதைப் பறவையாகப் பொருள் காண்பதால் இந்நம்பிக்கை தோற்றம் கொண்டிருக்க வேண்டும். குறிப்பிட்ட

இந்நம்பிக்கை மருத்துவமும் குமரி மாவட்டத்தில் எல்லாச் சமூகத்தாரிடமும் உள்ளது. சமயமாற்றம் இசுலாமியர்களை இதிலிருந்து வேறுபடுத்தவில்லை. ஆனால், கிறித்தவர்களாகச் சமய மாற்றம் பெற்றவர்களிடையே இத்தகைய நம்பிக்கை மருத்துவம் இல்லாததையும் குறிப்பிட வேண்டும்.

தேரை தோசமும் குழந்தைகளுக்கு வரும் பிணியாக அமைகிறது. தேரை நெடிதான கால்களையும் பெரிய வயிற்றையும் நீண்டு மெலிந்த முகத்தையும் கொண்ட தவளை இனத்தைச் சார்ந்த உயிரினம். கர்ப்பிணிப் பெண் தேரையால் தீண்டப்பட்ட உணவுகளை உண்பதாலோ, தேரையால் தீண்டப்படுவதாலோ அவளுக்குப் பிறக்கும் குழந்தை 'தேரை தோசத்திற்கு உள்ளாகிறது.

> கையும் காலும் மெலிஞ்சி, வயிறு தள்ளி, கண்ணு தள்ளி, தேரப் போல குழந்த இருந்தா அதுக்குத் தேர தோஷம் பிடிச்சிருக்குன்னு அர்த்தம். தள்ளக்காரி தேர விழுந்தத தின்னுருக்கணும் அல்லது தேர அவமேல விழுந்திருக்கணும். தோஷம் போக தேரய உயிரோடு எண்ணையிலப் போட்டுப் பொறிச்சி தள்ளைக்கும் பிள்ளைக்கும் கை கால்ல தடவணும். இல்லன்னா தேரயப் பிடிச்சி ஓட்ட உள்ள செறட்டக்கக்கீழ கமுத்தி வச்சு, அந்த செறட்டக்க மேல குழந்தய வச்சு தள்ளக்காரி குளிச்ச வைக்கணும். தேர தோஷம் நீங்கிப் போகும்.[32]

ஊட்டச்சத்துக் குறைவினால் தோன்றும் நோயாக இதனைக் குறிப்பிட வேண்டும்.

கைகால் மெலிவு, வீங்கிய வயிறு, முகம் மெலிவு காரணமாகப் பெரிதாகத் தோற்றம் தரும் கண் ஆகியன தேரையை நினைவுபடுத்துவதால் தேரையினால் வரும் நோயாகக் கருதப்படுகிறது. இந்த அடிப்படையில் நம்பிக்கை மருத்துவம் எழுந்துள்ளது. இந்நம்பிக்கை மருத்துவம் பிற சமூகத்தாரிடமும் வழக்கிலுள்ளது. ஆனால், கிறித்தவர்களிடையே இந்நம்பிக்கை இல்லை.

குழந்தைப்பேற்றுக்கும் நம்பிக்கை மருத்துவம் உள்ளது. ஆய்வுக்களத்தில் 80 வயதான மூதாட்டியிடமிருந்து இதைப் பெற முடிந்தது.

> குழந்தை இல்லாதவங்களுக்குக் குழந்தை கிடைக்கணும்னா முன்னால பிறந்த குழந்தையின் உலர்ந்த தொப்பிள எடுத்துப் பழத்தில வச்சு முழுங்கணும். இல்லன்னா நல்லாச் சுட்டுக் கரியாக்கி அந்தக் கரிய நல்லெண்ணயில குழச்சுச் சாப்பிடணும்.[33]

குழந்தைப் பேற்றிற்காகப் பிள்ளைப் பூச்சியைப் பழத்தில் வைத்து முழுங்கும் நம்பிக்கை மருத்துவம் பார்ப்பனர்களிடையே வழக்கிலிருந்ததை ஆ. மாதவையா தன் நாவல் ஒன்றில் பதிவு செய்துள்ளார். இதற்கு இணையான நம்பிக்கை ஆய்வுக்களத்திலும் இருந்துள்ளது. தொப்புள் கொடி குழந்தைக்கும் தாய்க்குமான இணைப்பு. குழந்தைக்குக் கண்ணேறு படாமலிருக்க, தொப்புள் கொடி நூலில் சுற்றப்பட்டு, தொட்டிலில் கட்டித் தொங்கவிடப்படுகிறது. தொப்புள் கொடிக்கு மேலான சக்தி உண்டு என்ற நம்பிக்கையை இது உறுதிப்படுத்துகிறது. இந்நம்பிக்கையே இங்கும் செயல்படுகிறது. பெண் இதை உட்கொள்வதின் மூலம் தாய்மைப்பேறு கிடைக்கும் சக்தி பிறக்கிறது என்ற நம்பிக்கை எழுகிறது.

நம்பிக்கை மருத்துவம் சடங்கு அடிப்படையிலானது. மருத்துவத்திற்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. தவறான புரிதலே இந்நம்பிக்கை எழக் காரணமாக அமைகிறது. இந்நம்பிக்கைகள் இசுலாமியர்களல்லாத பிற மக்களிடமும் வழக்கிலுள்ளன. பண்பாட்டு அடிப்படையில் குமரி மாவட்ட இசுலாமியர்கள் பிற சமூகத்தாரோடு ஒன்றிவிடுவதை இது உணர்த்துகிறது. கல்வியறிவு கிறித்தவ மக்களிடம் பரவலாக இருப்பது அவர்களிடம் இந்நம்பிக்கை மருத்துவம் இல்லாததற்குக் காரணமாக அமைகிறது. இசுலாமிய மக்களின் முதிய தலைமுறை, குறிப்பாகப் பெண்கள், கல்வியறிவைப் பெறாதவர்கள். கிறித்தவர்களுக்கென்று மருத்துவமனைகள் உள்ளதைப் போல், இசுலாமியர்களுக்கு மருத்துவமனைகள் இல்லாததையும் இதற்குக் காரணமாகச் சுட்ட வேண்டும். தவறான புரிதலே நம்பிக்கை மருத்துவத்திற்குக் காரணமாக அமைகிறது. ஆனால், அதேசமயம் பண்பாட்டைத் துலக்குவதாகவும் அமைகிறது.

## குழந்தைப்பேறு குழந்தை வளர்ப்பு

உயிரினங்கள் அனைத்தும் இளங்கன்றுகளைப் பாதுகாப்பாக வளர்ப்பதில் முனைப்புக் கொள்கின்றன. மனித சமூகம் பழங்குடி நிலையில் குழந்தை வளர்ப்பைச் சமூகக் கூட்டுப் பொறுப்பாகவே மேற்கொண்டுள்ளது. எனவே, குழந்தைப்பேறு, குழந்தை வளர்ப்பு

தொடர்பாக, குமரி மாவட்ட இசுலாமியர்களிடையே பல்வேறு நம்பிக்கைகள் வழக்கிலுள்ளன. இந்நம்பிக்கைகளை, சமயம் சார்ந்த நம்பிக்கைகள், சமயம் சாராத நம்பிக்கைகள் என இரண்டாக வகைப்படுத்த இயலும்.

குழந்தை பிறந்ததும், வலது காதில் பாங்கும், இடது காதில் இஹாமத்தும் ஓதுவது என்பது சமயம் சார்ந்த நம்பிக்கையாக அமைகிறது. இவ்வாறு ஓதுவதின் காரணமாகக் குழந்தை ஆரோக்கியமானதாகவும் சமயப்பற்றுள்ளதாகவும் வளரும் என்ற நம்பிக்கை குமரி மாவட்ட இசுலாமியர்களிடையே உள்ளது.

குழந்தையைத் தர்காவில் உறையும் புனிதரின் அருள் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையும் உள்ளது. இப்பாதுகாப்பிற்காக, சிலசடங்குகளும் நிகழ்த்தப்படுகின்றன.

> குழந்தை இரவுல பயந்து அழுதா யாசீன் ஓதிக் கட்டுவோம். பின்னும் கரஞ்சா தர்காவுக்குக் கொண்டு போய் ஓதியடிப்போம். குளச்ச தர்காவுக்குக் கொண்டு போனா அந்த மகான அடக்குன எடத்துல மூணு முற கொழந்தய சுற்றி எடுப்பா. அப்போ 31 ரூபாய் கொடுக்கணும். தண்ணில பூவப் போட்டுத் தருவா அந்தப்பூவ தள்ள சாப்பிடணும். தண்ணிய வீட்டுல ஒரு இடத்துல வைப்போம். பின்னக் குழந்த அழாது".[34]

இரவில் பயந்து அழுவது, தீய ஆவிகளைக் கண்டு என நம்பப்படுகிறது. தர்காவுக்குக் கொண்டு செல்லும்போது தீய ஆவி குழந்தையை விட்டு விலகிவிடுகிறது. கோரியை மூன்று முறை குழந்தையைக் கொண்டு சுற்றும்போது தர்காவில் உறையும் மேலான சக்தியின் அருளுக்கு உள்ளாகிறது. கோரியின் மீது இடப்பட்டிருக்கும் பூ அச்சக்தியைச் சேமித்து வைக்கிறது. அதைத் தண்ணீரில் விட்டு வீட்டிற்கு எடுத்துச்செல்வதன் மூலம் மேலான சக்தி வீட்டிற்குள்ளும் வந்து குழந்தையைப் பாதுகாக்கிறது. இவ்விரு நம்பிக்கைகளும் சமயம் சார்ந்த நம்பிக்கைகளாக அமைகின்றன.

குழந்தை வளர்ப்பு தொடர்பான பெரும்பான்மையான நம்பிக்கைகள் சமயம் சாராதவைகளாகவே அமைகின்றன. வீட்டிற்கு வெளியே குழந்தையை எடுத்துச் செல்லும்போது, குழந்தை பாதுகாப்பற்றதாக அமைகிறது.

> பிறந்த குழந்தயைத் தாயத் தவிர மாமன் சித்தி வெளியில கொண்டு போவலாம் ஏன்னா அவங்கமேல காத்து கறுப்பு அண்டாது. ஆனா, அவங்களும் இரும்புத் துண்டை வைத்திருப்பாங்க.[35]

காத்து கறுப்பு என்பன பேய்களைக் குறிக்கின்றன. பேய்களினால் குழந்தைக்கு ஆபத்து விளையும் என்பது சங்ககாலம் தொட்டுத் தொடர்ந்துவரும் தமிழர்களின் நம்பிக்கை. தாயைவிடத் தாய்மாமன், அல்லது சித்தி, பேய்களிடமிருந்து குழந்தையைக் காப்பாற்ற முடியும் என்பது குழந்தையை வளர்ப்பதில் சமூகப் பொறுப்பு எனும் பழங்குடி வாழ்வின் எச்சமாக அமைகிறது. இரும்பு எனும் உலோகத்தைக் கண்டு பேய்கள் அஞ்சும் என்பது நாட்டார் நம்பிக்கைகளில் அனைத்துச் சமூகத்தினரிடமும் பரவலாக உள்ள நம்பிக்கைகளுள் ஒன்று. இந்நம்பிக்கையும் எவ்வகையிலும் சமயத்தோடு தொடர்பானதல்ல.

ஆறு மணிக்குப் பிறகு குழந்தையை வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது என்னும் தடை உள்ளது. தடை மீறப்படும் போது அதற்கான பரிகாரமும் முன் வைக்கப்படுகிறது.

> ஆறு மணிக்குப் பிறகு வெளியில கொண்டு போக வேண்டுமானால தலையில் கூரைச் சாவியும், ஆணித்துண்டும் வச்சுப் போகணும். நிழல் பச்சில எடுத்துக் குழந்தையின் கால்கை தடவி, தாயின் கையிலும் தடவி, குழந்தையின் துணியிலும் போட்டு வைக்கணும். யாத்திரை போறப்போ பச்சிலையையும் இரும்புத் துண்டையும் தள்ளயிக்கும் புள்ளயிக்கும் துணி அடியில போடணும்.[36]

கூரைச்சாவி என்பது ஓலைக்கூரையின் ஒரு சிறு துணிக்கையைக் குறிக்கிறது. மக்கள் அனைவரும் ஓலை வேய்ந்த வீட்டில் வாழ்ந்த காலத்தில் இந்நம்பிக்கை எழுந்திருக்க வேண்டும். ஓலைக்கூரையின் சிறு துணிக்கையைக் குழந்தையின் தலையில் வைப்பதன் மூலம் குழந்தை வீட்டினுள் இருக்கிறது என்ற உணர்வு தோற்றுவிக்கப்படுகிறது. காத்து கறுப்புகள் ஏமாந்துவிடக்கூடும். நிழல் பச்சிலையை இனங்காட்ட நாட்டார் மறுத்துவிடுகின்றனர். அதைக்குறித்து வெளியில் சொன்னால் அதன் பலன் இல்லாததாகிவிடும். தேவைப்படும்போது மட்டுமே அதைப் பறித்துத் தருவர்.

குறிப்பிட்ட இம்மூலிகைக்குப் பேய்களை அண்டவிடாது தடுக்கும் சக்தி உள்ளது. குறிப்பிட்ட இந்நம்பிக்கை எல்லாச் சமூகத்தாரிடமும் உள்ளது.

தாயின் நச்சுக்கொடியும், குழந்தையின் தொப்புள் கொடியும், மேலான சக்தி கொண்டவைகளாக நம்பப்படுகின்றன. குழந்தை பிறந்த பின்பு இவை பாதுகாக்கப்படவும் வேண்டும். அல்லாவிடில் குழந்தைக்குத் தீங்கு நேரிடும். "தாயின் நச்சுக் கொடியை வீட்டின் பக்கத்துல புதைக்கணும். 16 நாள் வர தண்ணீவிடணும். மறி கடக்காம இருக்க கல்லெடுத்து வைக்கணும்".[37] நச்சுக்கொடி உயிருள்ள உடலின் உயிரற்ற உறுப்பாகிறது. உயிரற்ற உறுப்பிற்கு ஏற்படும் தீங்கு உயிருள்ள உடலையும் பாதிக்கக் கூடும் என்ற நம்பிக்கை எழுகிறது. 16 நாள் என்பது இந்தியப் பண்பாட்டில் குறிப்பிடத் தகுந்த நாள் கணக்கு. இந்த நாள் முடிவது வரை அது பாதுகாக்கப்பட வேண்டும். நீரின்றி வாழ இயலாது. எனவே, உயிரற்ற உறுப்பிற்கும் தண்ணீர் தரப்பட வேண்டும். இறப்புச் சடங்கிலும் 16-வது நாள் இறந்தவர் நினைவாக நடத்தப்படும் சடங்கிற்கு உரிய நாளாக அமைகிறது. உயிருள்ள உடலிலுள்ள உயிர், உயிரற்ற இந்த உறுப்பிலும் இருத்தல் கூடும் என்ற நம்பிக்கை எழுகிறது. மறிகடத்தல் என்பது தாண்டிச் செல்லுதலைக் குறிக்கும். ஒரு கல்லை அதன் மேல் வைப்பதன் மூலம் நச்சுக்கொடி புதைக்கப்பட்ட இடம் என அறிவுறுத்தப்படுகிறது. வீடுகள் நெருக்கமாக எழும் இச்சூழலில் இந்நம்பிக்கை மொழியில் இருந்தாலும் தற்போது செயல் வடிவம் பெறுவதில்லை.

நச்சுக்கொடி பாதுகாக்கப்பட வேண்டுமென்பது தடை. தடை மீறப்படும் போது அதன் விளைவும் சுட்டப்படுகிறது. இது வருவதை உணர்த்தும் குறியாகிறது.

"நாய் நச்சுக்கொடியை நக்கினால் தாயின் பால் வற்றிடும் அடுத்த குழந்த கிடைக்காது".[38] நச்சுக்கொடி நாயால் தீண்டப்படும் போது தாய்மையின் வெளிப்பாடான பால் வற்றிவிடும். தாய்மையை இழப்பதினால் மீண்டும் குழந்தைப்பேறு அப்பெண்ணிற்குக் கிடைக்காததாகிவிடும். உயிரற்ற உறுப்பை உயிருள்ள உடலோடு இணைப்பதன் காரணமாக இந்நம்பிக்கை எழுகிறது. இதற்கான பரிகாரமும் சுட்டப்படுகிறது. "தக்கல பீரப்பா தர்காவுக்குப் பால் கொடம் எடுப்பதா நேர்ந்தா தாய்க்குப் பால் ஊறும்".[39] குமரி மாவட்ட இசுலாமியர் தர்காவை மேலான சக்தியின் இருப்பிடமாகக் கருதுகின்றனர். பாலை

நேர்ச்சையாக வழங்குவதன் மூலம் தர்காவில் உறையும் புனிதர் அருளால் தாய் தன் தாய்மைப் பண்பை மீட்டுக் கொள்கிறாள்.

குழந்தை வளர்ப்பில் ஒவ்வொரு பருவமும் அதற்கான நம்பிக்கைகளைக் கொண்டுள்ளது. குழந்தை தவழ்ந்து தன்னுடைய முயற்சியால் படியைத் தாண்டுதல் என்பது முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. "குழந்தை தவழும் பருவத்தில் படி தாண்டி வரும் முன்னால் ஒவ்வொரு படியையும் மூணுமுறை சுற்றி, முதல் வாசல் படியில் தேங்கா ஓடைப்போம்".[40] மூன்று முறை வலம் வருதல், தேங்காய் உடைத்தல் ஆகியவை நாட்டார் வழிபாட்டுமுறையை நினைவூட்டுகின்றன. இங்கு, படி குழந்தையின் இயக்கத்தைத் தடை செய்கிறது. குழந்தையை வீழ்த்தாமலிருக்க, படிக்குச் சாந்தி செய்யப்படுகிறது. குழந்தை வலம் வந்து தேங்காய் உடைப்பதினால், படி மகிழ்ந்து குழந்தையைத் தடை செய்யாமலிருக்கும்.

குழந்தைக்கு முதல் முறையாகப் பல் விழுவது முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது.

> குழந்தைக்கு முதல் முறையா பல் விழும் போது, பல்ல பசுவின் சாணத்துடன் சேத்து உருட்டிக் கூரமீது எறியணும். கர்ப்பிணி வீட்டுக் கூரை மீது எறியணும். வயத்துல வளருற குழந்தையைப் போல் பல்லும் வளரும்.[41]

இங்கு உயிருள்ள உடலில் உயிரற்ற உறுப்பு என்ற நிலைப்பாடு அழுத்தம் பெறுகிறது. கர்ப்பிணியின் வயிற்றில் குழந்தை வெற்றிடத்திலிருந்து புதிதாக வளர்ந்து வருகிறது. குழந்தைக்குப் பல் விழும் போது வெற்றிடம் ஏற்படுகிறது. அதிலிருந்து புதிய பல் முளைப்பதற்குக் கர்ப்பிணியின் வீட்டின் மீது எறியப்படுகிறது. கர்ப்பிணியின் வயிற்றில் குழந்தை வளர்வதுபோல் புதிய பல்லும் வளரும் என்ற நம்பிக்கையும் எழுகிறது. பல் விழுவதல்ல, பல் முளைப்பதும் சடங்கிற்குரிய நிகழ்வாக அமைகிறது. "பல் முளைக்கும்போது பல் கொழுக்கட்ட செய்து கொடுக்கணும்".[42] கொழுக்கட்டை தருவதின் மூலம் பல் முளைக்கும் செய்தி சமூகத்திற்கு அறிவிக்கப்படுகிறது. நாகரிகமடைந்த மக்கள் வாழ்வில் எஞ்சி நிற்கும் பழங்குடி வாழ்வின் பகுதியாக இதனைச் சுட்ட வேண்டும்.

## தீட்டு

தீட்டு குறித்ததான நம்பிக்கையும் குமரி மாவட்ட இசுலாமிய மக்களிடையே நிலவுகிறது. மாத விலக்கான நாட்களின் தீட்டு தமிழர் வாழ்வில் சங்ககால முதல் தொடர்ந்து வருகிறது. இதே காரணத்தினால் தான் பெண் அனைத்துச் சமயங்களிலும் வழிபாட்டினை முன்னெடுத்துச் செல்லும் தகுதி கொண்டவளாகக் கருதப்படுவதில்லை. மாதவிலக்கான நாட்களில் வழிபாடு தொடர்பான எதையும் செய்யும் உரிமை அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. "தொழக்கூடாது பள்ளி, தர்கா போகக்கூடாது"[43] என்னும் கட்டுப்பாடு இசுலாமிய சமூகத்தில் இன்றும் உள்ளது. குறிப்பிட்ட நாட்களில் அவள் அசுத்தமானவளாகக் கருதப்படுகிறாள். அவள் தீண்டும் போது அந்த இடமும் அசுத்தமுடையதாகிறது. "7ஆம் நாள் நகத்த வெட்டி நிய்யத் சொல்லி குளிக்கணும்".[44] தீட்டுக் காலத்தில் வளர்ந்த நகமும் அசுத்தமானது. எனவே, தூய்மைப்படுத்துதலின் ஒரு பகுதியாக அதுவும் களையப்பட வேண்டும். பெண்கள் கல்விச்சாலைக்குச் செல்லும் இன்றைய சூழலில் பெண்கள் ஒதுக்கி வைக்கப்படுவதில்லை. "ஒரே துணி போட்டு ரூமுல இருக்கணும்; வேற ஆள பாக்கக்கூடாது. தனிப் பாத்திரம் தான்"[45] என ஆய்வுக்களத்தில் நடுத்தர வயதுப் பெண்களால் நேற்றைய நிலை நினைவுகூரப்படுகிறது. தீட்டுக்குறித்த நம்பிக்கை குமரி மாவட்ட இசுலாமிய மக்களைப் பிற சமூகத்தாரோடு இறுகப் பிணைக்கிறது.

தீட்டுத் துணி பாதுகாக்கப்படுகிறது. அத்துணி அசுத்தமடைந்தால் அது பெண்ணிடமும் தீய விளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடும். "துணிய பத்திரப்படுத்தி வைக்கணும். திருமணத்துக்கு முன்ன துணிய பல்லி, பாச்சா, மோந்து பாத்தா குழந்தை கிடைக்காது. திருமணத்துக்குப் பின் குழந்தை பொறந்த பின் முகந்து பாத்தா வெள்ளப்படும்".[46] திருமணமாகாத பெண்ணுக்குக் குழந்தைப் பேற்றை இல்லாது ஆக்கும் போது, குழந்தை பிறந்த பெண்ணிற்குப் பிறப்புறுப்பு சார்ந்த நோயையும் தடை மீறுதல் வருத்தக்கூடும். மாத விலக்கிற்கும், குழந்தைப் பேற்றுக்குமான தொடர்பு இத்தகைய நம்பிக்கைக்குக் காரணமாக அமைகிறது.

## வருவதை உணர்த்தும் குறிகள்

குமரி மாவட்ட இசுலாமியர் பல வாழ்வியல் நிகழ்வுகளை, வருவது உணர்த்தும் குறிகளாக நம்புகின்றனர். கள ஆய்வில் இத்தகைய நம்பிக்கைகளைத் திரட்ட முடிந்தது. கனவு, எதிர் காலத்தை உணர்த்தும்

என்பதிலும் நம்பிக்கை கொள்கின்றனர். இவை பெரும்பாலும் மரணத்தைக் குறித்ததாகவே அமைகின்றன. வருவது உணர்த்தும் குறிகளை, வாழ்வில் மனிதனால் தடை செய்ய இயலாத நிகழ்வுகள், கனவில் வெளிப்படும் குறிகள் என இரண்டாக வகை செய்து கொள்ள இயலும்.

அன்றாட வாழ்வில் நிகழும் பல நிகழ்வுகளை மனிதனால் தடை செய்ய இயலாது. இத்தகைய நிகழ்வுகள் எதிர்காலத்தில் நடக்க இருப்பதை உணர்த்துகின்றன என நம்பிக்கை கொள்கின்றனர். "காகம் தண்ணீரில் உடம்பக் கழுவுவதப் பார்க்கக் கூடாது. அப்படிப் பாத்தா மரணம் வரும்". வருவது உணர்த்தும் குறிகள் இரண்டு கூறுகளைக் கொண்டன. காகம் உடலைத் தண்ணீரில் கழுவுவது முதல் கூறு. இது, மனிதனால் தடை செய்ய இயலாதது. இதைப் பார்வையிடுவது மட்டுமே தடை செய்யப்படுகிறது. இரண்டாவது கூறு, நிகழப்போகும் மரணத்தைக் குறிக்கின்றது. இங்குப் பரிகாரமாக ஏதும் சுட்டப்படவில்லை. "கன்னி மூலயில் பல்லி அடிச்சா மரணம் வரும்". தமிழ்ப்பண்பாட்டில் வீட்டின் கன்னிமூலை புனிதமானது. 'இல்லுறை தெய்வம்' கன்னிமூலையில் இருப்பதாகவே நம்பப்படுகிறது. திருமணம் ஆகாது இறந்த பெண் குழந்தைகளின் ஆவியும் கன்னி மூலையில் உறைவதாக நம்பப்படுகிறது. ஆனால், இசுலாமியர்களிடையே இத்தகைய நம்பிக்கை இல்லை. என்றாலும், கன்னிமூலை அதற்கான புனிதத்தைக் கொண்டுள்ளது என்னும் நம்பிக்கை இவ்வழக்காற்றில் வெளிப்படுகிறது. பல்லி, கன்னிமூலையில் இருந்து குரல் எழுப்புவது மரணத்தை உணர்த்தும் குறியாக நம்பப்படுகிறது. பல்லி மனிதர் உடலின் மேல் விழுவதும் மனிதனால் தடைசெய்ய இயலாத நிகழ்வு. நிகழப்போகும் மரணத்தை இது குறிப்பதாக நம்பிக்கை கொள்கின்றனர். இந்நிகழ்வுகளின் பலனைத் தடை செய்யப் பரிகாரங்கள் ஏதும் இல்லாததையும் குறிப்பிட வேண்டும்.

இத்தகைய நிகழ்வுகள் மட்டுமல்லாது சில கனவுகளும் மரணத்தைக் குறிப்பதாகக் குமரி மாவட்ட இசுலாமியர் நம்பிக்கை கொள்கின்றனர். "வெள்ளி, திங்கள் இறந்தவங்க கனவுல வந்தா மரணம் வரும்" வெள்ளி, திங்கள் என்னும் இரு நாட்களில் கனவில் இறந்தவர்களைக் காண்பது நிகழப்போகும் மரணத்தை முன்னுணர்த்துவதாக நம்புகின்றனர். கனவை வாழ்வோடு தொடர்புபடுத்தும் நம்பிக்கை தமிழ்ப்பண்பாடு சார்ந்தது. குமரி மாவட்ட இசுலாமியர் இப்பொதுப் போக்கோடு உடன்படுகின்றனர். "திரி

கொளுத்தி வைப்பதாகக் கனவு கண்டால் மரணம் வரும்". மரணச் சடங்கில் சாம்பிராணித் திரியைக் கொளுத்தி வைப்பதை இசுலாமியர்களிடையே பரவலாகக் காணமுடிகிறது. மரணம் நிகழ்ந்த பின்னும் குறிப்பிட்ட நாள் வரை பத்தி கொளுத்தி வைக்கப்படுகிறது. எனவே, பத்தி மரணத்தோடு தொடர்புடையதாகிறது. கனவில் இதைக் காண்பது மரணத்தோடு தொடர்புப்படுத்தப்படுகிறது. "தண்ணி ஓடேது மாதிரி கனவு கண்டா மரணம் வரும்" குமரி மாவட்ட இசுலாமியர் மரணச் சடங்கில் இறந்தவர் உடலைக் குளிப்பாட்டும் தண்ணீர் ஒரு குழியில் சென்று விழுமாறு செய்கின்றனர். இங்கு, தண்ணீர் ஓடுவது மரணத்தோடு தொடர்புடையதாகிறது. கனவில் இதைக் காண்பதும் மரணத்தோடு தொடர்புபடுத்தப்படுகிறது. திருமணத்தைக் கனவில் காண்பதும் மரணத்தைக் குறிப்பதாக நம்பிக்கை கொள்கின்றனர். இந்த நம்பிக்கை பிற சமூகத்தாரிடமும் உள்ளது.

தடை செய்ய இயலாத சில, வருவது உணர்த்தும் குறிகளுக்குத் தகுந்த பரிகாரம் செய்வதன் மூலம் தீய பலனை மாற்றிவிடவும் இயலும். "பிறையைத் தெரியாமல் பார்த்தா ஓடிப்போய்ப் பணத்த எடுக்கணும். ஒடனே பணம் எடுத்தா அந்த மாசம் முழுசும் பணம் புரளும்."[47] பிறையை எதேச்சையாகப் பார்ப்பது நல்லதல்ல. ஆனால், பிறையைப் பார்த்தவுடன் பணத்தைப் பார்த்து விட்டால் பலன் நல்லதாகி விடக்கூடும். நாய், பன்றி போன்ற மிருகங்களைத் தொடுவதும் தீங்கானது எனக் குமரி மாவட்ட இசுலாமியர் நம்பிக்கை கொள்கின்றனர். பன்றியைத் தொட்டால் ஏழு தடவையும், நாயைத் தொட்டால் ஒரு தடவையும் தண்ணீரால் தூய்மை செய்ய வேண்டும். பன்றி, நாய் போன்ற மிருகங்கள் இசுலாமியச் சமயத்தில் விலக்கப்பட்ட மிருகங்களாக அமைகின்றன. எனவே, சமய நம்பிக்கையே இதற்குக் காரணமாக அமைகிறது. சமய அடிப்படையில் தோற்றம் கொண்ட நம்பிக்கையாக இதனைக் கொள்ள வேண்டும்.

மனிதனால் தடைசெய்ய இயலும் நிகழ்வுகளும் வருவது உணர்த்தும் குறிகளாக அமைகின்றன. திருமணம் முடிந்து பதினாறு நாள் வரை மீன் உண்பதும், பெண்கள் வெறுங்குடத்துடன் வரும்போது எதிரே செல்வதும், இரவு நேரத்தில் தலைவாருவதும், நகத்தை வெட்டி வீட்டிற்குள் எறிவதும் தீங்கை முன்னறிவிக்கும் குறிகளாகக் கருதப்படுகின்றன. ஆனால், இத்தகைய செயல்களைச் செய்யாதிருந்தால் வரப்போகும் தீமையைத் தவிர்த்து விடவும் கூடும்.

"பால் கொடுக்கும் பெண் மத்தவங்களுக்கு முடி வெட்டக் கூடாது. அப்படி வெட்டினா பெண் குழந்தை பிறந்திருந்தா ஒரு திரிப்பான்

முடியும், ஆண் குழந்தை பிறந்திருந்தா ஒரு தொறப்பா முடியும் கொட்டும்".[48] இதுவும் தடை செய்யப்பட்ட செயலே. இதைச் செய்யாதிருப்பதின் மூலம் தீய பலனைத் தவிர்த்து விடமுடியும்.

சகுனம், எதிர்ப்புப் பார்த்தல் போன்ற நம்பிக்கைகளையும் குமரி மாவட்ட இசுலாமியர்களிடையே காணமுடிகிறது. பூனை குறுக்கிடுதல், கால் தட்டுதல் போன்ற நம்பிக்கைகள் இவர்களிடமும் உள்ளன. ஆனால், இதற்காக நிகழ்த்தப்படும் பரிகாரங்கள் வேறுபடுகின்றன. தர்காவிற்குச் சென்று காணிக்கை இடுவதின்மூலம் வரவிருக்கும் தீமையைத் தவிர்த்துவிட முடியும் என நம்பிக்கை கொள்கின்றனர். இசுலாமியர் அல்லாதவர்களிடமும் இத்தகைய நம்பிக்கைகள் உள்ளன. வாகனங்களில் பயணம் செய்வோர், தடையற்ற பயணத்தின் பொருட்டு, சாலையோரத் தர்காக்களில் காணிக்கை செலுத்திவிட்டே பயணத்தைத் தொடர்கின்றனர். இங்கு இசுலாமியர் நம்பிக்கையை இசுலாமியர் அல்லாதவரும் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

## குறிப்புகள்

1. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், ப. 296.
2. மேலது, ப. 298.
3. மேலது, ப. 299.
4. மேலது, ப. 299.
5. மேலது, ப. 301.
6. மேலது, ப. 309.
7. தகவல் – ஆயிசா; ஊர் – ஆளூர்.
8. தகவல் – மாபுப்பீவி; ஊர் – தக்காத்தெரு.
9. தகவல் – அதிஷ் பாத்திமா; ஊர் – திருவரம்பு.
10. லூர்து, மு.கூ.நூ., ப. 381.
11. மேலது.
12. தகவல் – ஹஸீனா பேகம்; ஊர் – உதியார்விளை (குளச்சல்).
13. தகவல் – ஆஸியா பீவி; ஊர் – இனயம்.
14. தகவல் – ஹஸீனா பேகம்; ஊர் – உதியார்விளை (குளச்சல்).
15. மேலது.
16. தகவல் – கனிஷ் பாத்திமா; ஊர் – தேங்காப்பட்டணம்.
17. தகவல் – மாபுப்பீவி; ஊர் – தக்காத்தெரு.
18. தகவல் – இஸ்ரத்; ஊர் – இடலாக்குடி.
19. தகவல் – பாத்திமா; ஊர் – தக்காத்தெரு.
20. மேலது.
21. தகவல் – ஹஸீனா பேகம்; ஊர் – உதியார்விளை (குளச்சல்).
22. தகவல் – ஆயிசா; ஊர் – ஆளூர்.
23. பானு; ஊர் – கடையாலுமூடு.
24. மேலது.

25. தகவல் – ஹஸீனா பேகம்; ஊர் – உதியார்விளை.
26. மேலது.
27. தகவல் – அஷீனா பேகம்; ஊர் – குலசேகரம்.
28. தகவல் – மரியம் பீவி; ஊர் – களியக்காவிளை.
29. தகவல் – மாபுப்பீவி; ஊர் – தக்காத்தெரு.
30. மேலது.
31. தகவல் – ஆயிசா; ஊர் – ஆளூர்.
32. தகவல் – அதிஷ் பாத்திமா; ஊர் – திருவரம்பு.
33. தகவல் – முஃபியா; ஊர் – உதியார்விளை.
34. தகவல் – மாபுப்பீவி; ஊர் – தக்காத்தெரு.
35. தகவல் – நூர்தலீனா; ஊர் – ஆளூர்.
36. தகவல் – சீனத் பீவி; ஊர் – கோட்டையடி.
37. மேலது.
38. தகவல் – சுலேகா பீவி; ஊர் – மேட்டுக்கடை.
39. தகவல் – பாத்திமா; ஊர் – தக்காத்தெரு.
40. மேலது.
41. தகவல் – ஆஸியா பீவி; ஊர் – இனயம்.
42. தகவல் – இஸ்ரத்; ஊர் – மேட்டுக்கடை.
43. மேலது.
44. மேலது.
45. மேலது.
46. தகவல் – தஹிரா; ஊர் – திட்டுவிளை.

# இசுலாமியர் தர்காக்கள்

இசுலாம் ஒரு நிறுவன சமயம். அது தனக்கேயுரிய ஒழுங்கமைப்பினையும், உறுதியான சமயக் கோட்பாடுகளையும் கொண்டுள்ளது. நாட்டார் வழிபாடுகள் இதற்கு எதிரானவை. நாட்டார் வழிபாடுகள் நிறுவனங்களையும் இறுக்கமான அமைப்பினையும் கொண்டிருப்பதில்லை. தர்காக்களை நாட்டார் வழிபாட்டு இடங்களாகக் கொள்ள வேண்டும்.

இசுலாமியச் சமயக்கோட்பாட்டின் அடிப்படையில் இன்று தர்காக்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. என்றாலும், தர்காக்கள் மக்களை ஈர்க்கும் வழிபாட்டிடங்களாகவே இன்றும் நிலை பெறுகின்றன. தர்கா வழிபாட்டு முறை, தர்காக்களைப் பொறுத்து மாறுபடுகிறது. வழிபாட்டு முறை மரபாகத் தொடர்ந்து வருகிறது. எழுத்து வடிவிலான வழிபாட்டு முறை இதற்கில்லை. தர்காக்கள் அவற்றைச் சார்ந்த வாய்மொழி வழக்காறுகளில்தாம் நிலைகொள்கின்றன.

தர்கா தொடர்பான இவ்வாய்மொழி வழக்காறுகளை வகைப்படுத்தி முறையான ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் தர்கா தொடர்பான மக்களின் நம்பிக்கைகளுக்கான அடிப்படைக் காரணத்தை அறிந்துகொள்ள முடியும். இதன்மூலம் தர்காக்களின் தோற்றத்திற்கான காரணத்தையும் இனங்காண முடியும். இவ்வாய்வுக் களமான குமரி மாவட்டம் தர்காக்கள் நிறைந்த பகுதி. தர்காக்களைச் சூழ்ந்தே இசுலாமியர் குடியிருப்புகள் அமைந்துள்ளன. இசுலாமியர்களை மட்டுமல்லாது, இசுலாமியர் அல்லாதவர்களையும் ஈர்க்கும் புனித இடங்களாகத் தர்காக்கள் திகழ்கின்றன. தர்கா தொடர்பான நம்பிக்கைகள் சமூக மனத்தில் நிலைகொண்டு மரபாகத் தொடர்கின்றன. எனவே, குமரி மாவட்ட இசுலாமிய மக்களின் வழக்காறுகளை ஆராய்வதின் ஒரு பகுதியாக தர்கா தொடர்பான வழக்காறுகளையும் ஆராய்வது இன்றியமையாததாகிறது.

## நாட்டார் வழிபாடு

> சமயம் என்னும் சொல் நாட்டார் வழிபாட்டிற்குப் பொருந்துவதல்ல. "சமயம்" என்ற சொல் ஒழுங்கமைப்புக்கு உட்படுத்தப்பட்டு, நிறுவன மயமாக்கப்பட்ட ஒன்றிற்கே பொருந்தும். அது சில வரையறைகளுக்குக் கட்டுப்பட்டு இறுக்கமான அமைப்பாகத் திகழும். வழிபாடுகள் அத்தகையவையல்ல.[1]

நாட்டார் வழிபாட்டைக் குறித்த லூர்தின் சிந்தனையை இங்குக் குறிப்பிட வேண்டும். நாட்டார் வழிபாடு செய்யும் ஒவ்வொரு குழுவும் அதற்கே உரிய நடத்தைகளையும் நம்பிக்கைகளையும் கொண்டிருக்கின்றன. "இயற்கையிறந்த சக்தியின் மீது நம்பிக்கையும் பக்தியும் கொண்டு புனிதமான நடத்தைகளில் மக்கள் குழுவினர் ஈடுபடும்போதுதான் வழிபாடு தோன்றும்".[2] நாட்டார் வழிபாடு சில அடிப்படைப் பண்புகளைக் கொண்டிருக்கும். ஆன்மாக்கள் குறித்த நம்பிக்கை இவ்வடிப்படைப் பண்புகளில் ஒன்றாக அமையும். இவ்வான்மா நன்மையளிக்கும் தன்மை கொண்ட உயர்ந்த வல்லமை கொண்டதாக நம்பப்படும். வெளிப்படுத்தல், குறிகூறுதல் போன்ற நடத்தைகள் இவ்வழிபாட்டில் இடம்பெறும். நாட்டார் வழிபாடு குறித்த இவ்விளக்கத்தின் அடிப்படையில் தர்கா வழிபாட்டினை எதிர்கொள்ள வேண்டும்.

அனைத்துத் தர்கா வழிபாடும் ஒன்றுபோல் அமைவதில்லை. தர்காக்கள், பள்ளிவாசலைப் போன்று ஒழுங்கமைவிற்கு உட்பட்ட வழிபாட்டிடமாக அமைவதில்லை. ஒவ்வொரு வாரத்திலும் ஓரிரு நாட்களில்தான் வழிபாடு நிகழும். சிறப்பு வழிபாடு, வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும் விழாக்களின் போதுதான் நிகழும். ஒவ்வொரு தர்கா வழிபாடும் அதற்கே உரிய தனித்தன்மைகளைக் கொண்டிருக்கும். படைக்கப்படும் பொருள்களிலும் வேறுபாடுகள் இருக்கும். எடுத்துக்காட்டாகத் திட்டுவிளையில் மகான் வாகையடி பக்கீர் பாபா (வலியுல்லா) தர்காவில் குறிப்பிட்ட வகைப் பழம் மட்டுமே முக்கியத்துவம் பெறுகிறது. இதற்குக் காரணமாக வாய்மொழிக்கதை ஒன்றும் கூறப்படுகிறது. 'பக்கீர் பாபா' அப்பகுதியில் வாழ்ந்து வந்தபோது குழந்தைகளுடன் விளையாடுவது வழக்கம். மண்ணில் தன்னைச் சமாதி செய்யச் சொல்லிவிட்டு, பின் வேறொரு வழியாய் வெளிப்படுவார். 'பாளையன்கோட்டான்' பழக்குலையை மண்ணில் புதைக்கச் சொன்னார். பின், தோண்டிப் பார்த்தபோது அதிலிருந்து அவர் வெளிப்பட்டார்.

இக்காரணத்தினால் இத்தர்கா வழிபாட்டில் 'பாளையன்கோட்டான்' பழம் தவறாது இடம்பெறுகிறது.[3] குறிப்பிட்ட இப்பழம் படைக்கப்படுவது இத்தர்கா வழிபாட்டின் தனித்தன்மையாக உள்ளது.

விராலிக்காட்டுவிளை "வர்தாரி பெத்த அப்பா" தர்காவில் வறுத்தமாவு முக்கியமாகப் படைக்கப்படுகிறது.[4] இவர் வாழும் காலத்தில் அவரை நோக்கி வருகிறவர்களுக்கு வறுத்த அரிசியைப் பிரசாதமாகக் கொடுத்தார். இதனால், வறுத்தமாவைப் படைப்பதின் மூலம் இவர் அருளைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை எழுகிறது. சமய வேறுபாடின்றி அனைத்து மக்களும் வறுத்தமாவை இத்தர்காவில் படைக்கின்றனர்.

சுலைமான் சாகிப் தர்காவில் நெல் படைப்புப் பொருளாக அமைகிறது. இவர் வாழும் காலத்தில் உணவுத் தானியங்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்வதற்கான தடை இருந்தது. அதையும் மீறி, தான் பிச்சையாகப் பெற்ற நெல்லைக் கொண்டு போக முயன்றபோது களியக்காவிளையில் காவலர்களால் தடுக்கப்பட்டார். விடு என்று கூறி மறைந்தார். பின் தன் சொந்த ஊரான நேமத்தில் வெளிப்பட்டார்.[5] இந்நிகழ்வின் குறியீடாக அறுவடைதோறும் புதுநெல் இத்தர்காவில் படைக்கப்படுகிறது. இந்த எடுத்துக்காட்டுகள், தர்கா வழிபாட்டு முறைகள் தர்காவைப் பொறுத்து வேறுபடுவதை உணர்த்துகின்றன. இப்பண்பு தர்கா வழிபாட்டையும் நாட்டார் வழிபாடாக இனங்காட்டுகிறது.

தர்கா வழிபாட்டின்போது, இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளின் மீது வழிபாட்டுக்குழுவினர் முழுமையான நம்பிக்கை கொள்கின்றனர். தகவலாளியிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் இதனை உறுதிசெய்வனவாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக, பார்வதிபுரம் "ஷேக் ஜாண் முகம்மது பஸ்ஸீர் ஒலியுல்லா" தர்காவில் நடந்ததாகக் கூறப்படும் நிகழ்வைக் குறிப்பிட வேண்டும். இத்தர்கா நன்செய் நிலங்களின் நடுவில் அமைந்துள்ளது. தற்போது தர்காவின் அருகில் இசுலாமியக் குடியிருப்புகள் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. தொலைதூரங்களிலிருந்து இசுலாமிய மக்கள் வழிபாட்டிற்கு வந்து செல்கின்றனர். ஒரு சமயம் தர்காவின் முன்னால் தர்கா பயன்பாட்டிற்காகக் கிணறு வெட்டும் பணி நடந்து கொண்டிருந்தது. நன்செய் நிலத்தில் உழவுத்தொழில் செய்து கொண்டிருந்த விவசாயி ஒருவர் தன் நிலத்திலிருந்து தன் மாடுகளைக் கிணறு வெட்டும் இடத்தின் அருகில் கொண்டு வந்தபோது, திருப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மக்கள் விலகிச் செல்லுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

அதைப் புறக்கணித்து மாடுகளை அருகில் கொண்டு வந்தபோது, ஒரு மாடு கால் ஒடிந்து விழுந்தது. அதை எழுப்ப முயன்றபோது, மற்றொரு மாடு தர்காவிற்கு முன்னால் ஓடி விழுந்து இறந்தது. விவசாயி தர்காவிற்குள் சென்று 'ஷேக் ஜாண் முகம்மது பஷீர் ஷாகிப் ஒலியுல்லா'விடம் வேண்டியபோது கால் ஒடிந்த மாடு எழுந்து நின்றது. அவர் செய்த குற்றத்திற்குத் தண்டனையாக ஒரு மாடு மட்டும் பலியானது.[6] இப்படி ஒரு நிகழ்வு உண்மையில் நிகழ்ந்ததா என்ற கேள்விக்கே இடமில்லை. நிகழ்ந்ததாகவே மக்கள் நம்புகின்றனர். இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி தர்காவில் நிலைகொண்டுள்ளது என்னும் நம்பிக்கையின் அடிப்படையில்தான் தர்கா வழிபாடு நிலைகொண்டுள்ளது. வழிபாட்டுக்குழுவினர் முழுமையான நம்பிக்கையை இதில் கொண்டுள்ளனர். நாட்டார் வழிபாட்டுக்கூறாக இதனை உறுதியாக இனங்காண முடிகிறது.

திட்டுவிளை 'வாகையடி பக்கீர் பாபா' தர்காவில் இதற்கு இணையான கதைகளைச் சேகரிக்க முடிந்தது. ஒரு சமயம் வாகையடி தர்கா இருந்த இடத்தில் மாற்று மதத்தைச் சார்ந்த எட்டுவீட்டுப் பிள்ளைமார் பிணம் ஒன்றை அவர்கள் எரித்தனர். இச்செயலை வாகையடி தர்காவில் நிலைகொண்டுள்ள 'பக்கீர் பாபா' விரும்பவில்லை. பிணத்தை எரித்தவர்கள் வீடு திரும்பிய போது திகைத்து நின்றனர். எரிக்கப்பட்ட பிணம் அங்கே இருந்தது.[7] இந்நிகழ்வும் வழிபாட்டுக் குழுவினரின் நம்பிக்கையில் நிலைகொண்டுள்ளது. தர்காவில் சமாதியாக இருக்கும் பக்கீர் பாபாவின் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி மீதான நம்பிக்கையே வழிபாட்டு மரபைக் கட்டமைத்துள்ளது. இம்மரபு காலம் கடந்து தொடரவும் செய்கிறது.

இதே தர்காவில் அண்மையில் நிகழ்ந்ததாகக் குறிப்பிடப்படும் நிகழ்வையும் சுட்ட வேண்டும். தர்காவில் வருடாந்தர விழாவிற்காகக் கொடியேற்றும் சடங்கு நிகழ்ந்து கொண்டிருந்தது. அப்போது இறந்தவரின் 'அஸ்திக் கலசத்தை'க் கடலில் கரைப்பதற்கு இரு வாலிபர்கள் 'பைக்கில்' எடுத்துச்சென்றனர். வழிபாட்டுக்குழுவினர் மாற்றுப்பாதையில் செல்லுமாறு வேண்டினர். அஸ்திக் கலசத்தைக் கொண்டு வந்தவர்கள் உடன்பட மறுத்து, தொடர்ந்து பயணம் செய்ய முற்பட்டனர். 'பைக்கின் இயந்திரம்' செயல்பட மறுத்தும் பிடிவாதமாகப் பைக்கை அதே வழியில் உருட்டிச் சென்றனர். மூன்று நாட்களுக்குள் சாலை விபத்தில் பைக்கை ஓட்டியவர் மரணமடைந்தார்.[8] இந்நிகழ்வில் வழிபாட்டுக் குழுவினர் முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இவ்விரு நிகழ்வுகளுமே மரணம், இறுதிச்சடங்கு தொடர்பானவை. தர்காவின் புனிதத்தை மாற்றுச்சமயத்தினர் ஏற்க மறுத்ததின் விளைவு இது. முதல் நிகழ்வில் புதைக்கப்பட்ட பிணம் மீண்டும் வீடு போய்ச் சேர்ந்தது. தர்கா சமாதியாக இருந்தாலும் அது சமாதி மட்டுமல்ல. சமாதியாக மட்டுமே அதை எடுத்துக் கொள்பவர்கள் அதன் சக்தியை ஏற்க மறுக்கின்றனர். எனவே தான், மற்றொரு பிணத்தை அங்குப் புதைக்க முற்பட்டுள்ளனர். பக்கீர் பாபா தன் சக்தியை வெளிப்படுத்தி, அந்த இடத்தின் புனிதத்தை நிலைநாட்டியுள்ளார். இரண்டாவது நிகழ்வும் இதையே சமகால மொழியில் உணர்த்துகின்றது. தர்காவில் இறந்தவரின் மிச்சம் இருப்பதாகக் கருதியதால் தான் அஸ்திக் கலசத்தை அவ்வழியாக எடுத்துச்செல்ல முற்படுகின்றனர். இப்போதும் தர்கா ஒரு சமாதி மட்டுமே அல்ல என்பதை மேலான சக்தி உணர்த்தி விடுகிறது. இத்தகைய ஒரு சக்தி இருக்கின்றது என்ற நம்பிக்கை தான் தர்கா வழிபாட்டைத் தொடரச் செய்துள்ளது. நாட்டார் வழிபாட்டின் முக்கியக் கூறாக இதனைக் கொள்ள வேண்டும்.

நாட்டார் வழிபாடு, பல வழிபாட்டு நடத்தைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

> சமய வழிபாட்டு அனுபவங்களோடு பல வழிபாட்டு நடத்தைகளும் அடிப்படையாகக் காணப்படுகின்றன. சாந்தி செய்தல் (Propitiation), தூய்மை, கழுவாய், தவிர்த்தல், விலக்குத்துறவு, கேளிக்கைக் கூத்தாட்டம் (Orgies), வெளிப்படுத்தல் (Revelation), குறிகூறல் (Divination), சடங்கு, மந்திரம் பேன்றவை அந்த அடிப்படை நடத்தைகளாம்.[9]

இந்த வழிபாட்டு நடத்தைகளைத் 'தர்கா' வழிபாட்டிலும் இனங்காண முடிகிறது. எடுத்துக்காட்டாக, தர்கா வழிபாட்டில் இடம்பெறும் குறி கூறுதல் நடத்தையைக் குறிப்பிட வேண்டும்.

குறிகூறுதல் தற்போது எல்லாத் தர்காக்களிலும் நிகழ்வதில்லை. குமரி மாவட்டத்தில் தக்கலை 'பீரப்பா', வடசேரி மகான் 'துல்ஹாஷா', கடையாலுமூடு 'தைக்காயு சாகிப் ஒலியுல்லா', விராலிக்காட்டுவிளை 'வர்தாரி பெத்த அப்பா தர்கா' முதலிய தர்காக்களில் இன்றும் குறிகூறுதல் நிகழ்கிறது.

விராலிக்காட்டுவிளை தர்காவில் குறி சொல்லும் வழக்கம் காணப்படுகிறது. இங்கு ஒரு பெண்மணி குறி சொல்கின்றாள். குறி கேட்கப் போகிறவர்கள் போனவுடன், குறி சொல்பவர் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டு தர்காவில் அமர்ந்திருக்கும் மகானின் கோரிமுன் அமர்கின்றாள். பின்னர், திரி கொளுத்தி வைத்து விட்டு மகானிடம் வேண்டுதல் செய்கின்றாள். அப்போது அவள் உடம்பில் மகானின் அருள் நடுக்கம் கொள்கின்றது. பின், வந்தவர்களின் தேவை என்ன என்பதைக் கூறுகின்றாள். முடிந்தபின் அவர்கள் கொடுக்கும் காணிக்கையைப் பெற்றுக்கொண்டு, தீர்த்த நீர் கொடுக்கின்றாள். சிலருக்கு எண்ணெய்யை மந்திரித்துக் கொடுப்பதும் உண்டு. ஆளூர் சேனம்மா தர்காவிலும் இன்றும் குறிகூறுதல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

குறிகூறுதல் என்பது, குறி கேட்பவர், குறி கூறுபவர் ஆகிய இருவரும் இணைந்த நிகழ்வாக அமைகிறது. இசுலாமிய மக்கள் மட்டுமின்றி, அனைத்துச் சமயத்தவரும் குறி கேட்பவர்களாக அமைகின்றனர். குறி கூறுபவர் இசுலாமியச் சமயத்தவராகவே அமைவர். குறி சொல்பவர் பள்ளிவாசல் வழிபாட்டிற்குப் பொறுப்பானவராக அமைய வேண்டும் என்பதில்லை. தர்காவில் குறிகூறும் வரம் பெற்றவர்கள் இந்நிகழ்வை நிகழ்த்துகின்றனர். 'ரலியுல்லா' என்னும் பெண் தர்காக்களில் பெண்ணும், 'வலியுல்லா' என்னும் ஆண் தர்காக்களில் ஆணும் குறி கூறுகின்றனர்.

குறிகூறும் நிகழ்வு குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே நிகழ்கிறது. குறி கூறுவதற்கு முன், குறி சொல்பவர் தன்னைத் தூய்மை செய்து கொள்ளுவார். பெண் தர்காக்களில் குறி கூறுபவரின் மாதவிலக்கு நாட்களில் குறி கூறுவது நிகழ்வதில்லை. தூய்மை வற்புறுத்தப்படுகிறது. குறிசொல்பவர், மேலான சக்தி ஒன்றைத் தன்னில் இருத்திக் கொள்ளத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். குறி சொல்பவர் உடலில் மேலான சக்தி புகுந்ததற்கான அடையாளம் தோற்றம் கொள்கிறது.

குறிகேட்பவர் தன் வாழ்வில் நடந்த நிகழ்வுகளுக்கான காரணங்களை அல்லது தன் எதிர்பார்ப்பு நிறைவேறுமா என்பதற்கான பதிலை அல்லது தன் நோய்க்கான காரணத்தை, பின் அதிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழியை போன்ற எத்தனையோ காரணங்கள் நிமித்தம் குறிகேட்கும் நிகழ்விற்கு வருகின்றனர். ஆளூர் சேனம்மா தர்கா, குளச்சல் செய்கு வாப்பு ஹூசேன் தர்கா, தக்கலை பீரப்பா தர்கா முதலிய தர்காக்களில் குறிகேட்பவர் தன் குறை நீங்கக் குறிப்பிட்ட

நாட்களில் அங்குத் தங்கிச் செல்லுமாறு பணிக்கப்படுவர். இவ்வாறு பணிக்கப்படுபவர்கள் முழு நம்பிக்கையுடன் தங்கிச்செல்கின்றனர். எடுத்துக்காட்டாக, சேனம்மா தர்காவில் தோல் வியாதியின்பொருட்டுத் தங்கி இருக்கும் தகவலாளி ஒருவரைக் குறிப்பிட வேண்டும். தோல் வியாதியின் காரணமாகத் தர்காவை வந்தடைந்த அவர், 41 நாள்கள் தங்கியிருக்குமாறு பணிக்கப்பட்டார். முதலில் நோய் அதிகரித்ததின் காரணமாகத் தர்கா கிணற்றில் குதித்து உயிரைவிடத் துணிந்தார். பின், காப்பாற்றப்பட்டு நம்பிக்கையுடன் தொடர்ந்தார். நோய் முழுமையாகக் குணமடைந்து[10] அதற்கான நேர்ச்சைச் சடங்கை நிறைவேற்ற வருகை தந்த போது ஆய்வாளரைச் சந்தித்தார். இத்தகைய நம்பிக்கையே குறிகேட்க விரும்புபவர்களைத் தர்காவை நாடும்படிச் செய்கிறது.

குறிகேட்க விரும்புபவர்கள் பூ, ஊதுபத்தி, பழம் முதலிய பொருள்களைக் கொண்டு செல்ல வேண்டும். குறி சொல்பவர் அதனைப் பெற்றுக் கொண்ட பின், அதற்கான தொழுகையை நிகழ்த்துவார். தனக்குள்ளாக மந்திரங்களைக் கூறிக் கொண்டு படிப்படியாகச் சக்தியைத் தனக்குள் இருத்திக் கொள்கிறார். இப்போது குறி கேட்பவர் வருகை தந்ததற்கான காரணத்தை அவரால் கூற முடிகிறது. அக்குறை எதனால் தோற்றங்கொண்டது என்பதையும் உணர்த்துகிறார். அதற்கான பரிகாரமும் கூறப்படுகிறது. மக்கள் இதனைக் 'கணக்குக் கூறுதல்' என்று கூறுகின்றனர். இக்கணக்குக் கூறுதல், நாட்டார் சமய வழிபாட்டில் சிறுதெய்வ வழிபாட்டுக் கூறுகளுள் ஒன்று. அதற்கான பரிகாரமும் கூறப்படுகிறது. தொடர்ந்து குறி சொல்பவர் தன் பழைய நிலைக்குத் திரும்புகிறார். அப்போது, குறி கேட்பவர் தரும் காணிக்கையைப் பெற்றுக் கொண்டு, சில ஆலோசனைகளையும் கூறுகிறார்.

தகவலாளிகளின் கூற்றுப்படி, குமரி மாவட்டத் தர்காக்கள் அனைத்திலும் கணக்குச் சொல்லுதல் என்ற குறிகூறுதல் நடைமுறையில் இருந்தது. அண்மைக் காலங்களாகப் படிப்படியாக மறைந்தும் வருகிறது. 'ஜமாத்துகள்' இதற்கு எதிரான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, தக்கலை பீரப்பா தர்காவில் மிக அண்மைக்காலமாக நடைமுறையில் இருந்த கணக்குக்கூறுதல் இன்று தடை செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளர் ஆய்வின் துவக்கத்தில் பதிவு செய்த தர்காக்களில் கூட ஆய்வின் முடிவில் இவ்வழக்காறு வழக்கிழந்து உள்ளது.

குறி கேட்கும் நிகழ்வில், குறி சொல்பவர் ஒரு சிறப்பு நிலையை அடைந்து பின்னர், பழைய நிலைக்குத் திரும்புகிறார். சிறப்பு நிலையில்

வருவது கூறும் அல்லது நோயைத் தீர்க்கும் சக்தியை அவர் பெறுவார். இத்தகைய குறிகூறுதல் நாட்டார் வழிபாட்டின் முக்கிய நிகழ்வாக அமைகிறது. இதனடிப்படையில் தர்கா வழிபாட்டினை நாட்டார் வழிபாடாக உறுதிபடக்கூறமுடியும்.

தர்காக்களில் நிகழ்த்தப்படும் நேர்ச்சைச் சடங்கு, தர்கா வழிபாட்டை நாட்டார் வழிபாடாக இனங்காண மற்றொரு கூறாக அமைகிறது. தங்கள் குறைகளுக்குத் தீர்வு காணத் தர்காக்களை நாடும் பக்தர்கள் குறிப்பிட்ட ஒன்றை நிறைவேற்றுவதாக நேர்ந்து கொள்கின்றனர். பின் அதை நிறைவேற்றவும் செய்கின்றனர்.

இடலாக்குடி "அஸ்ரத் பாவா காசிம் ஒலியுல்லா" தர்காவில் குழந்தைப்பேறு இல்லாதவர்கள் குழந்தைப் பேற்றிற்காக வேண்டுதல் செய்கின்றனர். வேண்டுதல் நிறைவேறினால் தர்காவில் தொட்டில் கட்டுவதாகவும், பிறந்த குழந்தைக்கு அவர் பெயரில் ஒரு பகுதியைச் சூட்டுவதாகவும் நேர்ந்து கொள்கின்றனர். தொட்டில் கட்டுவதையும் பெயர் சூட்டுவதையும் தர்காவிலிருந்து பதிவு செய்ய முடிந்தது.[11]

பிறந்த குழந்தைக்குக் கொடுக்கப் பால் இல்லாத தாய்மார்கள், தர்கா வருட விழாவின் போது பால்குடம் எடுப்பதாக வேண்டிக் கொள்கின்றனர். இவ்வாறு வேண்டுதல் செய்த தாய்மார்கள் விழாவின் போது பால்குடம் எடுப்பதையும் பதிவு செய்ய முடிந்தது.[12]

தர்கா சமாதியில் இருக்கும் புனிதர் வாழும் காலத்தில் விரும்பி உண்ட உணவுப்பொருள்கள் குறை தீருவதற்கு வேண்டுதலாகப் படைக்கப்படுகின்றன. புலியூர்க்குறிச்சி ஹானஸா ஒலியுல்லா தர்காவில் அவர் விரும்பி உண்ட சேவல் கோழி பிரியாணியைக் குறை தீர்த்ததின் நன்றிக்கடனாகப் படைக்கின்றனர்.

தர்காவில் நிறைந்திருக்கும் புனித ஆன்மாவிற்கும், நாட்டார் தெய்வங்களுக்குமிடையில் தொடர்பும் சில தர்காக்களில் கற்பிக்கப்படுகிறது. 'சேனம்மா' தர்காவில் புனிதரான சேனம்மாவிற்கும் அதன் அருகில் இருக்கும் மாடனான சேனாண்டனுக்கும் இடையே நட்பு இருப்பதாக நம்பப்படுகிறது. இருவரும் உயிருடன் வாழும் பொழுது நண்பர்களாக இருந்தவர்கள். அதன் நினைவாக, சேனம்மாளுக்குப் படைக்கப்படும் நேர்ச்சைப்பொருளில் ஒரு பகுதி சேனாண்டனுக்கும் படைக்கப்படுகிறது.[13] பார்வதிபுரம் 'ஷேக் ஜாண் பக்கீர் ஒலியுல்லா' தர்காவிற்கும் அருகில் உள்ள மாடன் கோயிலுக்கும் தொடர்பு இருப்பதாக நம்பப்படுகிறது.[14]

மண்டைக்காடு காதர் பீவி தர்காவில் நிறைந்திருக்கும் புனிதருக்கும் மண்டைக்காடு தேவிக்கும் தொடர்பு இருப்பதாக நம்பப்படுகிறது.

பெரும்பாலும் இத்தகைய நம்பிக்கை, தர்காவின் இந்துப் பக்தர்களிடையே நிலவுகிறது. ஆளூர், பார்வதிபுரம் ஆகிய இடங்களில் தர்காவில் இந்து வழிபாட்டாளர்களிடமிருந்துதான் இத்தகவலைப் பெற முடிந்தது. ஆனால், மண்டைக்காட்டிலுள்ள இசுலாமியரிடமும் இந்த நம்பிக்கை உள்ளது.[15] நாட்டார் வழிபாட்டாளர்கள் தர்காக்களையும் சமய வேறுபாடின்றி நாட்டார் வழிபாட்டிடமாகக் கருதியதன் விளைவாக இதனைக் குறிப்பிட வேண்டும். இசுலாம் சமயம் நிறுவப்பட்ட, வரையறுக்கப்பட்ட சமயமாக இருப்பினும், தர்காக்கள் நாட்டார் வழிபாட்டிடமாக மட்டுமே அமைந்துள்ளன. அண்மைக்காலங்களில் இசுலாமியச் சமயத்தில் கோட்பாடு சார்ந்த விழிப்புணர்வு வளர்வதின் காரணமாகத் தர்கா வழிபாடு சமயப் பற்றாளர்களால் எதிர்மறையாக அணுகப்படுகிறது.

## தர்கா தோற்றத்திற்கான காரணங்கள்

தர்காக்கள் நம்பிக்கையின் அடிப்படையில் அமைகின்றன. தர்காக்கள் அனைத்தையும் சமாதிகள் எனக்கொள்ள இயலாது. சமாதி என்றில்லாத தர்காக்களும் உண்டு. இரவிபுதூர்க் கடையில் முத்து பீபி தாய் தர்காவில் சமாதி உள்ளதாகக் குறிப்பிடப்படவில்லை. ஆளூர் சேனம்மாளின் சகோதரி இவ்வழியாகச் செல்லும்போது தர்கா உள்ள இடத்தில் இளைப்பாறி விட்டுப் போவாள். இதனால் இது தர்காவாக மாற்றப்பட்டுள்ளது.[16] அதுபோல் குமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரத்தில் புகைவண்டிப்பாதை சாலையைக் குறுக்கிடும் இடத்தினருகில் இருக்கும் 'சுலைமான் தர்கா'வில் சமாதி உள்ளதாகக் கூறவில்லை. ஆற்றங்கரைப் பள்ளிவாசல் தர்காவிற்குச்சென்று திரும்பிய 'ஆஸியா பீபி' கனவில் ஆற்றங்கரை தர்காவில் நிறைந்திருப்பவரின் தம்பி சுலைமான் இங்கு இருப்பதாகக் கனவில் வெளிப்பட, இங்குத் தர்கா கட்டப்பட்டது.

"எனவே, தர்கா தோற்றம் கொள்ள ஏலியுல்லா அல்லது ஒலியுல்லாவின் சமாதி இருந்தாக வேண்டும் என்பதில்லை. அவர்களுடைய இருப்பு அங்கு உள்ளதாக நம்பிக்கை எழுந்த நிலையில் தர்கா தோற்றம் கொள்ளுகிறது. ஆனால், இந்நம்பிக்கையை உணர்த்தும் விதமாகத் தர்கா குறித்த ஒரு கதை இருந்தாக வேண்டும். இக்கதையின் அடிப்படையில்தான் நம்பிக்கை தோற்றம்கொள்கிறது. ஆனால், வரலாற்றில் வாழ்ந்த ஞானிகளின் சமாதியும் தர்காக்களாக

எழுந்தமைக்குச் சான்றுகளும் உள்ளன. எனவே, தர்காக்களின் தோற்றத்தினைக் குறித்த கதைகளின் அடிப்படையில் குமரி மாவட்ட தர்காக்களின் தோற்றத்திற்கு ஏழு காரணங்களைச் சுட்டலாம்".[17]

## I. அரேபியப் போர் தொடர்பானது

பல தர்காக்களில் தர்காவின் தோற்றம் குறித்த அச்சு வடிவமான கையேடு உள்ளது. பெரும்பாலான இக்கையேடுகள் குறிப்பிட்ட தர்காவையும், அரேபியாவில் நடந்த போரையும் தொடர்புபடுத்துகின்றன. அரேபியாவில் நபிகளின் காலத்தில் நிகழ்ந்த புனிதப்போர்களில் கலந்து கொண்டவர்கள் போரில் வீழ்ந்ததனால், அவர்கள் உடலின் ஒரு துண்டு இங்குவந்து வீழ்ந்ததாகவும் அதற்குக் கட்டப்பட்ட சமாதி இது என்றும் குறிப்பிடுகின்றனர். அரேபிய மண்ணில் இசுலாமியச் சமயம் நிலைபெறுவதற்கான போர்க்களங்களில் கலந்துகொண்டவர்களின் நினைவிடங்களாகத் தர்காக்கள் ஏற்பினைப் பெறுகின்றன. இத்தகைய கதைகள் குறிப்பிட்ட தர்காவின் நிலைப்பாட்டிற்குச் சமயச் சான்றுகளைத் தேடுவதின் பொருட்டுத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, அகஸ்தீஸ்வரத்திற்கு அருகில் உள்ள பஞ்சலிங்கபுரம் 'ஷால் ஹமீது தர்காவை'க் குறிப்பிட வேண்டும். தகவலாளிகள் குறிப்பிட்ட இத்தர்காவைக் குறித்து எவ்வகையிலும் இவ்வூரோடு தொடர்புடையதாகக் கதைகளைக் கூறவில்லை. அரேபியாவில் நபிகளின் காலத்தில் நபிகளின் ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் நிகழ்ந்த போரில் புண்பட்ட ஒருவரது உடலின் ஒரு துண்டு மட்டும் இங்கு வந்து வீழ்ந்தது என்கின்றனர். அத்துண்டு அடக்கம் செய்யப்பட்டு, அதன்மீது இத்தர்கா கட்டப்பட்டுள்ளது.[18] புனிதப் போரோடு இத்தர்கா தொடர்புப்படுத்தப்படும்போது சமய ஏற்பிற்கான பாதை வகுக்கப்படுகிறது. குறிப்பிட்ட இக்கதையைப் பல தர்காக்களில் சமயப் புலமை கொண்டவர்கள் கூறுகின்றனர். சமயக் கோட்பாட்டின் அடிப்படையில் தர்காக்களின் நிலைப்பாடு கேள்விக்குள்ளாக்கப்படும் காலச்சூழலில் இத்தகைய கதைகள் சமரசத்தைத் தோற்றுவிக்கின்றன.

## II. கடல்வழி வந்த ஜனஸாக்கள்

கடற்கரை ஓரமாக அமைந்த பல தர்காக்களின் தோற்றக்கதைகளாகக் கடலில் மிதந்து வந்த ஜனஸா குறிப்பிட்ட இடத்தில் அடக்கம் செய்யப்பட்ட கதைகள் கூறப்படுகின்றன. குளச்சல் 'ஷெய்கு வாப்பு உசேன் தர்கா'வின் தோற்றக்கதை இவ்வாறு அமைகிறது.

> இவங்க கடலில் இருந்து மரணப்பட்டு வந்தவர் இக்கரையில் ஒதுங்கின வர எங்க ஆளுங்க எடுத்து வந்து இங்கு அடக்கம் பண்ணினாங்க. அடக்கம் பண்ணின இடத்தில் ஒரு ஆல மரத்த நட்டு வச்சாங்க. நட்டு வச்ச மரத்த மீன் பிடிக்கிறவங்க வெட்டிட்டாங்க. துண்டு போட்டுப் பார்த்தப்ப வெட்டினது யாருன்னு தெரிஞ்சுது. பத்தாவது நாள் கடலில் இருந்து வந்தப்ப அவன் கால் ஒடிஞ்சது. இப்படி அதிசயம் நடந்ததனால் தர்கா கட்டினாங்க.[19]

தகவலாளி கூறும் இக்கதையிலிருந்து இங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளது இம்மக்கள் இதற்குமுன் கண்டிராத, பெயர் தெரியாத ஒரு ஜனஸா என உணர முடிகிறது. அற்புதங்கள் நிகழ்ந்தமையால் புனிதராக இனங்கண்டு தர்கா கட்டமைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இத்தர்கா இசுலாமிய மக்களின் மிகுந்த நம்பிக்கைக்குரியதாகவும் அமைகிறது. தகவலாளிகள் தங்கள் சொந்த வாழ்வில் எதிர்கொண்ட அற்புதங்களைக் கூறக்கேட்டுப் பதிவு செய்ய முடிகிறது.[20]

இனயம் 'மாலிக் முஹம்மது தர்கா'விற்கும் கடலில் வந்த ஜனஸாகதை தோற்றக்கதையாக அமைகிறது.

> இவர் கடல்வழி மதத்தைப் பரப்ப வந்தவரு, வந்தவரு இங்கிருந்து கடல் வழியா வாணிபம் செய்யவும் தொடங்கினார். இப்படியே பலகாலம் வருகிறதும் போகிறதுமாய் இருந்தார். ஒருமுறை வந்து விட்டுப் போகும்போது உடம்பு நிலை மோசமாக உள்ளது. நான் அங்குப் போய் இறந்தாலும் கூட, என்னை இங்குதான் அடக்கம் பண்ண வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இங்குள்ள மக்கள் அங்கு வந்து உங்களை எப்படித் தேடுவது என்று கேட்டபோது, இடுப்பில் கட்டியிருந்த துண்டைக் கழற்றி மக்கள் கையில் கொடுத்து விட்டு, நீங்க இதைக் கடலில் விட்டால் போதும் என்றார். பல காலம் கழித்து மாலிக் வராததைக் கண்டு மக்கள் துண்டைக் கடலில் விட்டனர். மறுநாள் காலையில் ஒருபெட்டி வந்தது. அதை எடுத்துப் பார்த்தப்போ மாலிக்கின் உடல் இருந்தது. பின் அதை அடக்கம் பண்ணினாங்க. அதுவே தர்காவாக வளர்ந்தது.[21]

தகவலாளி கூறும் இக்கதையில், சில இடைவெளிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. குளச்சல் 'செய்குவாப்பு உசேன் தர்கா'வில் கடலில் வந்த ஜனஸாவிற்கு இப்பெயர் இருந்ததை மக்கள் எவ்வாறு அறிந்து கொண்டனர் என்ற கேள்வி எழுகிறது. இனயம் 'மாலிக் முஹம்மது தர்கா' குறித்த தோற்றக்கதையில் இந்த இடைவெளி நிரப்பப்பட்டுள்ளது. கடலில் வந்த ஜனஸா ஏற்கெனவே இங்கு இருந்து வாணிபமும் சமயப் போதனையும் நிகழ்த்திய பெரியவருடையது. தன் மறைவை முன்னுணர்ந்த அவர், ஜனஸாவை அரேபியாவிலிருந்து இங்குக் கொண்டு வர வழியையும் கூறிச் சென்றார். இவ்வழி அற்புதத்தை உணர்த்துவதாக அமைகிறது. தர்கா தோற்றத்திற்கான நியாயமான காரணங்கள் தோன்றிவிடுகின்றன.[22]

கடற்கரையிலிருந்து சற்று உள்ளாக இருக்கும் கோட்டாறு 'அஷ்ஷெய்கு அப்துல் ரஹ்மான் ஸாகிப்' தர்கா தோற்றக்கதையும் இத்தகைய கதையாகவே அமைகிறது. இவர் பாக்தாத்தில் உள்ளவர். ஆப்கானிஸ்தான், லாகூர் இங்கெல்லாம் சமயப்பணி புரிந்துவிட்டுக் குஜராத் வந்தார். குஜராத்திலிருந்து கடல் வழியாக இங்கு வரும் வழியில் தனக்கு மரணம் வரும் என்பதை உணர்ந்து கப்பல் தலைவனை அழைத்து, தன் உடலைக் கபன் செய்து ஒரு பெட்டகத்தில் வைத்துக் கடலில் விடும்படி வேண்டினார். அதன்படியே அவர் இறந்ததும் பெட்டியில் வைத்துப் பெயர், குறிப்பு எல்லாம் எழுதிக் கடலில் விட்டனர். பெட்டி, பள்ளம் குறிஞ்சானிக் கடற்கரையில் கரை ஒதுங்கியது. மீன் பிடிப்பவர்கள் எவ்வளவோ பிடித்துப்பார்த்தும் கையில் கிடைக்கவில்லை. அவர்கள் இங்கு வந்து சொல்ல, இசுலாமியர்கள் சென்ற போது கரைக்கு வந்தது. இங்கு, அடக்கம் பண்ணப்பட்டுத் தர்கா எழுந்தது.[23]

தகவலாளி கூறிய இக்கதையில் இடைவெளிகள் இன்னும் கவனமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. கடலில் வந்த ஜனஸாவிற்கு உரியவர் சமயப் போதனை செய்து இம்மக்கள் கேட்டதில்லை. அதுபோல் அவர் வாழ்க்கை வரலாறும் அவர்களுக்குத் தெரியாது. ஆனால், கப்பல் தலைவன் பெயர், குறிப்புகளை, எழுதி வைத்தான் என்பது இவ்விடைவெளியை நிரப்பிவிடுகிறது. அற்புதங்கள் நிகழ்ந்தால் மட்டுமே தோற்றக்கதை முழுமைபெறும். தர்கா எழுப்பப்பட்டதற்கான நியாயமும் உறுதிப்படுத்தப்படும். மீனவர்கள் கையில் கிட்டாத ஜனஸா இசுலாமியர்கள் சென்றபோது கரை ஒதுங்கியது என்ற அற்புதம் இதை நிறைவு செய்கிறது. இத்தோற்றக்கதைகள்தாம் தர்காக்களைக் காலத்தில் நிலைபெறச் செய்துள்ளன.

## III. கனவு மூலம் வெளிப்பட்ட தர்காக்கள்

தனி நபர்களின் கனவு மூலம் வெளிப்பட்டவைகளாகச் சில தர்காக்களின் தோற்றக்கதைகள் அமைகின்றன. குறிப்பிட்ட இத்தர்காக்கள் இனம் தெரியாத ஒரு காலக்கட்டத்தில் தோற்றம் கொண்டவை. பின் அவை, காலத்தால் அழிந்து போய் விட்டிருந்தன. ஆனால், ஒருவரின் கனவில் தர்காவின் இருப்பு உணர்த்தப்பட்டு, பின் சீரமைக்கப்பட்டது.

மண்டைக்காடு 'ஹவுரடி அப்பா' தர்கா இத்தகைய தோற்றக்கதையைக் கொண்டுள்ளது. தர்கா இன்றுள்ள இவ்விடத்தில் பராமரிப்பின்றி, கபர் இல்லாமல் குப்பைகள் நிறைந்திருந்தது. குளச்சலில் ஒருவர் உடல் நலக்குறைவால் எவ்விதத் தொழிலும் செய்ய இயலாமல் இருந்தார். அவர் கனவில் ஒரு குரல் 'இந்த இடத்தில் இருக்கும் தர்கா பராமரிப்பின்றிக் கிடக்கிறது; சரி செய்' என்று கூறி விட்டு மறைந்தது. அவர் இந்த இடத்தில் வந்து பார்த்தபோது சருகுகளால் நிறைந்த பகுதியைச் சரிசெய்து கபர் கட்டி நேர்ச்சையும் வழங்கினார். உடல்நலம் பெற்றுத் தொழில் செய்யும் வலிமை பெற்றார். தொடர்ந்து இத்தர்கா வழிபடும் நிலைக்கு உயர்ந்தது.[24]

இங்குத் தர்க்காவில் அடக்கம் செய்யப்பட்ட புனிதர் யாரென்ற கேள்வி எழவில்லை. ஏதோ ஒரு காலக்கட்டத்தில் மக்களால் தோற்றுவிக்கப்பட்ட தர்கா, கனவின் மூலம் இப்பொழுது வெளிப்படுகிறது. அற்புதமும் நிகழ்ந்து விடுகிறது. அற்புதம், மக்களை நம்பிக்கைக்கு நேராக வழிநடத்துகிறது. இப்போது தர்கா வழிபாட்டிடமாக மாறுகிறது.

ஆற்றங்கரை தர்காவிற்குப் போய்விட்டு வந்த முஸ்லியா பீபி கனவில் ஆற்றங்கரைப் பள்ளிவாசல் ஒலியுல்லாவின் சகோதரன் 'ஷேக் சுலைமான்' நாகர்கோவில் ரெயில் நிலையம் அருகில் ஒரு வாய்க்காலின் கரையில் இருப்பதாக வெளிப்பட, முஸ்லியா பீபி முயற்சியால் தர்கா ஒன்று அண்மையில் தோற்றம் கொண்டது. மக்கள் அற்புதங்களை உணர்ந்து நம்பிக்கைக்கு நேராக நடக்கும் போது தர்கா நிலைப்பேறினை அடைகிறது. கனவில் வெளிப்படுதல் என்பதே தோற்றக்கதையாக அமைகிறது.

## IV. தானாக வெளிப்பட்டது

எல்லாத் தர்காக்களும் ஜனஸா அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் கட்டப்பட்டதல்ல. பக்தர்களின் கனவின் மூலம் வெளிப்பட்டது போல்,

முற்றிலும் எதிர்பாராத சூழலில் சில அறிகுறிகளை நிகழ்த்தி அதன் மூலம் வெளிப்பட்ட தர்காக்களும் உண்டு. இத்தகைய தோற்றக்கதைகள் குறிப்பிட்ட அந்நிகழ்வையே அற்புதமாகச் சுட்டி, தர்காவின் இருப்பை நியாயப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, கணியாகுளம் "ஷேக் ஜாண் முகம்மது பஷீர் ஷாகிப் ஒலியுல்லா" தர்காவைச் சுட்ட வேண்டும். இத்தர்கா ஆள் அரவம் இல்லாத இடத்தில் பாதை ஓரத்தில் வாய்க்காலை அடுத்து வயலின் கரையில் அமைந்துள்ளது. தகவலாளிகள் இத்தர்காவின் தோற்றக்கதையை இவ்வாறு கூறுகின்றனர். "வயலை உழுது கொண்டு இருந்த போது நிலத்தில் வெட்டுப்பட்டு இரத்தம் வந்தது. அங்கு ஓர் ஒலி எழும்பி எனக்கு இங்கு ஒரு கோரி கட்ட வேண்டும். நான் 'ஷாக்கு ஷாமி'[25] என்று கூறியது. வயல் முசுலீமுக்குச் சொந்தமானதால் உழுது கொண்டிருந்தவர்கள் அவர்களிடம் சொல்லி தர்கா கட்டினார்கள். தர்காவில் நிறைந்திருக்கும் ஒலியுல்லா தானாகவே தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளார். கொளுப்பட்ட போது இரத்தத்தை வெளிப்படுத்தி, அற்புதத்தை நிகழ்த்தி, தன் இருப்பை வெளிப்படுத்தியுள்ளார். அவர் பெயர் குறித்த வினா எழும் போது அதற்குப் பதிலாக அவர் பெயரை ஒரு மாய ஒலி உரைத்ததாகத் தோற்றக்கதை கூறுகிறது.

மிடாலம் (உதயமார்த்தாண்டம்) 'பீர்ஷேக் மீரான் முஹைறதீன் தர்கா'வும் இத்தகைய தோற்றக்கதையினையே கொண்டுள்ளது.

> நாடார் ஒருவர் மண்வெட்டியால் வெட்டிய போது அவர் முகத்தில் இரத்தம் பீறிட்டு அடித்தது. கூடவே அவர் செவிட்டுத் தன்மை அடைந்தார். அந்த இடத்தை முசுலீம்களிடம் ஒப்படைத்த பின்பு அவருக்குச் செவிட்டுத் தன்மை நீங்கியது.[26]

இத்தோற்றக்கதையில் ஒலியுல்லாவின் பெயர் எவ்வாறு வெளிப்பட்டது என்பதற்குப் பதில் இல்லை. இத்தகைய தோற்றக்கதைகள் தர்காக்களுக்கு மட்டுமன்றி, நாட்டார் சிறு தெய்வங்களுக்கும் உள்ளன. மண்டைக்காடு தேவி கோவிலின் தோற்றக்கதை குழந்தைகள் கறையான்புற்றை இடித்த போது இரத்தம் பீறிட்டு, தேவி தன்னை வெளிப்படுத்தியதாக அமைகிறது. இக்கதையைத் தர்காக்களின் தோற்றக்கதையினோடு ஒப்பிட வேண்டும். இக்கதைகள் அனைத்தும் மூன்று கூறுகளைக் கொண்டவை. இயல்பிற்கு மாறான நிகழ்வு – அதன் விளைவு – மேலான சக்தியின் வெளிப்பாடு என்பதாக

அமைகிறது. சமயங்கள் வெவ்வேறாக இருந்தாலும் நாட்டார் மரபு ஒன்றாகவே அமைகிறது.

## V. அற்புதங்கள் நிகழ்த்தியவர்கள்

குமரி மாவட்டத்தில் சில தர்காக்களின் தோற்றக்கதைகள் ஓரளவு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டதாகவும் அமைகின்றன. கதையாக மட்டுமின்றி, உண்மை வாழ்வில் வாழ்ந்து மறைந்த பெரியார்களின் சமாதியின் மேல் எழுப்பப்பட்ட தர்காக்கள் இவை. ஏதோ ஒரு நிலையில் இவர்கள் வாழ்வு, இவர்கள் வாழ்ந்த காலத்தில் மக்களின் பெருமதிப்பைப் பெற்றிருந்திருக்கிறது. இவர்களுள் முதல் வகையினர், தாம் வாழும் காலத்தில் அற்புதங்களை நிகழ்த்தியவர்கள். இவர்களுள் பெரும்பாலாரும் வைத்தியர்கள், அல்லது மாந்திரீகர்கள். எடுத்துக்காட்டாக, திருவனந்தபுரம் – நாகர்கோவில் தேசிய நெடுஞ்சாலைக்கருகில் மணலி கிராமத்தில் அமைந்துள்ள 'அப்துல் முத்தரிவு தர்காவை'க் குறிப்பிட வேண்டும். இத்தர்கா அவர்கள் வழி வந்தவர்கள் பொறுப்பில்தான் இன்றும் உள்ளது.

அப்துல் முத்தரிவு கொல்லத்திலிருந்து தன் தாயுடன் இங்கு வந்தார். மருத்துவராகத் தொழில் புரிந்தார். கூடுதலாக மாந்திரீகமும் செய்தார். இவர் வேட்டைக்குச் செல்லும்பொழுது கடுவாயைப் (புலியைக் குறிக்கும், வட்டார வழக்குச்–சொல்) பயன்படுத்தியதாகக் கூறுகின்றனர். அப்துல் முத்தரிவு யாருடனும் பேசுவதில்லை. அப்போது திருவிதாங்கூர் மன்னருக்குக் குழந்தை பாக்கியம் இல்லை. இவரைப்பற்றிப் பிறர் சொல்லக் கேட்டவுடன் அழைத்து வரும்படி ஆள் அனுப்பினார். இவரோ அரசரைத் தன்னிடம் வரச்சொன்னார். அரசரும் வந்தார். ஒரு பச்சிலையைக் கசக்கிக் கொடுத்து அரசரின் மனைவியைச் சாப்பிடும்படிக் கூறினார். அந்த வருடமே அரசருக்குக் குழந்தை பிறந்தது. அரசர் என்ன வேண்டும் எனக் கேட்க, அப்துல் முத்தரிவு கைகழுவக் குளமும், ஐந்து நேரத்தொழுகைக்கு இடமும் கேட்டார். அரசர் 2 ஏக்கர் 78 சென்ட் நிலத்தை மானியமாக அளித்தார். தர்கா இந்த இடத்தில்தான் அமைந்துள்ளது.[27]

இவருடைய கோரிக்கருகிலேயே தாயாரான "யானையடி வளாகத்துப் பள்ளி அலிமாவின்" கோரியும் உள்ளது. சரசுவதி பூசையின் போது பத்மனாபபுரம் சரசுவதி கோவிலிலிருந்து திருவனந்தபுரத்துக்கு யானையில் தேவியை எடுத்துச்செல்வது வழக்கம். அந்த யானை இந்த இடத்தில் கட்டப்பட்டிருந்தது. அலிமா நெல் குத்திக்கொண்டு இருந்தபோது யானை தன் தும்பிக்கையை உரலில் போட்டது.

உலக்கையைக் கொண்டு தாக்க யானை இறந்தது. இதனை அறிந்த அரசர் திருவனந்தபுரத்திலிருந்து படையுடன் வந்தார். முத்தரிவு, தாயிடம் ஒரு கோலைக் கையில் கொடுத்து யானையை மூன்று அடி அடிக்கும்படி கூறினார். யானை உயிர் பெற்றெழுந்தது.

பத்மனாபபுரத்திலிருந்து சரஸ்வதி தேவியைத் திருவனந்தபுரத்திற்கு எடுத்துச் செல்லும் வழக்கம் மார்த்தாண்டவர்மா ஆட்சிக்கு வந்து, திருவனந்தபுரம் தலைநகராக்கப்பட்டபின்பு தான் எழுந்தது. இது, 1726இல் தான் நிகழ்ந்தது. எனவே, அப்துல் முத்தரிவு 1726க்குப் பின்னரே வாழ்ந்திருக்க வேண்டும். வாழும் காலத்தில் அற்புதங்கள் செய்யக் கூடியவர் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்திருக்க வேண்டும். அவர்மீது பயம் கலந்த மரியாதையும் இருந்திருக்க வேண்டும். இறந்ததை உயிர்ப்பிப்பது என்பது மக்களுக்கு அச்சத்தை விளைவிக்கக்கூடியது. இறந்தபின்பும் அச்சக்தி நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கையில் எழுந்ததுதான் இத்தர்கா.

உயிருடன் வாழும் காலத்தில் ஒரு மனிதனுக்கு இருந்த சக்தி, இறப்பிற்குப் பின்பு மிகையாகத் தொடரும் என்பது நாட்டார் நம்பிக்கை. பல சிறு தெய்வங்களின் தோற்றம் இவ்வடிப்படையில் நிகழ்ந்ததுதான். அப்துல் முத்தரிவு தர்காவின் தோற்றம் இதனடிப்படையில் தான் அமைந்துள்ளது. அப்துல் முத்தரிவு வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்தவர். தர்கா அவர் குடும்பத்துப் பொறுப்பில்தான் உள்ளது. ஆனால், சமய வேறுபாடின்றி எல்லா மக்களும் வழிபடும் இடமாகவும் அமைந்துள்ளது. அப்துல் முத்தரிவு வாரிசுகளில் ஒரு பிரிவினர் தர்கா வழிபாட்டில் நம்பிக்கை இழந்த தீவிர மதப்பற்று கொண்டவர்கள். தர்காவைக் குறித்த நீதிமன்ற வழக்கும் நிலுவையிலுள்ளது. வழக்கின் முடிவின்படி, தர்கா இருக்கும் இடம் அவர்களுக்கு உரிமையானால் இத்தர்கா அழிக்கப்படவும் கூடும். ஆனால், இத்தர்காவின் மீதுள்ள நாட்டார் நம்பிக்கை எவ்வித அழிவும் இன்றித் தொடரும்.

வடக்குச் சூரங்குடி 'ஷெய்கு தர்வேல் மீரான் தர்கா'வின் தோற்றக்கதையும் இந்த அடிப்படையில்தான் அமைந்துள்ளது. இவரும் வைத்தியரே. அரேபியாவிலிருந்து இங்கு வந்து வைத்தியம் பார்த்தார். மக்கள் கூட்டம் கூடியதும் சமயப் பரப்புதலும் செய்தார். செல்வாக்குடன் இருந்த இந்துக்குடும்பம் ஒன்று இவரைப் பரிகாசம் செய்தது. இவரோ பதிலுக்கு ஏதும் கூறவில்லை. அன்றிரவு பரிகாசம் செய்தவரின் மகன் பாம்பால் கடிக்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான். இவரை அழைத்து மன்னிப்புக் கேட்டார். மருந்து கொடுக்காமலேயே அவனை

மரணப் போராட்டத்திலிருந்து மீட்டார். பின் எல்லோரும் இசுலாம் மதத்திற்கு மாறினர். அவர் சமாதியின் மேல் இத்தர்கா எழுப்பப்பட்டுள்ளது.[28]

இத்தோற்றக்கதையும் மரணத்திலிருந்து உயிர்ப்பிப்பதையே அடித்தளமாகக் கொண்டுள்ளது. இத்தகைய அற்புதங்களை நிகழ்த்துபவர்களை நாட்டார் அச்சம் கலந்த மரியாதையுடன் எதிர்கொள்வது இயல்பு. இதுவே தர்கா தோற்றத்திற்குக் காரணமாக அமைந்துள்ளது. மரணத்திற்குப் பின்பும் அற்புதங்களை நிகழ்த்தும் சக்தி நிலைத்திருக்கும் என்பதில் நம்பிக்கை கொள்கின்றனர். நாட்டார் தெய்வங்களுக்கு இணையாக இத்தர்காவும் வழிபடும் இடமாக மாறுகிறது.

இம்மாவட்டத்தில் வழக்கிலுள்ள சுப்பையா நாடார் கதையை இதற்கு இணையாகக் கொள்ள வேண்டும். இவரும் வைத்தியர், மாந்திரீகர். இறந்து சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பார்ப்பனப் பெண்ணின் பிணத்தைக்கண்டு, அவள் அழகில் ஈடுபட்டு, உயிர் கொடுத்தார். பார்ப்பனப் பெண்ணை மணந்ததற்காக அரசரால் கொலை செய்யப்பட்டார். ஆனால் அவர்மீது பயம் கலந்த மரியாதை கொண்ட மக்கள், அவரை வழிபாட்டுக்குரியவராக மாற்றினர். இத்தோற்றக் கதைகளில் உள்ள ஒற்றுமையையும் குறிப்பிட வேண்டும்.

### VI. இசுலாமிய அறிஞர்கள் அல்லது சமய ஞானிகளின் சமாதிகள்

இசுலாம் சமயத்தைப் பரப்புவதையே தங்கள் நோக்கமாகக் கொண்ட ஞானிகள், இசுலாமியப் புலவர்கள் ஆகியோரின் சமாதிகளும் தர்காக்களாக வழிபாட்டிடங்களாக உயர்வடைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, நாகர்கோவில் இடலாக்குடி ‘அஸ்ரத் பாவா காசிம்’ தர்காவைக் குறிப்பிட வேண்டும். இப்பெரியவர் அரேபியாவிலிருந்து வந்தவர். அக்காலத்தில் இவ்விடம் சமணர்களின் வாழுமிடமாக அமைந்திருந்தது. கோட்டார் வேம்படிப்பள்ளி வாசல் பக்கம் இருந்து அவர் சமயப் பிரச்சாரம் செய்து வந்தார். இப்பள்ளிவாசலுக்கு முன்னால் அரசர் செல்லும் அரசபாதை இருந்தது. சுசீந்திரம் கோவிலுக்குச் சென்ற திருவிதாங்கூர் அரசரின் பட்டத்துயானை இந்த இடத்திற்கு வந்ததும் நகராமல் நின்று கொண்டது. மக்கள் பாவா காசியின் புகழைக்கூற அரசர் யானையிலிருந்து இறங்கி மரியாதை செய்தார். சிக்கலும் தீர்ந்தது. அவர் இறந்த பின்பு அவர் ஜனாஸா அடக்கம் செய்யப்பட்ட இடம்

தர்காவாக உயர்வடைந்தது. இத்தர்காவில் ஆண்டுதோறும் 12 நாள் திருவிழா நடைபெறும். 12-வது நாள் வரலாற்று நிகழ்வை நினைத்துக் கொண்டு யானை ஊர்வலமும் நடைபெறும்.[29] இங்குச் சமய ஞானியின் சமாதி தர்காவாக உயர்வடைந்துள்ளது.

சமய ஞானிகள் மட்டுமல்லாது, இசுலாமிய தமிழ்ப் புலவர்களின் சமாதிகளும் தர்காவாக உயர்வடைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, இடலாக்குடி 'அஸ்ரத் ஞானியார் தர்காவின்' தோற்றக்கதையைக் குறிப்பிட வேண்டும். அஸ்ரத் ஞானியார் சமயப்பற்றுக் கொண்ட தமிழ்ப் புலவர். 6000 பாடல்களைக் கொண்ட 'மெய்ஞ்ஞான திருப்பாடல் திரட்டின்' ஆசிரியர். அவர் ஜனஸா அடக்கம் செய்யப்பட்ட இடம் தர்காவாக உயர்வடைந்துள்ளது.[30]

பல தமிழ்ப் புலவர்களின் சமாதிகளும் வழிபாட்டிடங்களாக இன்று உருமாறி உள்ளன. மக்கள் இப்புலவர்கள் மீது கொண்ட மரியாதையே இதற்குக் காரணமாக அமைகிறது.

## VII. சூஃபி ஞானியர்

சூஃபிகள் என்போர் இஸ்லாமிய மெய்ஞ்ஞானியர் ஆவர். 'ஷஃபா' என்னும் அராபியச் சொல்லிலிருந்து சூஃபி என்ற சொல் தோற்றம் கொண்டிருக்க வேண்டும். ஷஃபா என்பது 'தூய்மை' என்று பொருள்படும். எனவே, சூஃபி என்ற சொல்லுக்குத் தூய்மையானவர்கள் என்று பொருள் கொள்ளலாம். "இறைவனது தன்மைகளை உணர்ந்து அவனது அன்பைப் பெற மேற்கொள்ளப்படும் இசுலாமிய ஆன்மீக நெறியை சூஃபித்துவம் என்று சொல்லலாம்"[31] எனச் சூஃபி, வரையறை செய்யப்படுகிறது. சூஃபி நபிகள் காலத்திற்குப் பின் கிரேக்க, புத்த, கிறிஸ்தவ சமயங்களின் தாக்கத்தினால் இஸ்லாம் சமயத்தில் தோற்றம் கொண்டது என்ற கருத்தும் உண்டு.

> சூஃபிகளுக்குத் திருக்குர்ஆன் இறைமொழி மட்டுமல்ல, இறை-யொளிக்கு அருகில் அழைத்துச் செல்லும் அடிப்படை வழி, ஆழ்ந்த தியானம், ஆன்மீகம் தொடர்புடைய அருள்மறை வசனங்களில் ஆழ்ந்த ஈடுபாடு, ஆழ்ந்த கவனத்தோடு கூடிய இறை வணக்கம் முதலியவைகளை அண்ணலார் அவர்களின் நடைமுறைப்படியே அவர்கள் நடத்தினர். ஆனால், சூஃபிகள் பின்பற்றும் இசுலாமிய ஆன்மீக அணுகுமுறை என்பது நபிகள் நாயகம் (ஸல்) காலத்திலிருந்து வந்ததாகும்.[32]

என நபிகள் காலம்தொட்டே சூஃபிகள் இருந்தனர் என்ற கருத்தும் உள்ளது. தர்கா வழிபாட்டினையும், சூஃபிகளையும் இணைத்துக் கூறுவதுண்டு. ஆனால், எல்லாத் தர்காக்களையும் சூஃபிகளோடு தொடர்புபடுத்த இயலாது.

இசுலாமியச் சூஃபிகளையும் சித்தர்களையும் இணையாகக் கருத வேண்டும். சித்தர்கள் ஆன்மீக வழியில் இயங்கியவர்கள். மக்களுக்கு மருத்துவப்பணி புரிந்தவர்கள். சித்தர்கள் நிறுவனச் சமயத்தோடு தொடர்பு கொண்டிருக்கவில்லை. சமயச் சடங்குகள் அவர்களைக் கட்டுப்படுத்தவில்லை. மெய்ஞ்ஞானிகளாக இயங்கியபோதும், சாதாரண மக்களோடு தொடர்பு கொண்டிருந்தனர். சாதாரண மக்கள் சித்தர்களைக் குறித்து, சில படிமங்களைக் கொண்டிருக்கின்றனர். மரணம் என்பது சித்தர்களுக்கு இல்லை. சமகாலத்திலும் சித்தர்கள் கண்மறைவாக வாழ்கின்றனர் என்ற நம்பிக்கை உண்டு. சித்தர்கள் வாழ்ந்த போதும் மறைந்த பின்னரும் அற்புதங்கள் நிகழ்த்த வல்லவர்கள் என்ற நம்பிக்கையும் உண்டு.

இதற்கு இணையான படிமத்தையே இசுலாமியச் சூஃபிகளைப் பற்றியும் மக்கள் கொண்டுள்ளனர். குமரி மாவட்டத்தில் சில தர்காக்கள் சூஃபிகளேடு தொடர்புடையன. தக்கலை பீரப்பா தர்கா இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. பீரப்பா அண்மைக்காலத்தில் வாழ்ந்தவர். அவர் பாடிய பாடல்களும் தமிழில் உண்டு. சித்தர் பாடல்களைப் போலவே பீரப்பாவின் பாடல்களும் சாதாரண மக்களால் விரும்பப்படுகின்றன. பீரப்பாவும் அற்புதங்களோடு தொடர்புபடுத்துகிறார். பீரப்பா தர்கா இன்றும் பெருமளவு மக்களை ஈர்க்கும் சக்தி கொண்டதாகவே இருந்து வருகிறது. குமரி மாவட்டத் தர்காக்களில் பெரும் கட்டட அமைப்புக் கொண்ட தர்காவும் இதுதான்.

இன்னும் சில தர்காக்களைச் சூஃபி தர்காக்களாக இனங்காண முடியும். "மகான் துல்ஹாஷா ஒலியுல்லா தர்கா" வடசேரியில் அமைந்துள்ளது. முந்நூறு ஆண்டுகளுக்கு முன் துல்ஹாஷாவும், பாசில்ஷாவும் சமயப் பிரச்சாரத்திற்காகக் குமரி மாவட்டத்திற்கு வந்துள்ளனர். இவர் வாழும் காலத்தில் பல அற்புதங்களை நிகழ்த்தினார். இவருடைய இறப்பை மக்கள் ஏற்கவில்லை. கண்மறைவாக இருப்பதாகவே நம்புகின்றனர். "இந்த இடத்தில் அவருடைய அருளாட்சி இன்றும் இருப்பதாகவே கூறுகின்றனர்".[33]

கோட்டாறு அரிப்புத்தெரு "ஹஸ்ரத் பாசில்ஷா" தர்காவும் சூஃபிகளோடு தொடர்புபடுத்தப்படுகிறது. இவர் ஆப்கானிஸ்தானத்தில்

பாதுல்ஷாவாக ஆட்சி புரிந்தவர். பல சூஃபிகளோடு தொடர்பு கொண்டிருந்தார். சூஃபியாகப் பல இடங்களுக்குச் சென்று விட்டு இறுதியில் குமரிக்கு வந்தார். எளிய கோலத்தில் கடவுளிடம் உள்ளம் உருக வேண்டுதல் செய்து கொண்டிருந்தார். நௌமியா, சௌமியா என்னும் இருவரும் ஓர் ஓலைக்குடிசை அமைத்து அதில் அவரை இருத்தினர். சிறிது காலம் அங்கிருந்தார். பின் மறைந்துவிட்டார். அவருக்காக ஒரு சிறு கபர் எழுப்பினர். இப்போதும் அவர் சாகவில்லை அவர் கண் மறைவாக இருக்கின்றார்[34] என நம்புகின்றனர்.

குமரி மாவட்டத்தில் பல தர்காக்கள், சமயப் பிரச்சாரம் செய்ய வந்த இசுலாமிய ஞானிகளோடு தொடர்புபடுத்தப்படுவன. அவர் இறக்கவில்லை; கண் மறைவாக இருக்கிறார் என்னும் சொல்லாடல் சில தர்காக்களோடுதான் தொடர்புபடுத்தப்படுகிறது. இத்தர்காக்களைச் சூஃபிகளின் தர்காக்களாக இனங்காண வேண்டும். தர்காக்கள் சமயம் கடந்த நிலையில் வழிபாட்டினைப் பெறுபவை. ஆனால், சூஃபிகள் மக்களால் சித்தர்களுக்கு இணையாக மதிக்கப்படுகின்றனர். எனவே, இத்தர்காக்கள் சமயம் கடந்த நிலையில் மக்களை ஈர்ப்பனவாக உள்ளன.

## VIII. போர் வீரர்களின் தர்காக்கள்

போர்வீரர்களை அடக்கம் செய்த இடங்களும் படிப்படியாகத் தர்கா நிலைக்கு உயர்ந்துள்ளன. வடசேரி 'துல்ஹாஷா ஒலியுல்லா' தர்காவில் நான்கு பக்கமும் சுவர் கட்டப்பட்ட ஓர் அமைப்பு உள்ளது. ஒரு சிறு திட்டிவாசலும், அதனுள் மாடக்குழியும் உள்ளன. முகிலன், திப்புசுல்தான், திருவிதாங்கூர் மன்னர் இவர்களுக்கிடையே சண்டை நிகழ்ந்தபோது, இறந்த இஸ்லாமிய வீரர்களுக்காகக் கட்டப்பட்ட இடம் அது என மக்கள் கூறுகின்றனர். இந்த அமைப்பிற்குச் சோழிக்கல், வந்தவாசி என்றும் பெயர் கூறுகின்றனர். தினமும் விளக்குக்கொளுத்தி வைப்பதுண்டு. ஒரு தர்காவின் சிறு பகுதி இது. கோரி கட்டடப்படவில்லை. தர்காவின் முழு வழிபாட்டையும் இது பெறுவதில்லை. இதைத் தர்காவிற்கும் சமாதிக்கும் இடைப்பட்டதாகக் கூற வேண்டும்.[35]

புலியூர்க்குறிச்சி ஹானாஸா ஒலியுல்லா, மன்னாஸா ஒலியுல்லா, ஹசரத் சஃபி, முஸ்தபா, ஜூன் ஒலியுல்லா ஆகிய தர்காக்களைக் குறிப்பிட வேண்டும். 165 வருடங்களுக்குமுன் நிகழ்ந்த ஒரு போர்க்களத்தில் புண்பட்டு மாண்ட வீரர்களின் சமாதிகள் இவை. இறந்த பின்னரும் மக்களுக்கு அற்புதங்களை நிகழ்த்தி வந்தனர். திருவிதாங்கூர் மன்னர்க் கனவில் இவர்கள் வெளிப்பட்டு, தங்களுக்குச்

சமாதிகள் கட்டும்படி வேண்டினர். மன்னரின் உத்தரவுப்படி கோரிகள் கட்டப்பட்டுத் தர்கா நிலையை அடைந்துள்ளன.[36]

இச்சமாதிகளும் தர்கா நிலைக்கு உயராத ஒரு காலக் கட்டமும் இருந்துள்ளது. முறையான சமாதிகள் கூட இல்லாத நிலையில் மக்கள் நினைவில் மட்டுமே வீரர்களுக்கான சமாதிகள் என்ற குறிப்பு இருந்துள்ளது. பிற்காலத்தில் அரசு உதவிகளோடு தர்கா எழுந்துள்ளது. குமரி மாவட்டத் தர்காக்களில் இவ்வாறு இனங்காணத்தக்கத் தர்காக்கள் மிகச் சிலவே உள்ளன.

## தர்காவின் அமைப்பு - தர்காக்களும் கோரிகளும்

பள்ளிவாசல்களும் தர்காக்களும் அடிப்படையிலேயே வெவ்வேறான அமைப்பினைக் கொண்டவை. பெருங்கோவில்களுக்கும் சிறுதெய்வ வழிபாட்டிடங்களுக்குமிடையிலான வேறுபாட்டிற்கு இணையான வேறுபாட்டினை இவை கொண்டுள்ளன. பள்ளிவாசல்கள் பெரும்பாலும் இந்தோ பாரசீக அல்லது மத்தியக் கிழக்காசியக் கட்டடக்கலையைச் சார்ந்து கட்டப்பட்டுள்ளன. மிகப் பழமையான பள்ளிவாசல்கள், இந்தியக் கட்டடக்கலையைச் சார்ந்தனவாக அமைந்துள்ளன. ஆனால், தர்காக்களை இவ்வாறு பொதுமைப்படுத்தி விட முடியாது.

தர்கா என்ற கட்டட அமைப்பின் அடிப்படை உறுப்பாகக் கோரியைச் சுட்ட வேண்டும். கோரி என்பது நீள்சதுர அமைப்பினைக் கொண்ட ஆறு அங்குல உயரத்தினையும், இரண்டடி அகலத்தினையுமுடைய செங்கல் கட்டுமானம்.[37] இதன் மையப்பகுதி வளைவாக அமைக்கப்பட்டிருக்கும். கோரி சமாதியின் அடையாளம். ஆனால், கோரி இருக்குமிடமெல்லாம் சமாதி இருந்தாக வேண்டுமென்பதில்லை. தக்கலை செய்டு பீர்முகமது தர்கா, திட்டுவிளை செய்டு உதுமான் லெப்பை மா"ாயிக் தர்கா, ஆளூர் சேனம்மா தர்கா போன்ற புகழ் பெற்ற தர்காக்கள் அனைத்திலும் 'கோரி' என்ற அமைப்பினைக் காண முடியும்.

தர்கா ஒரு கோரியினையோ ஒன்றிற்கு மேற்பட்ட கோரிகளையோ கொண்டிருக்கலாம்.[38] கணியாங்குளம் ஜாண் முகம்மது பக்கீர் ஒலியுல்லா தர்கா, ஆளூர் கோஜ்முகமது தர்கா போன்ற தர்காக்களில் ஒரு கோரியினையே காண முடிகிறது. ஆனால், மண்டைக்காடு ஹபுறடி அப்பா, ஹபுறடி நாயக் தர்கா, மிடாலம் ஷேக் அப்துல் காதர், ஷேக் அப்துல் ரஹ்மான் ஆகிய தர்காக்களில் ஒன்றிற்கும் மேற்பட்ட கோரிகளைக் காண முடிகிறது.

எல்லாத் தர்காக்களும் கோரி என்னும் அமைப்பினைக் கொண்டிருக்க வேண்டுமென்பதில்லை. கோரி இல்லாத தர்காக்களும் உள்ளன. கோரி இல்லாத தர்காக்கள் பெரும்பாலும் அற்புத சக்தி கொண்டவர்கள் வந்து அமர்ந்து சென்ற நினைவிடங்களாகும். அல்லது அங்கு சமாதியாகியுள்ள புனிதர் கோரி என்னும் அமைப்பினைத் தாம் வாழ்ந்த நாட்களில் விரும்பாதவராக இருந்திருக்கக்கூடும். இசுலாமிய மதக்–கோட்பாட்டின்படி, இறந்தவர்களுக்கு நினைவிடங்கள் அமைப்பது எதிரானதும் கூட.

புனிதர்கள் வந்து அமர்ந்து சென்ற தர்காக்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இரவிபுதூர்க்கடை தளத்துப்பள்ளி தர்கா[39] அமைகிறது. குறிப்பிட்ட இத்தர்கா 'முத்து பீவி தாய் தர்கா' என்றும் குறிப்பிடப்படுகிறது. இத்தர்காவிற்குச் சொந்த இடமோ பெரிய கட்டட அமைப்போ, கோரியோ கிடையாது. இது, தனியார் ஒருவருடைய நிலத்தில் உள்ளது. மஞ்சணாத்தி, காரை என்னும் இரண்டு மரங்கள் நிற்கின்றன. மூன்று கல் விளக்குகளும், சின்னக் குத்துவிளக்கு ஒன்றும் காணப்படுகின்றன. நடுகல் ஒன்றும் நடப்பட்டுள்ளது. வழிபாட்டில் ஒரு பாகமாகப் பக்தர்கள் பிச்சிப்பூவில் கருவளையல்களைக் கட்டி மஞ்சணாத்தி மரத்தில் தொங்கவிடுவர். முத்து பீவி தாய் மண்டைக்காட்டில் அடக்கம் செய்யப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர். கோரி என்ற அமைப்பு இத்தர்காவில் இல்லை. என்றாலும், இது பக்தர்களின் நம்பிக்கைக்கு உகந்த இடமாகவே அமைந்துள்ளது.

மற்றொரு எடுத்துக்காட்டாக, தக்கலைக்கு அருகில் குமாரகோவில் மலையில் காணப்படும் காட்டு பாபா பகர்தீன் ஸாகிப் தர்காவைக் குறிப்பிட வேண்டும். குறிப்பிட்ட இத்தர்கா மலைப்பள்ளி தர்கா என்றும் அழைக்கப்படுகிறது. இத்தர்காவிலும் யாரும் அடக்கம் செய்யப்படவில்லை. கோரி என்ற அமைப்பும் கிடையாது. பக்தர்கள் வந்து சமையல் செய்து சாப்பிட ஒரு கட்டடமும் அருகில் ஒரு பெரிய ஆலமரமும், நீரோடையும் உள்ளன. கட்டடத்தில் பக்தர்கள் வழிபாடு செய்வர்.

இவரைக் குறித்த கதையொன்று, குறிப்பிட்ட இத்தர்கா சமாதி அடிப்படையில் அமையவில்லை என்பதைத் தெளிவாக உணர்த்தி விடுகிறது. காட்டுபாபா காட்டு வழியாகப்போய்க் கொண்டிருந்த போது, எதிரில் ஐந்து பிராமணப் பெண்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்களை ஐந்து கள்வர்கள் துரத்தி வந்தனர். பெண்கள் காட்டு பாபாவிடம் முறையிட்டனர். அந்நேரம் தொழுகை நேரமாக அமைந்ததால்

பாபா அப்பெண்களையும் வைத்துத் தொழுகை நடத்தினார். கள்வர்கள் பெண்களை நோக்கி அம்பு எய்தனர். உடனே அக்கள்வர்களின் கண்கள் குருடாயின. பாபா தொழுகை முடித்து அம்பை எடுத்தவுடன் ஒருவனுக்குக் கண்பார்வை மீண்டது. அவனிடம் பாபா, "எங்க ஆளுங்ககிட்டப் போய்ச் சொல்லுங்க, அங்க ஒரு சடலம் உள்ளது" என்று கூற, மக்கள் வந்து பார்த்தபோது அவருடைய தலைப்பாகை, மிதியடி, கோல் போன்றவை மட்டுமே இருந்தன. அவரைக் காணவில்லை. அவர் அடக்கம் செய்யப்பட்ட இடம் திருப்பரங்குன்றத்தில் உள்ளதாகக் கூறுகின்றனர்.

வந்து சென்ற இடத்தில் எழுந்த இன்னொரு தர்காவிற்கு எடுத்துக்காட்டாக, மேக்காமண்டபம் ஊரிலுள்ள 'கொடி மூட்டுத் தங்கள் அபூபக்கர் தர்கா' அமைகிறது. அவர் இங்கு வந்து ஒரு கொடி மரம் நட்டு அமர்ந்தார். அவருடைய சொந்த ஊர் தென்காசி. 'நீக்கம்பு நோய்' (காலரா) அப்பகுதியைத் தாக்கியபோது நான்கு முக்கு ரோட்டில் 41 நாள் குதிரையில் வந்து வாள் கொண்டு அடித்தார். காலரா நோய் தீர்ந்தது. இதன் நினைவாக, கார்த்திகை மாதம் கடைசிப்பத்து நாள்களும் தொழுகை நடத்துகின்றனர். இங்கும் கோரி இல்லை. அரசமரம் மட்டுமே நிற்கின்றது. மக்கள் மரத்தினடியில் நின்று தங்கள் குறையைச் சொல்லுவது வழக்கம்.

இவ்வெடுத்துக்காட்டுகள், தர்காவின் தோற்றத்திற்குச் சமாதிகள் ஓர் அடிப்படையாக அமையாததை உணர்த்துகின்றன. புனிதர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடமாக அமையாததால் கோரி என்ற அமைப்பும் இல்லை. பெரும்பான்மையான தர்காக்களில் கோரி இடம் பெற்றாலும், கோரி அமைப்பு இல்லாத தர்காக்களும் குமரி மாவட்டத்தில் உள்ளன.

## தர்காக்களின் கட்டட அமைப்பு

தர்காக்களை, எளிய கட்டுமான அமைப்பினைக் கொண்டவை, பெரிய கட்டுமான அமைப்பைக் கொண்டவை என இருபிரிவுகளாக வகைசெய்து கொள்ளமுடியும். மணவாளக்குறிச்சி கலந்தர் மஸ்தான் சாகுல் ஹமீது நாயகம் தர்கா, விராலிக்காட்டுவிளை – வர்தாரி பெத்த தர்கா ஆகிய தர்காக்கள் மிக எளிமையான கட்டட அமைப்பினைக் கொண்டுள்ளன. இதற்கு எதிரிடையாக திருவிதாங்கோடு – மாலிக் முகம்மது ஒலியுல்லா தர்கா, தக்கலை – கொச்சு பாபா தர்கா, இடலாக்குடி அஸ்ரத் பாபா காசிம் தர்கா ஆகிய தர்காக்கள் பெரிய கட்டுமான அமைப்பைக் கொண்டுள்ளன. தக்கலை பீரப்பா தர்கா,[40] குளச்சல் செய்கு வாப்பு ஹூஸைன் தர்கா, கொடுப்பைக்குழி சேனம்மா தர்கா[41]

ஆகிய தர்காக்கள் பக்தர்கள் வந்து தங்கும் வசதிகளையும் கொண்டுள்ளன.

தர்காக்களின் அமைப்பில் ஒருமைப்பாட்டினைக் காண இயலாததைக் குறிப்பிட வேண்டும். தர்காக்கள் பல்வேறு காலக் கட்டங்களில் தோற்றம் கொண்டதையும் எவ்விதத் திட்டமிடலுமின்றி மக்கள் நம்பிக்கையில் எழுந்ததையும் இதற்குக் காரணமாகச் சுட்ட வேண்டும். தேங்காப்பட்டணம் பாபா ஸாஹித் தர்கா, தாமிரபரணி ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் ஒரு பாறையின் மீது அமைந்துள்ளது. ஆத்தங்கரை தர்கா எனவும் இதை அழைப்பர். குறிப்பிட்ட இத்தர்கா மட்டும் இந்தியக் கட்டடக்கலை அமைப்பில் அமைந்துள்ளது. பெரிய கற்களால் கட்டப்பட்டுள்ளது. தூண்களில் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கற்களில் சிறிய சிற்பங்களும் உண்டு. குறிப்பிட்ட இத்தர்காவைக் காலத்தின் பழைமையான தர்காவாகக் குறிப்பிட வேண்டும். இந்தியக் கட்டடக்கலை இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**தர்காக்களும், மரங்களும்**

பெரும்பான்மையான தர்காக்களில் மரங்கள் இடம் பெற்றுள்ளன. இம்மரங்கள் தர்காவின் வழிபாட்டோடு தொடர்புபடுத்தப்படுகின்றன. இந்துக் கலாச்சார அமைப்பில் சமய வழிபாட்டில் மரங்கள் குறிப்பிடத் தகுந்த இடத்தினைப் பெற்றுள்ளன. மரங்களில் தெய்வம் உறைந்துள்ளதான நம்பிக்கை சங்க காலந்தொட்டே தொடர்ந்துள்ளது. நாட்டார் வழிபாட்டிலும் மரங்கள் தெய்வ உறைவிடமாகக் கருதப்படுகின்றன. தர்கா வழிபாட்டில் மரங்கள் பங்கு பெறுவது இந்தியக் கலாச்சாரத்தோடு தர்கா வழிபாட்டினைத் தொடர்புபடுத்துகிறது. தர்கா வழிபாட்டில் மரங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்மிடாலம் சேக் அப்துல் காதர், சேக் அப்துல் ரஹ்மான் தர்கா தொடர்பான கதையிலிருந்து உணர்ந்துகொள்ள முடிகிறது. குறிப்பிட்ட இத்தர்காவில் முதலில் ஆலமரம் ஒன்று நின்றிருந்தது. பள்ளி வாசலுக்கு இடையூறான அது வெட்டப்பட்டது. அதை வெட்டியவர்களின் உடம்பு நடுக்கம் கொண்டது. உடனே அச்சம் கொண்டு அரசமரத்தை நட்டு வைத்தனர். அந்த அரசமரத்தைப் புனிதமாக இன்றும் பாதுகாக்கின்றனர். தர்காவில் நிற்கும் மரத்திலும் தர்காவின் அதிசயம் இடம்பெறுகிறது என்ற நம்பிக்கை மக்களிடம் நிலவியதை இது உறுதிப்படுத்துகிறது. இந்து சமயப் பெரும்கோவில்களில் கோவிலுக்கென்று மரம் உள்ளதை இங்கு நினைவில்கொள்ள வேண்டும்.

பார்வதிபுரம் – சேக் ஜாண் முகம்மது பஷீர் சாகிப் ஒலியுல்லா தர்காவில் அரசமரம் ஒன்று நின்றிருந்தது. திடீரென்று ஒருநாள் அம்மரம் முறிய ஆலமரக்கன்றை நட்டு வைத்தனர். இம்மரத்தின் உலர்ந்த இலைகளை மருத்துவக்குணம் கொண்டதாகப் பயன்படுத்துகின்றனர்.

குளச்சல் செய்யது வாப்பு உசேன் ஒலியுல்லா தர்காவிலும் தர்கா[42] மரம் தொடர்பான வாய்மொழிக் கதை வழக்கில் உள்ளதைக் குறிப்பிட வேண்டும். கடலில் வந்த ஜனசாவை அடக்கம் செய்த போது ஒரு பெரிய ஆலமரம் அருகில் நின்றது. முசுலீம்களுக்கும் மீனவர்களுக்கும் இடையில் கலவரம் ஒன்று நிகழ்ந்தபோது, மீனவர்கள் ஆலமரத்தை வெட்டினர். அவ்விடம் முழுவதும் இரத்தத்தால் நிறைந்தது. வெட்டியவர்களும் இறந்தனர். அடுத்து என்ன மரம் நடலாம் என்று துண்டு போட்டுப் பார்த்தபோது அரசமரத்தின் பெயர் துண்டில் வந்தது. அரசமரம் நடப்பட்டது. மருத்துவக்குணம் கொண்டதாக நம்பப்பட்டு, தீர்த்த நீர் வழங்கப்படும் போது மரத்தின் பட்டையையும் போட்டுக் கொடுப்பர்.

இம்மூன்று தர்கா தொடர்பான கதைகளிலும் ஒரு மரம் வெட்டப்பட்டு மற்றொரு மரம் நடப்பட்டுள்ளது. வெட்டுப்பட்ட மரம் ஆலமரமானால் மீண்டும் நடப்பட்ட மரம் அரசமரமாக அமைகிறது. அரசமரம் வெட்டப்பட்டால் ஆலமரம் நடப்பட்டுள்ளது. வெட்டியவர்கள் தண்டனைக்கும் உள்ளாகியுள்ளனர். மரத்தில் இறைசக்தி அமைந்துள்ளது இங்குச் சுட்டப்படுகிறது. இறைசக்தியின் காரணமாகத்தான் மருத்துவக்குணமும் இதற்குத் தரப்படுகிறது. ஆலமரம், அரசமரம் என்னும் இரண்டு மரங்களும் இந்து சமயத்திலும் இறைசக்தியோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. தர்காக்களிலும் இவ்வகை மரங்கள் இடம் பெறுவது இந்தியக் கலாச்சாரத் தொடர்ச்சியையே உறுதிப்படுத்துவதாக அமைகிறது. சமயமாற்றம் கலாச்சார வாழ்வை முற்றிலுமாக மாறுதலுக்கு உள்ளாக்கவில்லை.

இவ்விருவகை மரங்கள் மட்டுமின்றி, மஞ்சணாத்தி, காரை மரங்களும் தர்காவினுள் இடம் பெற்றுள்ளன. இம்மரங்கள் ஏதோ ஒரு வகையில் தர்கா வழிபாட்டின் பகுதியாக அமைகின்றன.

## தர்காக்களும், புனிதக் கிணறும்

பெரும்பான்மையான தர்காக்களில் கிணறுகளும் உள்ளன. இக்கிணற்று நீர் புனிதநீராகக் கருதப்படுகிறது; தீர்த்த நீராகப் பயன்படுத்துகின்றனர். கணியாகுளம் – சேக் ஜாண் முகம்மது பகீர்

ஒலியுல்லா தர்கா, குளச்சல் – செய்கு வாப்பு ஹூஸைன் தர்கா, கொடுப்பைக்குழி சேனம்மா தர்கா ஆகிய தர்காக்களில் உள்ள கிணறுகளை எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிட வேண்டும். இத்தர்காக்களில் கிணற்று நீர் புனித நீராக வழங்கப்படுகிறது. குளச்சல் செய்கு வாப்பு ஹூசைன் தர்காவின் கிணற்று நீரில் பிச்சிப்பூ,[43] தர்காவிலுள்ள அரசமரப்பட்டை ஆகியவற்றைப் போட்டு, குப்பி பத்து ரூபாய் வீதம் விற்கப்படுகிறது.

கத்தோலிக்கக் கிறித்தவ ஆலயங்கள் பலவற்றில் இத்தகைய புனித நீர்க்கிணறுகள் உள்ளன. புனித நீர்க்கிணறுகள் இந்தியக் கலாச்சாரத்தோடு தொடர்புடையன. தர்கா வழிபாட்டின் இந்தியக் கலாச்சாரக் கூற்றை இவை உறுதிப்படுத்துகின்றன.

## தர்காவும் கொடியும்

தர்காக்கள் அவற்றிற்கே உரிய கொடிகளையும் கொண்டுள்ளன. தர்கா விழாக்களின்போது கொடி தர்காவில் நிற்கும் புனிதமரத்தில் ஏற்றப்படுகிறது.[44] திட்டுவிளை – செய்கு உதுமான் லெப்பை மாசாயிக் தர்காவில் காவிக்கொடி ஏற்றப்படுகிறது. இதர தர்காக்களில் பச்சை நிறத்தில் வெள்ளைப் பிறையும் நட்சத்திரமும் கொண்ட கொடி ஏற்றப்படுகிறது. இந்திய கலாச்சார வாழ்வில் கோவில்கள் அவற்றிற்கே உரிய கொடிகளையும் கொண்டுள்ளன. விழாக்களில் கொடியேற்றுவது சடங்காகவும் அமைகிறது. இக்கலாச்சார வாழ்வையே இசுலாமியர்களின் தர்கா வழிபாட்டில் பங்கு வைத்துக் கொண்டுள்ளனர். தர்கா வழிபாட்டில் இந்தியக் கலாச்சாரக் கூறினையும் இது உறுதிப்படுத்துகிறது.

## குடும்ப தர்காக்கள்

குறிப்பிட்ட சில தர்காக்கள் சில குடும்பங்களின் பொறுப்பில் உள்ளன. எடுத்துக்காட்டாக, மணலியிலுள்ள சேக்னா மீரான் கன்னி மஸ்தான், சேக்னா யூசுப் மஸ்தான் தர்காக்களைக் குறிப்பிட வேண்டும். குறிப்பிட்ட இத்தர்காக்கள் ஒரு குடும்பத்தின் பொறுப்பில் உள்ளன. இத்தர்காவின் வருமானம் ஒரு குறிப்பிட்ட குடும்பத்திற்கே சொந்தமானது. வழிபாட்டிற்காகப் பக்தர்கள் வந்தால் குடும்பத்தைச் சார்ந்த பெரியவர் வந்து சுவரில் விளக்குக் கொளுத்தி வைத்து விட்டு, பக்தர்களின் நிறை குறைகளைக் கேட்பார். பின் அவர்கள் கொண்டுவந்த காணிக்கைப் பொருட்களைப் பெற்றுக்கொண்டு அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வார்.

புலியூர்க்குறிச்சி ஹானாசா ஒலியுல்லா தர்காவும் குடும்ப தர்காவாக அமைகிறது. இது தக்கலையைச் சார்ந்த மாயின் என்பவருக்குச் சொந்தமானது. இத்தர்காவிலும் காணிக்கைப் பொருட்களைப் பெற்றுக் கொள்கின்றனர். குறிப்பிட்ட இத்தர்கா விழாவின்போது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் மீன் உண்ணாது நோன்பு நோற்கின்றனர்.

விராலிக்காட்டுவிளை வர்தாரி பெத்த அப்பா தர்கா அகஸ்தீஸ்வரம் சுலைமான் தர்கா, மணலி அப்துல் முத்தரிவு ஒலியுல்லா தர்கா முதலியனவும் குடும்பத் தர்காக்களாக விளங்குகின்றன. ஏனைய தர்காக்கள் அப்பகுதியைச் சார்ந்த ஜமாத்துகளின் பொறுப்பில் உள்ளன. குடும்பத் தர்காக்களை, தர்கா வழிபாட்டின் பழைமையான வடிவமாகக் கொள்ளவேண்டும். சிறுதெய்வ வழிபாட்டிலும் குடும்ப வழிபாடு சமூக வழிபாடாக மாறும் பரிணாமம் உள்ளது. தர்கா வழிபாட்டிலும் இந்நிலையைக் காண முடிகிறது.

## கூட்டு வழிபாடும் தனிநபர் வழிபாடும்

கூட்டுவழிபாடு, தனிநபர் வழிபாடு என்னும் இருவகை வழிபாடுகள் தர்கா வழிபாட்டில் இடம்பெற்றுள்ளன. தனிநபர்கள் காணிக்கை செலுத்தித் தங்கள் குறைநிறைகளுக்காக முறையிடுகின்றனர்.

தர்காக்களில் விழாக்களின்போது கூட்டுவழிபாடு நிகழ்கிறது. ஒவ்வொரு தர்காவும் அதற்கே உரிய வழிபாட்டு முறையைக் கொண்டுள்ளது. பள்ளிவாசலில் நிகழும் தொழுகையைப் போல் பொதுவான தொழுகை முறை தர்காக்களுக்கு இல்லை. எடுத்துக்காட்டாக, ஆளூர் கோஜ் முகம்மது சாகிப் தர்கா விழாவைக் குறிப்பிட வேண்டும். குறிப்பிட்ட இத்தர்கா ஆளூர் ஜமாத்தின் பொறுப்பில் உள்ளது.

தர்கா விழாவின்போது யாசீன் ஓதி யானையை நன்றாகக் குளிப்பாட்டுவார்கள். ஊர்வலம் தொடங்குவதற்கு முன் பாத்திகா ஓதுவர். பின், இராணுவ இசைக்குழுவின் இசையும் செண்டையும் வாசிக்கப்படும். சடங்கின் பகுதியாக யானைக்கு முதலில் வாழைக்குலையைக் கொடுப்பார்கள். பின்னர், மக்களுக்கும் பழம் கொடுப்பர். பின்பு, எல்லோருக்கும் சந்தனம் கொடுப்பர். பின்னர், நேர்ச்சையாக விடப்பட்ட குழந்தைகளை யானையின் மீது ஏற்றுவர். முதல் குழந்தையின் கையில் கொடியும் காணிக்கைப் பெட்டியும் தரப்படும்.[45] இரண்டாவது பையன்

வாழைக் குலையையும், மூன்றாவது பையன் சந்தனக் குடத்தையும் வைத்திருப்பர். இசைக்குழு முதலில் செல்ல, தொடர்ந்து யானை செல்லும். வீடுகள் அலங்கரிக்கப்பட்டிருக்கும். யானை, வீட்டிலுள்ள மக்களை ஆசீர்வதித்தவுடன், காணிக்கையைப் பெற்றுக் கொள்வர். காணிக்கைக்குப் பதிலாகச் சந்தனம் வழங்கப்படும்.

தர்காக்களில் பிரசாதமாக வேறுபட்ட பொருள்கள் வழங்கப்படுகின்றன. தர்கா வழிபாடு மரபு அடிப்படையிலானது. எழுத்து வடிவிலான விதி ஒன்றுமில்லை. ஒவ்வொரு தர்காவும் அதற்கான மரபைக் கொண்டுள்ளது. இது தர்கா வழிபாட்டை நாட்டார் வழி பாட்டோடு தொடர்புபடுத்துகிறது.

## வழிபாடு இழந்த தர்காக்கள்

பல்வேறு காரணங்களால் குறிப்பிட்ட தர்கா வழிபாட்டினை இழப்பதும் உண்டு. மணலிமுக்கு அப்துல் முத்தரிவு ஒலியுல்லா தர்கா குறிப்பிட்ட ஒரு குடும்பத்திற்கு உரிமையானது. தர்காவின் அருகில் பள்ளிவாசலும் உண்டு. பள்ளிவாசலை நிர்வாகம் செய்பவர் அடுத்து வாழ்கின்றனர். தர்காவை நிர்வகிப்பவர் தக்கலையில் வாழ்கின்றனர். நீதிமன்றத்தில் உள்ள வழக்கின் காரணமாக இத்தர்கா வழிபாட்டினை இழந்துள்ளது.

விராலிக்காட்டுவிளை வர்தாரி பெத்த தர்காவும் குறிப்பிட்ட குடும்பத்திற்குச் சொந்தமானது. இக்குடும்பம், பொருளாதார நிலையில் பின்தங்கிய காரணத்தினால் தர்காவை ஏற்று நடத்தும் நிலையில் இல்லை. தர்கா ஜமாத்திடம் ஒப்படைக்கப்படவும் இல்லை. தற்போது தர்காவைச் சூழ்ந்து வாழும் நாடார் இன மக்களே தர்காவிற்குக் காணிக்கைகளைச் செலுத்துகின்றனர். விவசாயத்தின் முதல் பலனைத் தர்காவிற்குக் கொடுக்கின்றனர். தர்கா ஜமாத்திடம் ஒப்படைக்கப்படும்போதுதான் நிலைத்த வாழ்வைப் பெறுகிறது.

சமயக்கோட்பாடு சார்ந்த எதிர்ப்புணர்வும் தர்காக்கள் வழிபாட்டினை இழக்கக் காரணமாக அமைகின்றன. கன்னியாகுமரி சின்னமுட்டத்தில் கடற்கரை ஓரமாகத் தர்கா ஒன்று இருந்தது.[45] கபர், அதனைச் சூழ்ந்து மதிலும் இருந்தன. ஆய்வின் துவக்கத்தில் ஆய்வாளரால் இதனைப் பதிவு செய்ய முடிந்தது. ஆண்டு விழாக்களின் போது இதழ்களில் விளம்பரம் செய்வதும் உண்டு. சமயக் கோட்பாட்டின்படியான எதிர்ப்புணர்வின் காரணமாக ஒரு பிரிவினர் இத்தர்காவை இடித்து மாற்றி விட்டனர். தர்கா இருந்த இடம் தெரியாமல்

அழிந்தது. ஆனாலும், ஆண்டு விழாவின் போது ஒரு சிறுபிரிவினர் கற்களை வைத்துப் பாத்திகா ஓதி நேர்ச்சையும் வழங்குகின்றனர்.

இசுலாமிய மக்கள் இடம் பெயர்ந்ததின் காரணமாகத் தர்காக்கள் வாழ்விழந்துள்ளன. மண்டைக்காடு, மேல்மிடாலம் பகுதிகளில் பல இசுலாமியக் குடும்பங்கள் முன்பு வாழ்ந்திருந்தன. இன்று அவர்களில் பெரும்பான்மையோர் இடம் பெயர்ந்து விட்டனர். ஓரிரு குடும்பங்களே உள்ளன. இவ்விரு ஊர்களிலும் உள்ள தர்காக்கள் பெயரளவிலான வழிபாட்டினையே பெறுகின்றன. இக்குடும்பங்களும் இடம்பெயரும் போது இத்தர்காக்கள் முழுமையான வழிபாட்டினை இழக்கக்கூடும்.

நாட்டார் வழிபாட்டிடங்கள் தொடர்ந்து தோற்றத்தினையும் மறைவினையும் எதிர்கொள்கின்றன. இங்கும் தர்கா வழிபாட்டில் நாட்டார் வழிபாட்டுக் கூறினையே இனங்காண முடிகிறது.

## குறிப்புகள்

1. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், ப. 396.
2. மேலது.
3. தகவல் – ரஸாக்; ஊர் – திட்டுவிளை.
4. தகவல் – தங்கப்பன்; ஊர் – விராலிக்காட்டுவிளை.
5. தகவல் – உதுமான் ஸாகிப்; ஊர்– ஆளூர்.
6. தகவல் – காஜா முகைதீன் (தர்காவில் வழிபாடு நடத்த வந்தவர்); ஊர் – கணியாகுளம் தர்கா அருகில்.
7. தகவல் – ரஸாக்; ஊர் – திட்டுவிளை.
8. தகவல் – "மீது; ஊர் – திட்டுவிளை.
9. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், ப. 397.
10. தகவல் – ஹசீமா (நேர்ச்சைச் சடங்கை நிறைவேற்ற வந்தவர்); ஊர் – சேனம்மா தர்காவின் உள்ளே.
11. தகவல் – ஜியால் முஹம்மது (செய்குத் தம்பி பாவலரின் குடும்பத்தினர்); ஊர் – பாவலர் தெரு (இடலாக்குடி).
12. தகவல் – ஹனீபா; ஊர் – இடலாக்குடி.
13. தகவல் – கோபாலன் (சேனம்மா தர்கா முன் டீக்கடை வைத்திருப்பவர்); ஊர் – ஆளூர்.
14. தகவல் – வேலு (தர்காவிற்கருகில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த பெரியவர்); ஊர் – வயலங்கரை தர்கா அருகில்.
15. தகவல் – செய்யது முகம்மது (சேனக்கண்); ஊர் – மண்டைக்காடு.
16. தகவல் – ஹம்சா (சபை செயலாளர்); ஊர் – இரவிபுதூர்க்கடை.
17. தகவல் – ஆஸியா பீவி; ஊர் – அகஸ்தீஸ்வரம்.
18. தகவல் – முஸ்தபா; ஊர் – பஞ்சலிங்கபுரம்.
19. தகவல் – "ாகுல் ஹமீது; ஊர் – குளச்சல்.
20. உணவு விடுதியில் வேலை செய்த தகவலாளி சாகுல் ஹமீது வேலை செய்யும் சக்தியை முற்றிலுமாக இழந்து விட்டார். தர்காவிற்கு வந்து ஓதி ஒருவாரம் தங்கியிருந்து முற்றிலுமாகக் குணம் அடைந்தார்.

21. தகவல் – ஆஸியா பீவி; ஊர் – இனயம்.
22. தகவல் – சமீது; ஊர் – இளங்கடை.
23. தகவல் – முகம்மது முஸ்தபா (நேர்ச்சைக்கு வந்த போது எடுத்தது); ஊர் – மண்டைக்காடு.
24. தகவல் – முருகன் (ஆடு மேய்ப்பவர்); ஊர் – வயலங்கரை தர்கா பக்கம்.
25. தகவல் – உம்மர்; ஊர் – உதய மார்த்தாண்டம்.
26. தகவல் – அத்துசலாம்; ஊர் – மணலி.
27. தகவல் – காதர்; ஊர் – வடக்குச்சூரங்குடி.
28. தகவல் – நாஞ்சில் இப்ராஹீம்; ஊர் – இடலாக்குடி.
29. தகவல் – ஜியால் முஹம்மது; ஊர் – இடலாக்குடி.
30. ஹாமீம் முஸ்தபா, தொ.ஆ. சூஃப்பிகள் தர்காக்கள் சில மாற்று உரையாடல்கள், ப. 11.
31. மேலது, ப. 12.
32. தகவல் – முஸ்தபா (பள்ளியில் தொழுகைக்கு வந்தவர்); ஊர் – வடசேரி.
33. தகவல் – முகர்பான் பீவி; ஊர் – அரிப்புத்தெரு.
34. தகவல் – முஸ்தபா (தொழ வந்தவர்); ஊர் – வடசேரி.
35. தகவல் – பாத்திமா; ஊர் – தக்காத்தெரு.
36. பார்க்க பி.இ.எ. – 6.
37. பார்க்க பி.இ.எ. – 7.
38. பார்க்க பி.இ.எ. – 8.
39. பார்க்க பி.இ.எ. – 9.
40. பார்க்க பி.இ.எ. – 10.
41. பார்க்க பி.இ.எ. – 11.
42. பார்க்க பி.இ.எ. – 12.
43. பார்க்க பி.இ.எ. – 13.
44. பார்க்க பி.இ.எ. – 14.
45. பார்க்க பி.இ.எ. – 15.

## துணை நூல்கள்


1. அப்துல் அஸீஸ், ஏ.எம்., *இஸ்லாம் காட்டும் அரோக்கிய வாழ்வு,* 1980 தம்பி புக் சென்டர், சென்னை.

2. அப்துல் கரீம், கே.எச்., *பிக்ஹின் கலைக்களஞ்சியம்,* (தொ.ஆ) இஸ்லாமிய சட்ட விளக்க நூல்–ஹனபி, 1976 முப்தி, எம்.ஏ. (ப.ஆ), குர் ஆவிய்யா புக் டிப்போ, மதுரை.

3. அப்துற் – றஹீம், *அல்ஹதீஸ் பெருமானாரின் பொன்மொழிப்பேழை,* 1984, மூன்றாம் பகுதி, யுனிவர்ஸல் பிரிண்டிங் ஹவுஸ், சென்னை.

4. ——————————, *இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்,* 1976, தொகுதி ஒன்று, யுனிவர்ஸல் பப்ளி“ர்ஸ் அன்ட் புக் செல்லர்ஸ், சென்னை.

5. ——————————, *இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்,* 1977, தொகுதி இரண்டு, யுனிவர்ஸல் பப்ளி“ர்ஸ் அன்ட் புக் செல்லர்ஸ், சென்னை.

6. ——————————, *இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்,* 1979 தொகுதி மூன்று, யுனிவர்ஸல் பப்ளிசர்ஸ். அன்ட் புக் செல்லர்ஸ், சென்னை.

7. அபு ஹாஷிமா, (V. F. கரிமுல்லாஹ்) *பெட்டகம் – குமரி மாவட்ட முஸ்லீம்களின் வரலாற்றுப் பொக்கிசம்,* 2001, ரஹ்மானிய்யாச் சங்கம், இடலாக்குடி, நாகர்கோவில்.

8. அபூ ஆஸியா, — *அற்புதமா...? சூனியமா...? தந்திரமா...?* 1999 சுகைனா பப்ளிக்கேசன்ஸ், மாதவலாயம், குமரி மாவட்டம்.

9. ——————————, — *இயேசுவின் மார்க்கம் இஸ்லாமா? கிறிஸ்துவமா?* 1999 ஹிரா பப்ளிக்கேசன்ஸ், 105, மெயின்ரோடு, கோட்டாறு, நாகர்கோவில்.

10. அமீர் அலி, என்.ஏ., — *தமிழகக் கல்வித்துறையில் முஸ்லீம்களின் பங்களிப்பு,* அமானி பப்ளிக்கேசன், சென்னை.

11. அன்னகா, மு.செ., — *ஏட்டில் எழுதாக் கவிதைகள்,* 1987, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.

12. அறவாணன், க.ப., — *தமிழர் தம் இலக்கியம், பண்பாடு, அரசியல், கல்வி,* 2000, நூலாசிரியரின் மணிவிழா (60), ஆண்டுச்சிறப்பு வெளியீடு, தமிழ்க் கோட்டம், புதுச்சேரி.

13. அஹ்மதுகான், எம்., — *நபிகள் நாயகம்.* 1984, இஸ்லாமியப் பிரச்சாரக்கழகம், வையாபுரி நகர், திருநெல்வேலி டவுண்.

14. இந்திரன், — *வேரும் விழுதும் மக்கள் பண்பாட்டைப் பேசும் கட்டுரைகள்,* அலைகள் வெளியீடு, சென்னை.

15. இராமசுவாமி, மு., — *தோற்பாவை நிழற் கூத்து,* 1983, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

16. இராமசுவாமி. மு., — *நாட்டுப்புற நிழற்கலைகளில் ஆய்வு முறைகள்,* 1991 மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

17. இராமநாதன், ஆர்., *நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்,* 1982, மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

18. ———————, (ப.ஆ) *நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள்,* 1991, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

19. உமர் பாரூக். எம்.எஸ்., *'இஸ்லாம் வகுத்த இல்லற நெறிகள்'*

1981 தௌஃபீக் புக் டிப்போ, பேகம்பூர், திண்டுக்கல்.

20. கனி, கா. மு. செரீப் *இஸ்லாம் இந்து மதத்திற்கு விரோதமாவதா?* சீதக்காதி நூல் வெளியீட்டகம், 1985, சென்னை.

21. காந்தி, க., *தமிழர் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும்,* 1980, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

22. கிரியா. *தற்காலத்தமிழ் அகராதி,* 1992, ஈஸ்ட்வெஸ்ட் புக் பிரைவேட் லிமிடெட், பெங்களூர்.

23. கிருட்டினன், அ., *வாழ்வியல் களஞ்சியம்,* 1987, தொகுதி இரண்டு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

24. குணசேகரன், கே.ஏ., *நாட்டுப்புற மண்ணும் மக்களும்,* 1988, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

25. குருசாமி சித்தர் & ஞானசேகரன், தே., *தமிழ்ப் பண்பாட்டு வரலாறு,* பாரதியார் பல்கலைக்கழகம், 2000, கோவை.

26. குரூஸ் முத்தையா *மானவீரநாடும் ஆற்றங்கரைப் பள்ளியும்,* அலெக்ஸ், ஏஸ்., சாந்தி பதிப்பகம், 1993, அழகப்பபுரம்.

27. குன்ரேசபிள்ளை, சி., *செந்தமிழ் வளர்த்த செய்கு தம்பி,* 1986, குமரன் பதிப்பகம், சுசீந்திரம்.

28. சக்திவேல், சு., *நாட்டுப்புற இயல் ஆய்வு,* 1983, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

29. சசிவல்லி, *'தமிழர் திருமணம்',* 1987, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையம், சென்னை.

30. சடகோபன், வி. வி., *தென் இந்தியக் கிராமிய நடனங்கள்,* 1960, சாம்ராஜ் பிரசுரம், சென்னை.

31. சண்முக சுந்தரம், சு., *'நாட்டுப்புற இயல்',* 1982, மணிவாசகர் நூலகம், சென்னை.

32. ——————————, *சேரநாடும் செந்தமிழும்,* 1970, கணபதி நகர், சென்னை.

33. சண்முகதாஸ், (ப.ஆ) *'தமிழர் திருமண நடைமுறைகள்',* 1984, யாழ்ப்பாணம், முத்தமிழ் வெளியீட்டுக்கழகம்.

34. சண்முகம், ஆ., *'தமிழர் மரபுகள்',* 'அனன்யா' எண் 1, பி.ஏ.ஒய். நகர், புதுக்கோட்டை சாலை, தஞ்சாவூர்.

35. சந்திரசேகர், இரா., முல்லை, வி. சண்முகம்., *'நாட்டுப்புற வழிபாட்டு மரபுகள்'* பாரதியார் பல்கலைக் கழகம் அஞ்சல், கோயம்புத்தூர்.

36. சரசுவதி, வி., *'நாட்டுப்புறப்பாடல்கள் சமூக ஒப்பாய்வு',* 1982, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

37. சிவசுப்பிரமணியன், ஆ., *'பூப்புச் சடங்குகளும் நம்பிக்கைகளும்',* 1988, ந.வாவின் ஆராய்ச்சி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

38. ——————————, *'மந்திரம் சடங்குகள்',* 1988, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

39. சுகதா, கே., *'கேரளத்தமிழ்ப் பிராமணர்களின் பல்வகைப் பாடல்களும் பண்பாட்டு நிகழ்ச்சிகளும்'*, சில்ப்பம், T.C. 24/757-1, மேட்டுக்கடா, திருவனந்தபுரம்.

40. செந்தீ நடராசன், *'பண்பாட்டுத் தளங்கள் வழியே...'*, 2002, காவிய பாரதி வெளியீட்டகம், நாகர்கோவில்.

41. சைத் R. அலி, *'முஸ்லிம்களின் முதலுதவி பெட்டி'*, சுகைனா பப்ளிக்கேசன்ஸ், நியூ ஸ்டார், மாதவலாயம்.

42. சோமலே., *'தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்'*, 1974, பாரி நிலையம், சென்னை.

43. ஞானசேகரன், தே., *'மந்திரம், சடங்குகள், சமயம்'*, பார்த்திபன் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி.

44. தட்சிணாமூர்த்தி, அ., *'தமிழ் நாகரிகமும் பண்பாடும்'*, 1987, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.

45. தர்மராஜ், வி., *'மனிதனும் சமயமும்'*, 1970, கிறிஸ்தவ இறையியல் நூலோர் குழு, சென்னை.

46. தோப்பில் முஹம்மது மீரான், *'சாய்வு நாற்காலி'*, பூங்கொடி பதிப்பகம், 1995, சென்னை.

47. நாராயணன், க., *'வழி காட்டும் மதங்கள் இஸ்லாம்'*, மணியன் பதிப்பகம், குறிஞ்சிப்பாடி, தெ.ஆ.வ. மாவட்டம்.

48. நீலகண்டபிள்ளை, த., *'கோட்டாறு செட்டியார் வரலாறும் வாழ்வியலும்'*, 1989 லாங் ஸ்டீரீட், பறக்கை.

49. பக்தவச்சல பாரதி, சி., *'பண்பாட்டு மானிடவியல்'*, 1990, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

50. பரமசிவானந்தம், அ.மு., *சமுதாயமும் பண்பாடும்,* 1962, தமிழ்க்கலைப்பதிப்பகம், சென்னை.

51. பரமேஸ்வரி, சி., *'பள்ளர் வாழ்வும் வழிபாடும்'*, 2000, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

52. பஷீர், எம்.எஸ்., *'ஞான இலக்கியங்கள்'*, 1999, திரிசாத் பதிப்பகம், வண்டலூர், சென்னை.

53. பாலசுந்தரன், சி., *'ஈழத்து நாட்டார் பாடல்கள்'*, 1974 தமிழ்ப் பதிப்பகம், சென்னை.

54. பாலசுந்தரம் இளையதம்பி., *'ஈழத்து நாட்டார் பாடல்கள்'*, 1979 (மட்டக் கிளப்பு மாவட்டம்) தமிழ்ப் பதிப்பகம், சென்னை.

55. பெருமாள், அ.கா., *'ஆய்வுக் கட்டுரைகள்'*, 1993 பத்மா புக்ஸ் ஏஜென்சி ஆன்ட் பப்ளிசர்ஸ், 27, அலெக்சந்திரா பிரஸ் ரோடு, நாகர்கோவில்.

56. ————————, ஏ.என்., *'தமிழக நாட்டுப்புறக் கலைகள்'*, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

57. ————————, அ.கா., *'தென்குமரியின் கதை'*, 2003, யுனைடெட் ரைட்டர்ஸ், கோபாலபுரம், சென்னை.

58. மணவாளன், அ.அ., *'இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள்'*,1995, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

59. மீரான் மைதீன், *ரோசம்மா பீவி,* 2001, தினை வெளியீட்டகம்,மீனாட்சிபுரம், நாகர்கோவில்.

60. முகவை மேத்தா, *'தமிழக தர்ஹாக்களும் பள்ளி வாசல்களும்'*, 1996, மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

61. முத்தையா, இ., *'நாட்டுப்புறச் சடங்குகளும் மனித உறவுகளும்'*, 1996, அரசுப் பதிப்பகம், மதுரை.

62. முருகானந்தம், ச., *'மக்கள் வழக்காற்றியல்'*, 1995, தேன்மழைப் பதிப்பகம், சென்னை.

63. முஹம்மது தம்பி, எம்.எஸ்., *'அருளிறங்கும் பருவகாலம்'*, 1997, அன்ஸார் பப்ளி"ர்ஸ், தஞ்சாவூர்.

64. ரப்பானி, எப்.எம்., *'இஸ்லாமியக் கொள்கைகள்'*, 2005, ரப்பானியா பப்ளிசர்ஸ், ஜீவாநகர், திருச்சி.

65. ——————, எப்.எம்., *'கப்ருகளும் ஸியாரத்தும்'*, 2004, ரப்பானியா பப்ளிசர்ஸ், ஜீவாநகர், திருச்சி.

66. ——————, எப்.எம்., *'நல்லோரை முத்தமிடுதல்'*, 2004, ரப்பானியா பப்ளிசர்ஸ், ஜீவாநகர், திருச்சி.

67. ராய், எம்.என்., *'இஸ்லாமிய வரலாற்றுப் பதிப்பகம்'*, 1999, விடியல் பதிப்பகம், உப்பிலி பாளையம், கோவை.

68. ரூத் பெனிக்டிக், *'பண்பாட்டுக் கோலங்கள்'*, 1964, தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம்.

69. இலட்சுமணன் செட்டியார், *'தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்'*, எஸ்.எம்.எல்., பாரி நிலையம், 1975, சென்னை.

70. லூர்து, தே., *நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம்,* 1976, பெருமாள்புரம், திருநெல்வேலி.

71. ——————, (ப.ஆ) *நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள்,* 1981, திருநெல்வேலி.

72. ——————————, *நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு,* 1986, பாரிவேோர் பதிப்பகம், திருநெல்வேலி.

73. ——————————, *நாட்டார் வழக்காற்றியல் கோட்பாடுகள்,* 2000, தூய சவேரியார் (தன்னாட்சி) கல்லூரி, பாளையங்கோட்டை.

74. ஜமால் முஹம்மது, பி.கே., *'முஸ்லீம்களுக்கான சட்டம்',* மணிமேகலை பிரசுரம், தியாகராய நகர், சென்னை.

75. ஜார்ஜ், டி. எச்., *குமரி மாவட்டப் பெண்ணுரிமை போராட்டம்,* 1982, மணிப்பதிப்பகம், சென்னை.

76. ஜாஹிர் நாயக், *'பிரபல மதங்களின் கடவுட் கொள்கை',* 2002, சுகைனா பப்ளிகேசன்ஸ், மாதவலாயம்.

77. ——————————, பி., *'இஸ்லாம் பெண்களின் உரிமையைப் பறிக்கிறதா?',* 2005, நபிலா பதிப்பகம், மண்ணடி, சென்னை.

78. ஜைனுல் ஆபிதீன். பி., *'நபிகள் நாயகம் – பல திருமணங்கள் செய்தது ஏன்?',* 2005, நபிலா பதிப்பகம், மண்ணடி, சென்னை.

79. ஷிஹாப், *'எம்மதமும் சம்மதம் – ஓர் ஆய்வு',* 1987, இசுலாமிய நிறுவனம் ட்ரஸ்ட், இசுலாமிக் ஃபவுண்டேசன் காம்ப்ளக்ஸ். சென்னை.

80. ஹாமீம் முஸ்தபா, எச்., *சூஃபிகள் தர்ஹாக்கள் – சில மாற்று உரையாடல்கள்,* 2003, கீற்று வெளியீட்டகம், அழகியமண்டபம்.

## ENGLISH BOOKS


1. Ben - Amos., Dan., *Folklore in Context Essays,* 1982, South Asian Publishers, New Delhi.
2. Black Burn, Stuart, *Performace as Paradigm:* The Tamil Bow Song Tradition, 1980, University of California, Berkeley.
3. Black Burn, Stuart., *Another Harmony,* and New Essays of the Folklore Ramanujam. A. K., of India", Oxford University Press,1986, Delhi.
4. Bowra, C.M., *Primitive Songs,* 1962, London Wedien field and Nicoloon.
5. Brunu and, Jan Harold, *The Study of American, Folklore,* 1986, University of Utan, New York, London.
6. Chattopadhyaya., Debiprasad., *Lokoyota* ( A Study in Ancient Indian Materialism) 1978, People Publishing House, New Delhi.
7. Choondal, Chummar., *Chrisitan Folklore,* 1969 Kerala Folklore Accademy, Trichur.
8. ................ *Studies in Folklore of Kerala,* 1978, Dept. of Sanskrit and Malayalam, St. Thomas College, Trichur.

9. ................... *Kerala Folk Literature,* 1980, Kerala Folklore Accademy, Trichur.

10. Deigh, Linda., *Folktales and Society,* 1969, Story Telling in a Hungarian Peasant Society, Indiana University Press, Bloomington.

11. Dundes, Alan., *Essays in Folkloristics,* 1978, Meerut: Ved Prakash Vatule.

12. ............... *Interpreting Follelore,* 1980, Indiana University Press, Bloomington.

13. Fetterman, M., *Ethnography Step by Step,* Applied Social Research, Vol.17, Newbury, Paris, London, New Delhi.

14. Finnegan, Ruth., *Oral Traditions and Verbal Art,* 1992 London and New York.

15. Frasca, Richard Armando., *The Theater of the Mahabharata,* 1990, *Terukkuttu Performance in South India,* University of Hawai Press, Honolulu.

16. Goldstein, S. Kenneth., *A Guide for Field Workers Folklore,* 1964, The American Folklore Society, Folklore Asociates Inc, Pennsylvania.

17. Jacab, A. John., *A History of the London Missionary* Society in South India, Nagercoil.

18. Khokar Mohan., *Dancing for Themselves,* 1987, Folk Tribal and Ritual Dance of India, Himalayam Books, New Delhi.

19. Pillai, K.K., *Suchindrum Temple,* 1953, Kalachetra, Madras.

20. Royee, Anya Peterson., *The Anthropology of Dance,* 1980 Indiana Universiyt Press, Bloomington.

21. Silkala, Anna Leena., *Interpreting Oral Narratives,* 1990, Helsinki: FF. Communication.

22. Swamy Vivekananda., *The Complete Works of Swamy* 1964, *Vivekananda, Vol. III,* Calcutta.

23. Yoder, Don., *Folk Life,* 1968, American Folklore, Higginbotham, Madras.

# முடிவுரை

இசுலாம் சமயத்தைத் தழுவிய மக்களை இசுலாமியர் என்ற சொல் குறிக்கின்றது. இசுலாமியர்கள் பல்வேறு மொழி பேசுபவர்களாகவும், பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். இந்தியத் துணைக்கண்டத்துத் தென்கோடி மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தியத் துணைக்கண்டத்தின் அனைத்துச் சமய மக்களும் இணைந்து வாழ்கின்றனர். இனக்குழுக் கூறுகளும், சமயக்கூறுகளும் இவர்கள் பண்பாட்டில் இரண்டறக் கலந்துள்ளன.

கன்னியாகுமரி மாவட்டம் கேரள மாநிலத்திலிருந்து தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதியைப் பிரித்து உருவாக்கப்பட்ட மாவட்டம். நீண்ட மலைத்தொடர்களையும், நீண்ட கடற்கரையையும் கொண்டது. நீர்வள மிக்க இம்மாவட்டம் இயற்கையான செழிப்பினைக் கொண்டது. சங்ககாலத்திலிருந்து 10ஆம் நூற்றாண்டு வரை ஆய் மன்னர்களால் இப்பகுதி ஆளப்பட்டு வந்துள்ளது. ஏழாம் நூற்றாண்டிற்கும், 10ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலக்கட்டத்தில் பாண்டியர்களாலும், 10ஆம் மற்றும் 13ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலக்கட்டத்தில் சோழர்களாலும் படையெடுக்கப்பட்டு உள்ளது. கி.பி 12ஆம் நூற்றாண்டிற்குப் பின் வேணாட்டின் ஒரு பகுதியாக இது மாறியுள்ளது. 1314–க்குப்பின் மருமக்கவழி மன்னர்களால் இப்பகுதி ஆளப்பட்டு வந்துள்ளது. 1729இலிருந்து திருவிதாங்கூர் அரசப் பரம்பரையின் ஆட்சிக்கு உட்பட்டதாக இப்பகுதி இருந்து வந்துள்ளது. இந்தியா விடுதலை பெறுவதுவரை திருவிதாங்கூர் தனி அரசாகவே இருந்தது.

திருவிதாங்கூர் சமூகம் சாதி அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தது. சாதி அடிப்படையிலான பொருளாதாரச் சுரண்டல்களும், அடக்கு முறைகளும், இழிவுபடுத்துதல்களும் மதமாற்றத்திற்கு நேராக மக்களை இட்டுச் சென்றன. பழங்காலம் தொட்டே இசுலாம் மதம் இம்மண்ணில் இருந்ததாக ஊகங்கள் முன்வைக்கப்பட்ட போதும், படையெடுப்பு, சாதி அடக்குமுறை என்பவற்றின் காரணமாகவே முசுலீம் சமயம் இங்கு வளர்ச்சி அடைந்தது. தாழ்த்தப்பட்ட சாதியினர் இசுலாம் சமயத்தைத்

தழுவினர். இசுலாம் சமயத்தின் வளர்ச்சிக்கு இங்கு இருந்த சாதி அமைப்பே காரணமாகியது. குமரி மாவட்டத்தில் ஐந்து விழுக்காட்டினைச் சார்ந்த மக்கள் இசுலாம் சமயத்தைச் சார்ந்தவர்களாக அமைகின்றனர். இம்மக்களின் பாரம்பரியக் கைத்தொழில்கள் நலிவடைந்த நிலையில், சிறுவணிகர்களாகத் தொழில் புரிகின்றனர். மத்தியக் கிழக்கு நாடுகளில் பணிபுரிவது இம்மக்களின் பொருளாதாரக் கலாச்சார வாழ்வில் பெரும் மாறுதல்களைத் தோற்றுவித்துள்ளது. இளம் தலைமுறையினர் கல்வி கற்பதில் ஈடுபாடு உள்ளவர்களாக உள்ளனர். இசுலாமியப் பெண்கள் அவர்களுக்கே உரிய முறையில் ஆடை அணிகலன்களை அணிந்துள்ளனர். பர்தா அணியும் பழக்கமும் பரவி வருகிறது. ஷாபி, ஹனபி என்ற இரு உட்பிரிவுகளில் ஹனபி இனமக்கள் உருதுவைப் புழங்கு மொழியாகக் கொண்டுள்ளனர். ஷாபி இன மக்கள் தமிழ்மொழி அறிவில் சிறந்தவர்களாக உள்ளனர். இசுலாமியச் சமயத்தில் சாதி வேற்றுமை அறவே இல்லை. 'ஜமாத்' என்னும் சமய அமைப்பு இசுலாமிய மக்களின் சமூக வாழ்வைக் கட்டமைக்கிறது.

நாட்டார் நம்பிக்கைகள் பண்பாட்டின் முக்கியக் கூறுகளாக அமைகின்றன. நம்பிக்கைகளைத் தொகுத்து ஆராய்வதின் மூலம் குறிப்பிட்ட நம்பிக்கைகள் புழங்கும் மக்களின் பண்பாட்டினை உணர்ந்து கொள்ள முடியும். குமரி மாவட்ட இசுலாமிய மக்கள் பல்வேறு நம்பிக்கைகளுக்கு நடுவே வாழ்ந்து கொண்டிருப்பதைக் கள ஆய்வு உணர்த்துகிறது. இந்நம்பிக்கைகளைத் தொகுத்து, வகைமை செய்து ஆராய்வதின் மூலம் குமரி மாவட்ட இசுலாமிய மக்களின் சமூக மனதை உணர்ந்து கொள்ள இயலும். சமூக மனம் பகுத்தறிவிற்கு உட்பட்டு நம்பிக்கைகளில் உண்மைகளை இனங்காண்பதில்லை. மாறாக, நம்பிக்கைகளை உணர்வு அடிப்படையில் உண்மைகளாக ஏற்றுக் கொள்கிறது. நம்பிக்கைகளில், அறிவுப்பூர்வமான கூறும், உணர்வுப் பூர்வமான மற்றொரு கூறும் அடங்கியுள்ளன. நம்பிக்கைகள், மூடநம்பிக்கைகள் என்னும் தொடர்கள் ஏற்பினைப் பெறுபவையல்ல. நம்பிக்கைகள் நாகரிக சமூகத்தில் எஞ்சி நிற்கும் பழங்குடி நிலையின் எச்சங்களாகும்.

நம்பிக்கைகளை நாட்டார் வழக்காறுகளாக வரையறை செய்ய இயலும். குமரி மாவட்ட இசுலாமிய மக்களிடையே நிலவும் நம்பிக்கைகளைக் கண்ணேறு கழித்தல், ஆவிகளைக் குறித்த அச்சம், மந்திரம், நம்பிக்கை மருத்துவம், குழந்தைப்பேறு, குழந்தை வளர்ப்பு, தீட்டு, வருவது உணர்த்தும் குறிகள் என வகைமை செய்ய இயலும். கண்ணேறு கழித்தல் இந்தியப் பண்பாட்டில் அதிக அளவில் இடம்

பெறுகிறது. குமரி மாவட்ட இசுலாமியர் வாழ்க்கைவட்டச் சடங்கு ஒவ்வொன்றிலும் இது தவறாது இடம் பெறுகிறது.

கண்ணேறு கழித்தலை, வராது தடுத்தல், வந்த பின் நீக்குதல் என இரண்டாக வகை செய்ய இயலும். கண்ணேறு கழித்தல் குறித்ததான நம்பிக்கையில் குமரி மாவட்ட இசுலாமியர் அனைத்துச் சமூக மக்கள் நம்பிக்கையுடன் உடன்படுகின்றனர். சமயமாற்றம் இதில் எவ்வித மாற்றத்தையும் நிகழ்த்தவில்லை.

ஆவி குறித்ததான நம்பிக்கை சமயத்தின் முன்வடிவமாக அமைகிறது. மனிதன் இறந்த பின், உயிர் ஆவி நிலையை அடைந்து இயங்குகிறது என்பது ஆவியியத்தின் அடிப்படையாகிறது. குமரி மாவட்ட இசுலாமியர்களுக்கிடையே ஆவிகள், பேய்கள் குறித்ததான நம்பிக்கைகள் ஆழமாகப்பதிந்துள்ளன. ஆவிகள், கனவுகள் மூலம் மனிதர்க்குத் தங்கள் இருப்பை உணர்த்தும் என்னும் நம்பிக்கை குமரி மாவட்ட இசுலாமியரிடம் உள்ளது என்பதை ஆய்வுக்களத்திலிருந்து திரட்டப்பட்ட பதிவுகள் உணர்த்துகின்றன. இறந்தவரின் ஆவி நாற்பது நாள்வரை வீட்டிலிருக்கும் என்னும் நம்பிக்கையைக் களஆய்வின் பதிவுகள் உணர்த்துகின்றன. பூமியில் தங்கி விடும் ஆவிகள் மனிதருக்குத் தீங்கிழைக்கும் என்னும் நம்பிக்கையும் உள்ளது. ஆவி குறித்து ஏற்கெனவே இருந்த நம்பிக்கைகளோடு, சமய மாற்றம் காரணமாகப் புது நம்பிக்கைகளும் இணைந்துள்ளன.

மந்திர நம்பிக்கைகள் எதிர்காலத்தை மாற்றி அமைப்பதை நோக்கமாகக் கொள்கின்றன. குறிசார் நம்பிக்கைகள் மந்திர நம்பிக்கைகளாக மாற்றப்படுவதுமுண்டு. செய்வினை குறித்ததான நம்பிக்கைகளைக் குமரி மாவட்ட இசுலாமியர் பிற சமூக மக்களோடு பகிர்ந்து கொண்டுள்ளனர்.

சமயமாற்றத்தின் காரணமாக வழக்காறுகள் திரிபடைந்துள்ளன. அவ்வாறு திரிபடைவதின் மூலம் பரவியுள்ளன. நம்பிக்கை மருத்துவம் சடங்காக நிகழ்த்தப்படுகிறது. நம்பிக்கை மருத்துவம் குறித்ததான நம்பிக்கைகளைக் குமரி மாவட்ட இசுலாமியர் பிற சமூகத்தினருடன் பகிர்ந்து கொள்கின்றனர். சமயமாற்றம் இசுலாமியர்களை இதிலிருந்து வேறுபடுத்தவில்லை. தவறான புரிதலே நம்பிக்கை மருத்துவத்திற்குக் காரணமாக அமைகிறது. குழந்தைப்பேறு, குழந்தை வளர்ப்பு தொடர்பான நம்பிக்கைகள் சமயம் சார்ந்தனவாகவும், சமயம் சாராதனவாகவும் அமைகின்றன. பெரும்பாலும் சமயம் சாராதனவாகவே அமைகின்றன.

மாதவிலக்கு, தீட்டு குறித்ததான நம்பிக்கைகளும் குமரி மாவட்ட இசுலாமியரிடையே உள்ளன. வருவது உணர்த்தும் குறிகளும், கனவும் எதிர்காலத்தை உணர்த்தும் என்பதைப் பிற சமூக மக்களோடு இசுலாமியர்களும் பகிர்ந்து கொண்டுள்ளனர். நம்பிக்கைகள் குறித்த வழக்காறுகள் பண்பாட்டு நிலையில் பிற சமூக மக்களோடு குமரி மாவட்ட இசுலாமிய மக்கள் ஒத்திருப்பதை உணர்த்துகின்றன.

தர்கா வழிபாட்டுமுறை மரபாகத் தொடர்ந்து வருவது. வாய்மொழி வழக்காறுகளில்தான் தர்காக்கள் நிலைகொள்கின்றன. தர்கா தொடர்பான வழக்காறுகளை ஆய்விற்கு உட்படுத்துவதன் மூலம், தர்கா மீதான மக்கள் நம்பிக்கைகளுக்கான காரணத்தை அறிந்துகொள்ள இயலும். தர்கா வழிபாட்டின் தோற்றத்திற்கான காரணங்களையும் இனங்காண முடியும். நாட்டார் வழிபாடு என்னும் சொல், அதற்கே உரிமையான வரையறையைக் கொண்டுள்ளது. ஆய்வுக்களத்தில் ஒவ்வொரு தர்காவும் அதற்கே உரிய வழிபாட்டு முறையினைக் கொண்டுள்ளது. தர்காவில் உறையும் புனிதர் வாழுங்காலத்தில் விரும்பிய பொருளே படைப்புப் பொருளாகத் திகழ்வதை ஆய்வுக்களத்திலிருந்து திரட்டப்பட்ட வழக்காறுகள் உணர்த்துகின்றன.

தர்காவில் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி உள்ளது என்பதில் தர்கா வழிபாட்டுக் குழுவினர் முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளனர். நாட்டார் வழிபாடாக இது தர்காவை இனங்காட்டுகிறது. நாட்டார் வழிபாட்டின் முக்கியக்கூறுகளில் ஒன்றான கணக்குக்கூறுதல் என்ற குறிகூறுதல் தர்கா வழிபாட்டிலும் நிகழ்வது நாட்டார் வழிபாடாக இதனை உறுதிப்படுத்துகிறது. தர்காவில் நிகழ்த்தப்படும் நேர்ச்சைச்சடங்கு தர்கா வழிபாட்டை நாட்டார் வழிபாடாக இனங்காட்டும் மற்றொரு கூறாக அமைகிறது.

தர்காவில் நிறைந்திருக்கும் புனித ஆன்மாவிற்கும் இந்து சமய நாட்டார் தெய்வங்களுக்கும் தொடர்பிருப்பதாக, பெரும்பான்மையாகப் தர்காவின் இந்துப் பக்தர்களிடமும், சிறுபான்மையாக முசுலீம் பக்தர்களிடமும் நம்பிக்கை உள்ளது. நாட்டார் வழிபாடாகத் தர்கா வழிபாட்டை இதுமேலும் உறுதிப்படுத்துகிறது.

தர்காக்கள் நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்துள்ளன. இந்த நம்பிக்கைய்ய உணர்த்தும்விதமாகக் கதைகளும் தர்காக்கள் தொடர்பாக உள்ளன. இக்கதைகளின் அடிப்படையில் குமரி மாவட்டத் தர்காக்களின் தோற்றத்திற்கு ஏழு காரணங்களைச் சுட்ட இயலும். தர்காக்களிலுள்ள

அச்சிடப்பட்ட கையேடுகள், நபிகள் காலத்தில் நிகழ்ந்த புனிதப்போரில் வீழ்ந்தவர்களின் உடலிலுள்ள துண்டுகள் வந்து வீழ்ந்த இடத்தில் கட்டப்பட்ட சமாதிகளாகத் தர்காக்களைக் குறிப்பிடுகின்றன. இத்தகைய கதைகள் மூலம் சமய ஏற்பிற்கான பாதை வகுக்கப்படுகிறது.

கடற்கரை ஓரமாக அமைந்துள்ள தர்காக்களின் தோற்றக்கதைகளாகக் கடலில் வந்த ஜனஸாக்கள் தொடர்பான கதைகள் அமைகின்றன. ஜனஸாக்களாக வந்தடைந்தவர்களின் பெயர்கள், சமயத்தொடர்பு போன்ற இடைவெளிகள் சில கதைகளில் கவனமாக நிரப்பப்பட்டுள்ளன.

அற்புதங்கள் குறித்த கூறு, கதைகளில் பொதுத்தன்மையாக அமைகிறது. இதுவே தர்காக்களைக் காலத்தில் நிலைபெறச்செய்துள்ளது. இனம் தெரியாத காலக்கட்டத்தில் மக்களால் தோற்றுவிக்கப்பட்டு, பின் இடம் தெரியாமல் அழிந்து, ஒருவர் கனவில் வெளிப்பட்டு, இருப்பு உணர்த்தப்பட்டதாகவும் தோற்றக்கதைகள் அமைகின்றன. மக்கள் அற்புதங்களை உணரும்போது, நம்பிக்கைக்கு நேராக வழி நடத்தப்படுகின்றனர். முற்றிலும் எதிர்பாராத சூழலில் சில அறிகுறிகளை நிகழ்த்தி, தானாக வெளிப்பட்டதாகவும் சில தர்காக்களின் தோற்றக்கதைகள் அமைகின்றன.

நாட்டார் சிறுதெய்வங்களுக்கும் இத்தகைய தோற்றக்கதைகள் உள்ளன. சமயம் வேறாயினும் நாட்டார் மரபு ஒன்றாகவே உள்ளது. உண்மை வாழ்வில் வாழ்ந்து மறைந்த, அற்புதங்கள் நிகழ்த்திய சமயப் பெரியோர்களின் சமாதிமீதும் தர்காக்கள் எழுப்பப்பட்டுள்ளன. உயிருடன் வாழ்ந்த காலத்தில் வைத்தியம் அல்லது மாந்திரீகத்தில் இவர்கள் நிகழ்த்திய அற்புதங்கள் மக்கள் நம்பிக்கைக்குக் காரணமாக அமைந்துள்ளன. சமயத்திற்காகத் தங்கள் வாழ்வைச் செலவிட்ட சமய ஞானிகளின் சமாதிகளும் தர்காக்களாக மாற்றப்பட்டுள்ளன. மக்கள் இவர்கள் மீது கொண்ட மரியாதையே தர்கா தோற்றத்திற்குக் காரணமாக அமைகிறது. 'இறக்கவில்லை கண் மறைவாக இருக்கிறார்' என்னும் சொல்லாடல், குறிப்பிட்ட சில தர்காக்களைச் சூஃபி ஞானிகளின் தர்காவாக இனங்காட்டுகின்றன. சூஃபிகள் சித்தர்களுக்கு இணையாக மக்களால் மதிக்கப்படுகின்றனர்.

போர்வீரர்களின் சமாதி மீதான அமைப்புகள், தர்காவிற்கும் சமாதிக்கும் இடைப்பட்டதாக அமைகின்றன. தர்கா கட்டட அமைப்பிற்கு

அடிப்படை உறுப்பாகக் கோரி அமைகிறது. தர்கா ஒரு கோரியினையோ, ஒன்றிற்கு மேற்பட்ட கோரிகளையோ கொண்டிருக்கலாம். கோரிகளற்ற தர்காக்களும் உண்டு. இவை புனிதர்கள் வந்து அமர்ந்து சென்ற இடங்களாக அமைகின்றன. தர்காக்களைப் பெரிய கட்டுமானம் கொண்டவை, சிறிய கட்டுமானம் கொண்டவை என வகை செய்ய இயலும். தர்காவிலுள்ள மரங்கள் தர்கா வழிபாட்டில் பங்கு வகிக்கின்றன. தர்காவிலுள்ள கிணற்று நீர் புனிதநீராகக் கருதப்படுகிறது. தர்காக்கள் அவற்றிற்கே உரிய கொடிகளையும் கொண்டுள்ளன. குடும்ப தர்காக்கள் குடும்ப வழிபாடு என்னும் நிலையிலிருந்து சமூக வழிபாடு என்னும் பரிணாம வளர்ச்சியைத் தர்கா வழிபாடும் அடைந்துள்ளதை உணர்த்துகின்றன. ஒவ்வொரு தர்காவும் அதற்கென்ற மரபு ரீதியிலான வழிபாட்டுமுறையைக் கொண்டுள்ளது. தர்கா வழிபாட்டில் நாட்டார் வழிபாட்டுக் கூறுகளை இவை உறுதிப்படுத்துகின்றன.

# பின்னிணைப்பு


## மாவட்ட வரைபடமும் இஸ்லாமியர் குடியிருப்புகளும்




## கன்னியாகுமரி மாவட்ட வரைபடத்தில் இசுலாமியர்கள் காணப்படும் இடங்கள்

1. அழகியமண்டபம்
2. ஆளூர்
3. இடலாக்குடி
4. இனயம்
5. இரவிபுதூர்க்கடை
6. ஈத்தாமொழி
7. கடையாலுமூடு
8. களியக்காவிளை
9. கன்னியாகுமரி
10. குலசேகரம்
11. சாமியார்மடம்
12. தக்கலை
13. திட்டுவிளை
14. திருவிதாங்கோடு
15. தெங்கம்புதூர்
16. தெற்கு சூரங்குடி
17. தேங்காப்பட்டணம்
18. நாகர்கோவில்
19. பஞ்சலிங்கபுரம்
20. பள்ளியாடி
21. புத்தன்துறை
22. பெருவிளை
23. மணலி
24. மணலிக்கரை
25. மணவாளக்குறிச்சி
26. மந்தாரம்புதூர்
27. மாதவலாயம்
28. மார்த்தாண்டம்
29. மேக்காமண்டபம்
30. மேல்மிடாலம்
31. வடக்குச்சூரங்குடி
32. வேர்க்கிளம்பி

# தர்கா புகைப்படங்கள்



ஒரு கோரி உடைய தர்கா




ஒன்றிற்கு மேற்பட்ட கோரி உடைய தர்கா



கோரி இல்லாத தர்கா



பீரப்பா தர்காவின் முகப்புத் தோற்றம்




சேனம்மா தர்காவின் வெளிப்புறத் தோற்றம்




தர்காவில் உள்ள மரம்



தீர்த்த நீரில் சேர்க்கும் பூ



தர்காவும், கொடியும்



யானை ஊர்வலம்

சின்ன முட்டம்

# தர்காவில் கந்தூரி விழா

## கடலில் குளித்து முஸ்லிம்கள் நேர்ச்சை

கன்னியாகுமரி, மே. 1—
சின்னமுட்டம் ஷேக்முகமது ஒலியுல்லா தர்காவில் நேற்று கந்தூரி விழா நடந்தது. இதில் திரளான முஸ்லிம்கள் கலந்துகொண்டு கடலில் குளித்து நேர்ச்சை செலுத்தினார்கள்.

### கந்தூரி விழா

கன்னியாகுமரி அருகே உள்ளது சின்னமுட்டம். இங்கு ஷேக்முகமது ஒலியுல்லா தர்கா உள்ளது.

இந்த தர்காவில் ஒவ்வொரு வருடமும் முஸ்லிம்களின் ஸபர் மாதம் கடைசி புதன்கிழமை கந்தூரி விழா கொண்டாடப்படும்.

அதன்படி இந்த ஆண்டு ஸபர் மாதம் கடைசி புதன்கிழமை

பெற்றது.

### நேர்ச்சை வழங்குதல்

இதையொட்டி மாலையில் மார்க்க அறிஞர்களின் உரையும், தொடர்ந்து நேர்ச்சை வழங்குதலும் நடந்தது.

இதில் கன்னியாகுமரி, மந்தாரம்புதூர், கோட்டையடிபுதூர், இடலாக்குடி, பஞ்சலிங்கபுரம், கோட்டார், வடசேரி, மாதவலாயம், திட்டுவிளை, தக்கலை, திருவிதாங்கோடு, இரவிபுதூர் கடை, குளச்சல் போன்ற பகுதிகளில் இருந்து முஸ்லிம்கள் திரளாக கலந்துகொண்டனர்.

விழாவை முன்னிட்டு முஸ்லிம்கள் கடலில் குளித்து தொழுகை நடத்தினார்கள்.

இதற்கான ஏற்பாடுகளை விழாக்குழுவினர் செய்து

அழிந்து போன தர்கா குறித்த செய்தி

# குறி கேட்கும் நிகழ்வு

**விராலிக்காட்டுவிளை "வர்தாரி பெத்த அப்பா" தர்கா**

சட்டம்பிள்ளை, பவர் கண்ணு, அப்பா கண்ணு ஆகியன வர்தாரி பெத்த அப்பாவின் செல்லப்பெயர்களாக அமைகின்றன.

தர்காவிலிருந்து அரை கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பால்தான் குறி சொல்பவரின் வீடு அமைந்திருக்கிறது. தீட்டு இல்லாமல் சுத்தமாக இருக்கும் நாட்களில் குறி கூறுவர். இத்தர்காவில் 60, 65 வயது மதிக்கத்தக்க ஒரு முதிய பெண்மணி குறி கூறுகிறார். குறி கூறுவதற்கு முன்னால் உடல் தூய்மை செய்வார். பின் குறி கேட்பவர் கொண்டு வந்திருக்கும் பொருள்களை (திரி, பூ, எண்ணெய்) ஒலியுல்லாவின் முன் படைத்துவிட்டு, திரியை கொழுத்திய பின்னர் கபரின் முன்னால் உட்காருவார். அவரின் பக்கத்தில் குறி கேட்பவர் அமர வேண்டும். அப்போது குறி கூறுபவர் கையில் ஜெப மாலையை வைத்துக் கொண்டு,

"அல்லாவின் நாமம் கொண்டும் ஒலியுல்லாவின் புகழ் கொண்டும் பாத்திகா ஓதி ஸபுகாய் துவங்குகிறேன். தகாத்தனை சதிமான மறையரு ஓதாய் உமது புகழ் வாயால் துவங்குகிறேன்" என்று கூறி மகானிடம் வேண்டுதல் செய்வார். அப்போது குறி சொல்பவரின் கை தோள்பட்டையில் நடுக்கம் தோற்றம் கொள்ளும். பின்னர் ஜெப மாலையை உருட்டி துவா செய்தவுடன் குறி கூறுவார். குறி கூறும்போது அவர் உடல் நடுக்கம் கொள்ளும்.

"இந்த மகானோட அருளால இன்னையோட ஒங்க கஷ்டம் தீந்திச்சு. ஒங்களுக்க வூட்டுக்க அந்தாப்புல இருக்குதவங்க கண்ணுபட்டிச்சு. அதனால வூட்டுல ஐசுவரியம் கொறஞ்சிச்சு வூட்ட வுட்டுட்டு வெளிய போம்ப மகான நினைச்சிட்டு போணும். இனி ஏழு வாரம் வந்தா முழுசா மகான் தீத்து வைப்பாரு. ராத்திரி பேடியா இருந்தா வூட்ட சுத்தி தண்ணிய தெளிச்சுக்குங்க" என்று கூறுகிறார். குறி சொல்லி முடிந்தவுடன் சோர்வடைந்து காணப்பட்டாள். உடனே அங்கிருந்த தண்ணீரை எடுத்துக் குடித்தார். பின் குறி கேட்க வந்தவருக்கு அறிவுரை கூறினாள். காணிக்கையைப் போட்டவுடன் ஒரு குப்பியில் தண்ணீரும் எண்ணெயையும் மந்திரித்துக் கொடுத்தாள். குறி கேட்பவர் நம்பிக்கையுடன் எழுந்து செல்கிறார்.

# ஓதி கட்டும் நிகழ்வு

## வடசேரி "மஹான் துல்ஹாஷா ஒலியுல்லா"

வடசேரி பள்ளி வாசலின் பின்புறம் இது அமைந்துள்ளது. பள்ளி வாசலில் தொழுகை முடிந்த பின்பு ஓதிக்கட்டுவது நடைபெறும். இங்கு ஓதிக்கட்டுவதற்கு, வந்திருப்பவர்கள் வரிசையாக நிற்பர். முதலில் நிற்பவர் அவர் முன்னால் வந்து இருப்பார். உடனே இவர் வாங்கி வந்திருக்கும் பூ, திரி, கறுப்பு நூல் இவற்றை அவர் கையில் கொடுப்பர். உடனே ஓதி கட்டுபவர் பூவை வைத்து விட்டு, ஏதோ ஒரு மந்திரம் கூறி கூறி நூலில் முடிச்சுகள் இடுவார். கடைசியில் நூலை இடுப்பிலோ, கையிலோ கட்டுவார். கட்டின பின்னர் மூன்று முறை தண்ணீரை கையில் எடுத்து முகத்தில் அடித்து விட்டு மூன்று முறை நெற்றியில் ஊதுவார். காணிக்கையை அவர் கொடுத்துவிட்டு ஓதி கட்ட வந்தவர் நம்பிக்கையுடன் திரும்பி செல்வார்.

## தர்கா பட்டியல்

| | தர்காவின் பெயர் | இடம் | படைப்புப் பொருள் |
|---|---|---|---|
| 1. | அப்துல் முத்தரிவு ஒலியுல்லா | மணலி | – |
| 2. | அப்துல் ரகுமான் ஷாகிப் ஒலியுல்லா | திருவிதாங்கோடு | திரி |
| 3. | அலியார்ஷா ஒலியுல்லா | கோட்டாறு | |
| | | அரிப்புத்தெரு | பிச்சிப்பூ, திரி |
| 4. | அஷ்ஷெய்கு அப்துல் ரஹ்மான் ஸாகிப் ஒலியுல்லா | கோட்டாறு | பிச்சிப்பூ, திரி |
| 5. | அஸ்ரத் ஞானியர் ஒலியுல்லா | இடலாக்குடி | பிச்சிப்பூ, திரி |
| 6. | அஸ்ரத் பாவாகாசிம் ஒலியுல்லா | இடலாக்குடி | பால்குடம் |
| 7. | இசுதீன் ஒலியுல்லா | இளங்கடை | பிச்சிப்பூ, பழம், திரி |
| 8. | உதுமான் லெப்பை மாஷாயிக் ஒலியுல்லா | திட்டுவிளை | பழம் |
| 9. | உதுமான் ஷெய்கு ஒலியுல்லா (ஒட்ட மன்னன்) | இளங்கடை | பழம், பூ, திரி |
| 10. | கபுறடி ஷெய்கு ஒலியுல்லா | புத்தன்பண்டக சாலைப்புரம் | – |
| 11. | கலந்தர் மஸ்தான் ஷாகுல் ஒலியுல்லா<br>ஹமீது நாயகம் பட்டாணி ஸாகிப் ஒலியுல்லா | மணவாளக் குறிச்சி | – |
| 12. | காதர்பீபி ரலியுல்லா | மண்டைக்காடு | – |
| 13. | குன்னானி மன்னான ஷெய்கு ஒலியுல்லா | இளங்கடை | – |

| | | | |
|---|---|---|---|
| 14. | கொச்சு பாபா ஒலியுல்லா | தக்கலை | – |
| 15. | கொடிமூட்டுத்தங்ஙள் அபூபக்கர் ஒலியுல்லா | மேக்காமண்டபம் | – |
| 16. | கோஜ் முகம்மது ஒலியுல்லா | ஆளூர் | எண்ணெய், பூ, திரி |
| 17. | சிராஜ்தீன் அவ்லியா ஒலியுல்லா (பெண்கள் வரமாட்டார்கள்) | ஸ்காட்நகர் | – |
| 18. | சுலைமான் ஸாஹிப் ஒலியுல்லா | ஆளூர் | நெல் |
| 19. | ஞானம் பக்கீர் ஒலியுல்லா | ஆளூர் | – |
| 20. | ஞானமாமேதை ஷெய்கு பீர்முகம்மது சாகிப் ஒலியுல்லா (பீரப்பா தர்கா) | தக்கலை | பழம், பூந்தி |
| 21. | ஞானியர் அப்பா ஷெய்கு முஹ்யித்தீன் மலுக்கு முதலியார் ஒலியுல்லா | கோட்டாறு | – |
| 22. | ஞானியர் ஷாகிப் ஒலியுல்லா | திருவிதாங்கோடு | திரி, பூ |
| 23. | துல்ஹாஷா ஒலியுல்லா | வடசேரி | திரி |
| 24. | தைக்காயு சாகிப் ஒலியுல்லா | கடையாலுமூர் | பூந்தி |
| 25. | நங்ஙம்மா ரலியுல்லா | நம்பாளி | திரி, பூ |
| 26. | பாபா ஸாஹித் ஒலியுல்லா | தேங்காப்பட்டணம் | – |
| 27. | பால்பிள்ளை ஒலியுல்லா | திருவிதாங்கோடு | பால் |

| | | |
|---|---|---|
| 28. பாவா காஸிம் ஒலியுல்லா (ஆத்தங்கர ஒலியுல்லா) | கோட்டாறு | திரி, பூ, பழம் |
| 29. பீர்ஷேக் மீரான் முஹைதீன் அஸன் ஒலியுல்லா | மிடாலம் (உதய மார்த்தாண்டம்) | திரி |
| 30. பீவி பாத்திமா நாச்சியார் ஒலியுல்லா | இளங்கடை | – |
| 31. பீர்ஹாதாத் தர்கா (9 கபர்) | ஆளூர் | திரி, பூ |
| 32. மகான் வாகையடி பக்கீர்பாபா ஒலியுல்லா | திட்டுவிளை | பாளையன் கோட்டம் பழம் |
| 33. மகான் ஷெய்கு நூர்த்தீன் | திருவிதாங்கோடு (அஞ்சுவண்ணம்) | திரி |
| 34. மகான் செய்யது ஷாஹா என்ற காட்டு பாவா ஸாஹிப் ஒலியுல்லா | குமாரகோவில் | – |
| 35. மாலிக் முகம்மது ஒலியுல்லா | இனயம் | – |
| 36. மாலிக் முகம்மது ஒலியுல்லா | திருவிதாங்கோடு | – |
| 37. முத்துபீபி தாய் ரலியுல்லா (தளத்துப்பள்ளி தர்கா, சமாதி இல்லாத தர்கா) | இரவிப்புதூர்கடை | திரி, பூ |
| 38. முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி ஒலியுல்லா | மாதவலாயம் | திரி, பூ |
| 39. முஹ்யித்தீன் அப்துல்காதர் ஜெய்லானி ஒலியுல்லா | சௌமியாபுரம் | – |

| | | |
|---|---|---|
| 40. முஹ்யித்தீர் அப்துல் காதர் ஜீலானி ஒலியுல்லா | திங்கள்நகர் | – |
| 41. முஹம்மது நாகூர் பிச்சை ஒலியுல்லா | வெள்ளமடம் | திரி |
| 42. யானையடி வளாகத்துப் பள்ளி அலிமா ரலியுல்லா | மணலி | – |
| 43. லாஹம் ஸாஹிப் ஒலியுல்லா | தேங்காப்பட்டணம் | – |
| 44. வர்தாரிபெத்த அப்பா ஒலியுல்லா | விராலிக்காட்டு விளை | வறுத்த மாவு |
| 45. வாலை மஸ்தான் ஸாஹிப் ஒலியுல்லா | தேங்காப்பட்டணம் | – |
| 46. சாகுல் ஹமீது நாயகம் ஒலியுல்லா | மணலிக்கரை | – |
| 47. சால் ஹமீது ஒலியுல்லா | பஞ்சலிங்கபுரம் | – |
| 48. செய்கு அலி பாபாக்கீதங்ஙள் ஒலியுல்லா | குளச்சல் | – |
| 49. செய்கு உதுமான் லெப்பை மாசாயிக் ஒலியுல்லா (செல்லப்பெயர்: அப்பச்சி அப்பா) | திட்டுவிளை | பாளையன் கோட்டான் பழம் |
| 50. செய்கு தர்வேல் மீரான் ஒலியுல்லா (செல்லப்பெயர்: பக்கீர் சாகிபு) | வடக்கு சூரங்குடி | – |
| 51. செய்கு வாப்பு ஹிசேன் ஒலியுல்லா | குளச்சல் | திரி, பூ, எண்ணெய் |

| | | |
|---|---|---|
| 52. செயிராக் புலவர் ஒலியுல்லா | திருவிதாங்கோடு | திரி, பூ |
| 53. சேக் அப்துல் காதர் ஒலியுல்லா<br>சேக் அப்துல் ரஹ்மான் | மிடாலம் | திரி, பூ |
| 54. சேக் அப்பா ஸாஹிப் ஒலியுல்லா | ஆளூர் | – |
| 55. சேக் சுலைமான் ஒலியுல்லா | அகஸ்தீஸ்வரம் | வாழை குலை,<br>உடனடியாக<br>இடிக்கப்பட்ட மாவு<br>கொண்டு வந்தால்<br>நினைத்தது நடக்கும் |
| 56. சேக் தாவீது ஒலியுல்லா | வள்ளவிளை | – |
| 57. சேக் நூர்தீன் ஒலியுல்லா | திருவிதாங்கோடு | பூ |
| 58. சேக் நூருதீன் முஸ்லியார்<br>(அழிந்து போனது) | இளங்கடை | – |
| 59. சேக் முகம்மது ஒலியுல்லா<br>(அழிந்து போனது) | சின்னமுட்டம் | – |
| 60. சக்னா மிரான் கன்னிமஸ்தான் ஒலியுல்லா<br>சேக்னா யூசுப் மஸ்தான் ஒலியுல்லா | மணலி | திரி, பூ |
| 61. சேக் ஜாண் முஹம்மது பஷீர் ஒலியுல்லா | பார்வதிபுரம் | பூந்தி |

| | | |
|---|---|---|
| 62. ஹவுரடி அப்பா ஒலியுல்லா ஹவுரடி நாயக் தர்கா | மண்டைக்காடு | பூந்தி |
| 63. ஹஜ்ஜாத் இப்னு யூசுப் ஒலியுல்லா | இளங்கடை | – |
| 64. ஹஸ்ரத் பாசில்சா ஒலியுல்லா | பொன்னரிப்புத் தெரு | – |
| 65. ஹஸ்ரத் செய்யிதுனா பாவா காஸிம் ஒலியுல்லா | இளங்கடை | – |
| 66. ஹானாஸா ஒலியுல்லா புலியூர்க்குறிச்சி | சேவல் கோழி | பிரியாணி |
| 67. ஸைனப் நாயகி ரலியுல்லா சேனம்மா தர்கா | ஆளூர் | பூ, பூந்தி |

# தர்கா பாடல்கள்

## ஸைனப் நாயகி ரலியுல்லா (சேனம்மா தர்கா)

தென்பாண்டிச் சீமையிலே பிறந்த மகளே நீ
ஒன்பது வயதடைந்து தந்தையில்லாத மகளே நீ
தாயோடு துவாச் செய்ய வந்தாயோ
கொல்லம் மாவடிலேர்ந்து வந்து
ஆளூருக்கு மேக்க வந்தாயோ
<u>சேனாண்டனோடு</u> நட்புறவாடி
உன் தாயோடு கூடாடி
கிண்ணியில சந்தனமும்
எலட்டில வெத்திலயும்
அரச்சிடுவ சேனாத்தாய்
லாஜிலாஹா இல்லல்லாஹ்
சேனாத்தாய் லாயில்லாஹா இல்லல்லாஹ்
முத்தி இல்லா தாயே இல்லல்லாஹ்
பிஸ்மில்லா தூவர்க்கம் செய்து
பெரியோர்தனைப் புகழ்ந்து
உன் கருணையால் பசியாறினோம்
மக்களின் பிணி நீங்க
தனித்திருந்து விழித்திருந்து
தூவாச் செய்ய வந்தாயோ!

<u>சேனாண்டன்:</u>

தர்காவின் அருகாமையில் இருக்கும் சுடலைமாடன் கோயில்.
தகவல்: சேனம்மா பீவி (சேனம்மா தர்கா பணிவிடைக்காரி)
ஊர் : ஆளூர்

## ஸைனப் நாயகி ரலியுல்லா (சேனம்மா தர்கா)

ஆளூருக்கு மேக்கே
அங்கிருக்கும் கொடுப்பக்குழி
கிண்ணியில சந்தனமும்
கிளிமூக்கு வெத்திலேயும்
அள்ளி அள்ளி தான் கொடுப்பா
அழகான சேனாம்மா

தகவல் : சந்திரன்
ஊர் : ஆளூர்

## கோஜ் முஹம்மது ஒலியுல்லா

கோஜ் முஹம்மது வில்லாஹி ரப்பில் ஆலமின்
செய்குனா கோஜ் துல்காசீத்ள
மலபாரின் வந்த மஹானே
துல்ஹஜ்ஜில் பிறையில் மௌத்தான நாயகனே
ஆளூரில் அடங்கியிருக்கும் நின் கிருபையை
எங்களுக்கருள்வாயாக!

செய்குனா கோஜ் முஹம்மதே
உன் நாமத்தைச் சொல்லி என் நாவை அன்பளிக்கிறேன்
என் நேர் வழிகாட்டியே
புகழாரம் சூட்ட வந்துள்ளோம்
எங்களுக்கருள்வாயாக!

யா அல்லாஹ்! கோஜ் முகமதே
நீங்கள் நேர் வழிகாட்டினீர்
செய்குனாகிய உமக்கு அல்லாஹ்வின்
அருளைப் பெற்று
எங்களுக்கருள்வாயாக!

செய்குனா கோஜ் முஹம்மதே
அல்லாவின் கருணை நிறைந்த எங்கள் நாயகனே
எங்கள் கஷ்டங்களை நீக்கி
எங்கள் நோய்களைப் போக்கி
எங்களுக்கருள்வாயாக!

தகவல் : பேகம் ரெஷி (நேர்ச்சை செலுத்த வந்தவர்)
ஊர் : ஆளூர்

## கொடிமூட்டுத்தங்ஙள் அபூபக்கர் ஒலியுல்லா

ஆலமெலாம் வந்தாளும் வல்லவன்
இஸ்லாத்தை பரப்ப வந்த தலைவன்
மேக்கூரில் வந்து எங்கள்
துயரைப் போக்கிய அபூபக்கரே!

நீயிருக்கும் இடமெல்லாம்
வானலோகர் உம்திரு வணங்கி
தேக மீதுத் திருவடிக் கொண்டு
மகிழ்வார் அபூபக்கரே!

தென்காசி ஊரிலேந்து வந்து
எங்களுக்கு திறவுகோலாய் வந்தாயோ!
'நீக்கம்பு' நோயை மாற்றிடுவாய்
எங்கள் அபூபக்கரே!

வட்டவடிவில் அமைந்த உம் சந்நிதியில்
நோயை நீக்கி அருள்செய்தவா
உம் அருளை நாங்கள் உணர்ந்திட
அருள் செய்வீர் அபூபக்கரே!

தகவல் : நசீமா பாத்திமா
ஊர் : மேக்காமண்டபம்

## பாபா ஹாஜித் ஒலியுல்லா (ஆத்தங்கரை ஒலியுல்லா)

"ஏலய்யா ஏலேலய்யா
ஆத்துப்பள்ளி தெரியுதய்யா
ஊத்தித்தண்ணி ஓடுதய்யா
ஏலய்யா ஏலேலய்யா
எத்தியாச்சு கரய வந்து
எத்தனமா எறங்கிக்கய்யா
ஏலய்யா ஏலேலய்யா"

தகவல் : அந்தோணி
ஊர் : தேங்காப்பட்டணம்

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
# சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும் | 60.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழி ஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| திருக்குறள் உரைச் சிந்தனைகள் | 50.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |
| மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் | 35.00 |
| A Course in Modern Standard Tamil | 65.00 |
| கம்பன் களஞ்சியம் | 280.00 |
| மொழியியல் நோக்கில் தொல்காப்பிய சங்க இலக்கிய ஆய்வுகள் | 40.00 |
| தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை | 250.00 |
| தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி | 225.00 |
| அரங்கேற்று காதை ஆராய்ச்சி | 140.00 |
| பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள் | 45.00 |
| இந்தியச் சூழலில்மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் கண்ணோட்டம் | 60.00 |
| பழந்தமிழ் அறிவியல் | 45.00 |
| குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம் | 70.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-1 | 100.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-2 | 100.00 |
| நீறணி பவளக் குன்றம் (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்) | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்மூலம்-ஒருசமூகவியல் பார்வை | 30.00 |
| இந்தி நாடகப் பனுவல் (ஆடி மாதத்தில் ஒரு நாள்) | 50.00 |
| திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையாரின் பங்கு | 40.00 |
| பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 70.00 |
| காரைக்கால் அம்மையார் பாடல்கள் - ஓர் ஆய்வு | 40.00 |
| சொல்லாடல்கள் | 75.00 |

Pub No. 660

**குமரி மாவட்ட இசுலாமியர் நம்பிக்கைகளும் தர்காக்களும் 55.00**